# 8

# நிதியியல்துறை செயலாற்றமும் முறைமை உறுதித்தன்மையும்

## 8.1 பொதுநோக்கு

**முக்கிய முன்னேற்றம்கண்ட பொருளாதாரங்களில் நிச்சயமற்ற தன்மை மற்றும் உலகளாவிய நிதியியல் சந்தைகளில் பதற்றம் என்பவற்றிற்கிடையிலும் நிதியியல் துறையானது மீளெழுச்சி மிக்கதாகவும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு நிறைந்ததாகவும் காணப்பட்டிருந்தது.** உலகளாவிய பொருளாதார நடவடிக்கைகளில் காணப்பட்ட மெதுவான மீட்சியின் காரணமாக ஏற்பட்ட குறைவடைந்த வெளிநாட்டுக் கேள்வி வர்த்தகம் தொடர்பான நடவடிக்கையினைக் குறிப்பாக ஆண்டின் தொடக்கப் பகுதியில் எதிர்மறையாகப் பாதித்தமை, உயர்ந்த மட்டத்தில் காணப்பட்ட பன்னாட்டு தங்க விலைகள் 2012 ஒத்தோபரில் முறையாக வீழ்ச்சியடைந்தமை, 2012இல் பின்பற்றப்பட்ட இறுக்கமான நாணயக் கொள்கையின் காலம் கடந்த தாக்கம் என்பன வங்கிகள் மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் இரண்டிலுமிருந்தான கொடுகடனுக்கான கேள்வியை தளர்வுறச் செய்திருந்தன. மெதுவான கொடுகடன் வளர்ச்சியின் விளைவாக முதலீடுகள் அதிகரித்த அதேவேளையில் செயற்படாத அடகுபிடித்தல் முற்பணங்களின் முக்கிய காரணமாக செயற்படாக் கடன்கள் உயர்வடைந்திருந்தன. இதன் விளைவாக, தேறிய வட்டி அளவுகளும் வீழ்ச்சியடைந்தன. எனினும், கடன் வழங்கல் சொத்துப்பட்டியல் பன்முகப்படுத்தப்பட்டிருந்த வேளையில் மூலதன மற்றும் திரவத்தன்மை தாங்கிருப்புக்கள் வலுவானவையாகவும் உத்தரவாதம் கொண்டனவாகவும் காணப்பட்டமை, இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகள் ஆற்றல் வாய்ந்தனவாகத் தொடர்ந்து விளங்கியமை, வங்கித்தொழில் துறை அதேபோன்று நிதி மற்றும் குத்தகைக் கம்பனிகள் துறை தொடர்ந்தும் ஆற்றல் வாய்ந்தனவாக இருக்கக்கூடியதன்மை காணப்பட்டமை என்பன பொருளாதாரத்தின் தொடர்ச்சியான வளர்ச்சிக்கு தூண்டுதல் தரும் சூழ்நிலையொன்றினை வழங்கின. வங்கிகள், நிதிக் கம்பனிகள், குத்தகைக் கம்பனிகள் மற்றும் காப்புறுதிக் கம்பனிகள் என்பனவற்றின் சொத்துக்கள் அதிகரித்தன. அவற்றின் கிளை வலையமைப்பு விரிவடைந்த வேளையில் பெரும்பாலான புதிய கிளைகள் மேல் மாகாணத்திற்கு வெளியே நிறுவப்பட்டமையானது நிதியியல் பணிகளை பெற்றுக் கொள்வதற்கான வழிவகைகளை அதிகரித்ததுடன் அனைத்தையுமுள்ளடக்கிய வளர்ச்சியையும் மேம்படுத்தியது.

**2013இன் பெரும்பாலான காலப்பகுதியில் நிதியியல் சந்தைகள் திரவத்தன்மை கொண்டனவாக விளங்கியதுடன் மத்திய வங்கியின் நாணயக் கொள்கை நிலை தளர்த்தப்பட்டமைக்கு பதிலிறுத்தும் விதத்தில், சந்தை வட்டி வீதங்கள் படிப்படியாக கீழ் நோக்கிச் சீராக்கப்பட்டிருந்தன.** மத்திய வங்கியின் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கையுடன் சேர்ந்து முன்மதியுடைய படுகடன் முகாமைத்துவ உபாயங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டமையின் காரணமாக இவ்வாண்டுப் பகுதியில் அரச பிணையங்கள் சந்தையின் விளைவு வீதங்கள் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தன. அரச

பிணையங்களுக்கான அடிப்படை அளவுக் குறியீட்டு விளைவு வளையி கீழ் நோக்கிப் பெயர்ந்தமையுடன் இசைந்து செல்லும் விதத்தில் நிதியியல் நிறுவனங்களின் கடன் வழங்கல் வீதங்களானவை தொடர்ந்து வீழ்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஐக்கிய அமெரிக்காவில் நாணயத் தூண்டலை படிப்படியாக புறக்கீடு செய்வதற்கான விருப்பத்தினை பெடரல் றிசேர்வ் சபை அறிவித்ததைத் தொடர்ந்து, உலகளாவிய வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் குழப்பநிலைமை காணப்பட்ட போதும் இலங்கை ரூபாவின் பெறுமதித்தேய்வு சிறிதளவிலேயே காணப்பட்டது. உள்நாட்டு வங்கித்தொழில் நிறுவனங்களும் கரைகடந்த வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் காணப்பட்ட தளம்பல் நிலைமைகளினால் சிறிதளவு பாதிக்கப்பட்டன. நிறுவன ரீதியான முதலீட்டாளர்கள் உட்பட வெளிநாட்டு முதலீட்டாளர்களின் அதிகரித்த பங்கேற்புடன் பங்குரிமைச் சந்தைச் செயற்பாடுகளில் முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது.

**ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை அமைப்பு மேலும் வலுப்படுத்தப்பட்டதுடன் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டிற்கு ஏற்படக்கூடிய சாத்தியமான இடர்நேர்வுகள் சரியான நேரத்தில் கட்டுப்படுத்தப்பட்டமையினை உறுதிப்படுத்தும் விதத்தில் பன்னாட்டு நியமங்கள் மற்றும் சிறந்த நடவடிக்கை முறைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் வெளிப்படுத்துகைத் தேவைப்பாடுகள் கூடியளவிற்குக் கடுமையாக்கப்பட்டன.** வங்கிகளின் மூலதனப் போதுமையினை மதிப்பிடுவதற்கும் அனைத்து இடர்நேர்வுகளையும் ஈடுசெய்யும் விதத்தில் வங்கிகள் போதுமான மூலதனத்தினைக் கொண்டுள்ளனவா என்பதனை தீர்மானிக்கின்ற நோக்குடன் பாசல் II இன் தூண் 2 இன் கீழ் மேற்பார்வை மீளாய்வு செயன்முறைகள் தொடர்பில் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன. 2012 இலிருந்து பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்கள் பின்பற்றப்பட்டமையினைத் தொடர்ந்து, சந்தை நம்பிக்கை மற்றும் ஒழிவுமறைவற்ற வெளிப்படையான தன்மையினை மேம்படுத்தும் நிதியியல் அறிக்கையிடல் மற்றும் வெளிப்படுத்துகை நியமங்கள் ஆண்டுக் கணக்குகளைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தலுக்காக புதிய படிவமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டதனூடாக மேலும் வலுப்படுத்தப்பட்டிருக்கின்றன. வங்கிகள் கணக்காய்வு செய்யப்பட்ட ஆண்டு நிதியியல் கூற்றுக்களையும் தரமான வெளிப் படுத்துகைகளையும் அவற்றின் இணையத்தளத்தில் வெளியிடுவது கட்டாயமாக்கப்பட்டிருக்கிறது. நிதிக் கம்பனிகள் மற்றும் குத்தகைக் கம்பனிகளுடன் தொடர்பான ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைக் கட்டமைப்பு உள்ளக இடர்நேர்வு தரமிடல் மாதிரியொன்றினை உருவாக்கியதன் மூலம் வலுப்படுத்தப்பட்டதுடன், சரியான நேரத்தில் பொருத்தமான கொள்கை வழிமுறைகள் மேற்கொள்வதனை இயலச் செய்வதற்காக இடர்நேர்வுகளை அடையாளம் காண்பதற்காக நேரகாலத்துடன் எச்சரிக்கைவிடும் முறைமை நடைமுறைப்படுத்தப்பட்டது. இவ்வாண்டுப் பகுதியில் மத்திய வங்கி கொடுப்பனவு உட்கட்டமைப்பின் வினைத்திறனை அதிகரிப்பதற்கான வழிமுறைகளை மேற்கொண்டதுடன் இ-கொடுப்பனவு நடைமுறைப்படுத்தப்படவும் வசதியளித்திருந்தது.

**முன்னோக்கிப் பார்க்கையில், இலங்கையின் நிதியியல் துறையானது, முதலீடுகளை பன்முகப்படுத்துவதிலும் உள்நாட்டுப் பொருளாதாரத்தின் நிதியியல் தேவைப்பாடுகளுக்கு வசதியளிப்பதிலும் மற்றும் பொருளாதாரத்தின் வளர்ச்சி உத்வேகத்திற்கு துணை புரியக்கூடியவகையில் இயக்கவாற்றல் மிக்க வகிபாகமொன்றினைக் கொண்டிருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.** 2013இலும் 2014 ஆரம்பத்திலும் மேற்கொள்ளப்பட்ட நாணயக் கொள்கை தளர்த்தல்கள் என்பவற்றுடன் இணைந்தான பணவீக்கம் மற்றும் பணவீக்க

**அட்டவணை 8.1 முக்கிய நிதியியல் நிறுவனங்களின் மொத்தச் சொத்துக்கள்**

| | 2012 (அ) | | 2013 (ஆ) | |
|---|---|---|---|---|
| | ரூ. பில் | மொத்த சதவீதப் பங்கு % | ரூ. பில் | மொத்த சதவீதப் பங்கு % |
| **வங்கித்தொழில்துறை** | **6,377.6** | **70.4** | **7,187.5** | **69.7** |
| மத்திய வங்கி | 1,278.8 | 14.1 | 1,246.0 | 12.1 |
| உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் | 4,355.7 | 48.1 | 5,022.2 | 48.7 |
| உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் | 742.5 | 8.2 | 919.3 | 8.9 |
| **வைப்புக்களை ஏற்கும் ஏனைய நிதியியல் நிறுவனங்கள்** | **621.2** | **6.9** | **755.8** | **7.3** |
| பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் | 536.1 | 5.9 | 653.0 | 6.3 |
| கூட்டுறவு கிராமிய வங்கிகள் | 77.2 | 0.9 | 94.9 | 0.9 |
| சிக்கன கொடுகடன் கூட்டுறவுச் சங்கம் | 7.9 | 0.1 | 8.5 | 0.1 |
| **சிறப்பியல்பு வாய்ந்த நிதியியல் நிறுவனங்கள்** | **310.4** | **3.4** | **375.9** | **3.6** |
| சிறப்பியல்பு வாய்ந்த குத்தகையிடல் கம்பனிகள் | 60.4 | 0.7 | 64.5 | 0.6 |
| முதன்மை வணிகர்கள் | 160.4 | 1.8 | 213.6 | 2.1 |
| பங்குத்தரகர் கம்பனிகள் | 10.8 | 0.1 | 10.3 | 0.1 |
| நம்பிக்கைக் கூறுகள் / நம்பிக்கை கூறு முகாமைத்துவக் கம்பனிகள் | 32.4 | 0.4 | 55.8 | 0.5 |
| சந்தை இடையீட்டாளர்கள் (இ) | 43.9 | 0.5 | 29.5 | 0.3 |
| துணிகர மூலதனக் கம்பனிகள் | 2.5 | 0.0 | 2.3 | 0.0 |
| **ஒப்பந்த அடிப்படையிலான சேமிப்பு நிறுவனங்கள்** | **1,752.6** | **19.3** | **1,998.3** | **19.4** |
| காப்புறுதிக் கம்பனிகள் | 307.0 | 3.4 | 360.4 | 3.5 |
| ஊழியர் சேமலாப நிதியம் | 1,144.4 | 12.6 | 1,300.0 | 12.6 |
| ஊழியர் நம்பிக்கை நிதியம் | 158.4 | 1.7 | 178.5 | 1.7 |
| அனுமதியளிக்கப்பட்ட தனியார் ஊழியர் சேமலாப நிதியங்கள் | 110.3 | 1.2 | 123.0 | 1.2 |
| அரச பணி சேமலாப நிதியம் | 32.9 | 0.4 | 36.4 | 0.4 |
| **மொத்தம்** | **9,061.2** | **100.0** | **10,318.0** | **100.0** |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) ஒப்புறுதியாளர்கள், முதலீட்டு முகாமையாளர்கள் மற்றும் கடன் வசதியளிப்போர் உள்ளடங்களாக

சிறப்புக் குறிப்பு 10

## பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கும் நிதியியல் துறையின் உறுதிப்பாட்டிற்கும் உதவுவதற்கான நிதியியல் துறையின் ஒருங்கிணைப்பு

### அறிமுகம்

ஆரோக்கியமான, திடமான மற்றும் உறுதியான நிதியியல் துறையானது பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதில் முக்கிய பங்காற்றுகின்றது. நன்கு ஒழுங்குபடுத்தப்பட்ட மற்றும் மேற்பார்வை செய்யப்பட்ட திடகாத்திரமான நிதியியல் முறைமைகள் நிதியியல் முறைமையின் ஊறுதிப்பாட்டை நிச்சயப்படுத்துவதன் ஊடாக பொருளாதார உறுதிபாட்டிற்கு துனைபுரிகின்றது. உள்ளீர்ப்புகள், கையகப்படுத்துகைகள், இணைத்தல்கள், கூட்டு முயற்சிகள், ஒன்று சேர்தல்கள் மற்றும் உபாய உடன்படிக்கைகள் போன்றன நிதியியல் துறையை நாட்டின் வளர்ச்சி சாத்தியப்பாட்டின் உண்மைத்தன்மையை துணைபுரிவதற்கான ஆளுமை மற்றும் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டை நிச்சயப்படுத்திக் கொள்ளல் என்பவற்றை பொறுத்தமட்டில் நிதியியல் துறையை பலப்படுத்த முடியும். நாட்டிற்குள்ளும் பல நாடுகளுக்கிடையிலும் நிதியியல் நிறுவனங்களின் ஒருங்கிணைப்பில் இருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய நன்மைகளில் இருந்து நிதியியல் அமைப்பின் மிகவும் அவதானிக்கத்தக்க பண்புகளில் ஒன்றாக நிதியியல் நிறுவனங்களின் ஒருங்கிணைப்பைக் கருதலாம். தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மற்றும் நிதியியல் துறையின் ஒழுங்குமுறைப்படுத்தாமை என்பன நிதியியல் நிறுவனங்களை ஒன்றுசேர ஊக்கப்படுத்திய அதேவேளை, குறிப்பாக அண்மைய உலக நிதியியல் நெருக்கடியை பின்பற்றி சிறு பங்கேற்பாளர்களிடையே ஒன்றுசேர்தலை நோக்கி கூடிய இறுக்கமான ஒழுங்குமுறைத் தேவைப்பாடுகள் மீண்டும் பலப்படுத்தப்பட்டன.

ஒன்றுசேர்தலால் எழும் நன்மைகள் மற்றும் வாய்ப்புக்கள் நிதியியல் நிறுவனங்களின் செயலாற்றம் மற்றும் நிதியியல் துறையின் உறுதிப்பாட்டில் பலமான தாக்கத்தைக் கொண்டிருக்கும். ஒருங்கினைப்பானது நிதியியல் நிறுவனமொன்று அளவு திட்ட சிக்கனம் மற்றும் அளவு திட்ட பரப்பு என்பவற்றை அடைந்து கொள்வதன் மூலம் பருமனில் உயர்வினையும் மிகவும் போட்டித் தன்மையினையும் அனுமதிக்கின்றது. ஒருங்கிணைப்பின் ஊடாக பங்குதாரர் பெறுமதியை உருவாக்கும் உள்ளார்ந்த வளமிக்க பயனுதிமிக்க வழிமுறையும் வழங்கப்படும். அதேவேளை செலவினை குறைப்பதன் மூலம் வருமானமானது அதிகரிக்கப்படும். பாரிய நிறுவனங்கள் மிகவும் மென்மையான இடர் முகமைத்துவ முறைமைகளில் முதலீடு செய்தல் மற்றும் வியாபாரங்களின் பன்முகப்படுத்தல் அதேபோன்று சந்தைகளின் பூகோள பரம்பல்கள் என்பவற்றின் காரணமாக நிதியியல் நிறுவனங்களின் ஒருங்கிணைப்பானது இடர்நேர்வு குறைப்புக்கும் இட்டுச்செல்லும். மேலும், ஒருங்கிணைப்பை தொடர்ந்தான பலமான நிலைப்படுத்தல் நாட்டின் நிதித் தேவைப்பாட்டை நிறைவேற்றுவதற்கு சில நிறுவனங்கள் பன்னாட்டு ரீதியில் நிதிகளை பெற்றுக்கொள்வதற்கும் இயலச்செய்யும்.

கடந்தகாலங்களில் தோற்றம் பெற்றுவரும் சந்தைப் பொருளாதாரங்களில் பல அவற்றின் நிதித்துறை தொடர்பில் மீள் கட்டமைப்பு திட்டங்களை அமுல்படுத்தியிருந்தன. அவற்றில் பல நிகழ்ச்சித்திட்டங்கள் நிதியியல் துறையை பலப்படுத்தும் நோக்குடன் நிதியியல் நிறுவனங்களின் ஒருங்கிணைப்பின் மீது முக்கியத்துவத்தை கொடுத்திருந்தன. இலங்கை அரசாங்கத்தின் 2014 வரவு செலவுத் திட்டமும் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுவதற்கும் நிதியியல் துறை உறுதிப்பாட்டை பேணுவதற்குமாக நிதியியல் துறையை ஒருங்கிணைப்பதற்கான தேவையை வலியுறுத்தியிருந்தது. அதற்கிணங்க, ஒருங்கிணைப்பு நிகழ்ச்சித்திட்டத்தை வசதிப்படுத்தும் பொருட்டு கவர்ச்சியான வரி ஊக்குவிப்புக்களும் வழங்கப்பட்டன.இலங்கை மத்திய வங்கியும் மிகவும் உறுதியான மற்றும் உலகலாவிய போட்டித்தன்மை வாய்ந்த நிதியியல் துறையை உருவாக்கும் நோக்குடன் இலங்கையில் நிதியியல் நிறுவனங்களை ஒருங்கிணைப்பதற்கான முதன்மை திட்டத்தை 2014 இன் ஆரம்பத்தில் வெளிப்படுத்தியிருந்தது.

### உலகின் ஏனைய பகுதிகளில் நிதியியல் நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு

அண்மைய தசாப்தங்களில் நிதியியல் நிறுவனங்களின் ஒருங்கிணைப்பானது உலகிலுள்ள பல நாடுகளின் நிதியியல் துறையின் குறிப்பிடத்தக்க பண்பாகவுள்ளது. ஐக்கிய அமெரிக்கா அதேபோன்று சில மத்திய ஐரோப்பிய மற்றும் லத்தின் அமெரிக்க நாடுகள் போன்ற அபிவிருத்தி அடைந்த நாடுகளில் சந்தையால் தீர்மானிக்கப்பட்ட நிதியியல் நிறுவனங்களின் ஒருங்கிணைப்பானது போட்டித்தன்மையின் மேம்படுத்தல் நோக்கத்தினால் உந்தப்படுத்தப்பட்டது. குறிப்பாக உலகலாவிய சூழலில் இது பொதுவானதாகும். போட்டித்தன்மையை மேம்படுத்தும் நோக்கில் சிங்கப்பூர் மற்றும் ஹொங்கொங் போன்ற நாடுகளிலும் அதிகாரிகள் நிதியியல் நிறுவனங்களின் ஒருங்கிணைப்பை ஊக்கப்படுத்தியிருந்தனர். சிங்கப்பூர் நிதியியல் துறையின் ஒருங்கிணைப்பானது அடிப்படையில் பல பலமான வங்கிகளை கட்டியெழுப்பும் நோக்குடன் நிதியியல் துறையினால் மேம்படுத்தப்பட்டது. இது நாட்டை ஆசியாவின் நிதியியல் கேந்திர நிலையமாக உருவாக்குவதற்கும் உதவக்கூடும். உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பங்கேற்பாளர்களிடம் இருந்தான அதிகரித்த போட்டி ஹொங்கொங் வங்கித்தொழில் துறையை ஒருங்கணைத்தலை நோக்கி நகர்வதற்கு உற்சாகப்படுத்தியிருந்தது. சிங்கப்பூர் மற்றும் ஹொங்கொங் என்பவற்றின் அதிகாரிகள் ஒருங்கணைத்தலை பலமாக ஆதரித்து உரிய ஊக்குவிப்புக்களை வழங்கிய போதிலும் அவர்களின் நிதியியில் துறையின் புதிய ஒழுங்கமைப்பு சந்தை விசைகளால் தீர்மானிக்கப்படும் என்பதனையும் அனுமதித்திருந்தனர். தாய்வானில் அதிகளவான குறைந்த போட்டியாளர்களுடன் முறிவடைந்த நிதிச்சேவைக் கைத்தொழிலானது உலகலாவிய சந்தை இடங்களில் தாய்வான் வங்கிகளை போட்டியிடுவதற்கு கடினத்தன்மையாக்கியிருந்தன. இது தாய்வானில் வங்கித்துறையானது ஒருங்கிணைப்பை நோக்கி நகர்வடைவதை ஊக்கமளித்திருந்தது. நைஜீரியாவில் உயர் நிலையான செலவுகளுடனான அதிகளவான சிறிய வங்கிகளின் எண்ணிக்கை ஒருங்கிணைப்பையும் வங்கிகளின் மீள் நிலைப்படுத்தலையும் அவசியப்படுத்தியிருந்தன. இந்தியாவிலும்கூட பன்னாட்டு போட்டியாளர்களுடன் பாரிய வங்கிகள் போட்டியிட முடியும் என்பதன் தேவைப்பாடு அடையாளப்படுத்தப்பட்ட அதேவேளை வங்கிகளின் ஒருங்கிணைப்பின் தேவைப்பாடும் அடையாளப்படுத்தப்பட்டிருந்தது.

குறிப்பாக நிதியியல் நெருக்கடிக்குள்ளான ஆசியப் பொருளாதாரங்கள் உள்ளடங்களாக பல தோற்றம்பெற்று வரும் சந்தைப் பொருளாதாரங்களில் நிதியியல் துறையிலான

ஒருங்கிணைப்பானது அதிகாரிகளால் வழிநடாத்தப்பட்டதுடன் நிதியியல் நெருக்கடிளை தீர்ப்பதற்கானதொரு வழிவகையாகவும் போதுமான தாங்கிருப்புக்கான அதிர்வுகளை ஈர்த்தெடுப்பதற்கு நிலைத்து நிற்கத்தக்கதொரு நிதியியல் முறைமையொன்றை கட்டியெழுப்புவதற்கும் பின்தொடரப்பட்டது. உதாரணமாக, 1990களின் இறுதியில் இடம்பெற்ற ஆசிய நிதியியல் நெருக்கடியான பாதகமான விளைவுகளின் தாக்கங்களைத் தொடர்ந்த இந்தோனேசியா, தாய்லாந்து மற்றும் கொரியாவின் நிதியியல் துறைகளின் பரிணாமங்கள் மீள் ஒழுங்குமுறைச் சீராக்கம் மற்றும் புத்தாக்க கதையாக பெருமளவிற்கு விளங்குகின்றது. இந்நாடுகளில், ஒருங்கிணைப்பு செயன்முறைகளில் அரசாங்கமானது பாரிய வகிபாகத்தை கொண்டிருந்தது. அது அதிகளவான மூலதன மற்றும் நிதியியல் சாத்தியப்பாட்டை பலப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருந்ததுடன் நிதி நெருக்கடியால் அடிக்கடி சிறிய மற்றும் குடும்ப உடமையான நிதியியல் நிறுவனங்கள் பாதிக்கப்பட்டிருந்தன. மலேசியாவில், ஆசிய நிதி நெருக்கடியின் விளைவாக ஏற்பட்ட பொருளாதார நடவடிக்கைகளின் வீழ்ச்சியானது நிதிக் கம்பனிகள் துறையை பாதித்திருந்ததுடன் அவற்றை பலப்படுத்துவதற்கு ஒரு உபாயமாக நிதியியல் துறை மீள்கட்டமைப்பு திட்டம் அதிகாரிகளால் ஆரம்பத்தில் அமுல்படுத்தப்பட்டிருந்தது. அதனைத்தொடர்ந்து, நிதியியல் துறையில் ஒருங்கிணைப்பு செயன்முறையானது முன்னேற்றமடைந்ததன் காரணமாக மலேசியாவில் காணப்பட்ட நிதிக்கம்பனிகள் வங்கிகளால் எடுத்துக்கொள்ளப்பட்டன.

**இணைப்பிற்கு பிற்பட்ட செயலாற்றம்**

நிதியியல் நிறுவனங்களின் ஒருங்கிணைப்பின் காரணமாக அதிகளவான அபிவிருத்தியடைந்த அதேபோன்று தோற்றம்பெற்று வரும் சந்தைப் பொருளாதாரங்களில் நிதியியல் துறையின் செயலாற்றமானது முன்னேற்றமடைந்திருந்தது. உதாரணமாக, நிதியியல் துறையின் ஒருங்கிணைப்புடன் தோன்றப்பட்ட ஜேர்மனி மற்றும் யப்பானின் உலகலாவிய வங்கிகள் பரந்தளவான நிதியியல் பொருட்கள் மற்றும் சேவைகள் என்பவற்றை வழங்குகின்றன. ஆகையால் அவை அந்நாடுகளுக்கு கைத்தொழில் அபிவிருத்திகளின் முன்னேற்றம் மற்றும் பொருளாதார வளர்ச்சி என்பவற்றிற்கு நன்மையை வழங்கியிருந்தன. கொரியா, மலேசியா, தாய்லாந்து மற்றும் சிங்கப்பூர் போன்ற நாடுகளில் நிதியியல் துறையின் ஒருங்கிணைப்பானது குறைந்த செயலாற்ற சொத்துக்கள், பலமான மூலதன நிலை மற்றும் ஆரோக்கியமான இலாபத்தன்மை என்பவற்றுடன் பலமான நிதியியல் துறைக்கு இட்டுச்சென்றிருந்தது. சிங்கப்பூரில் நிதியியல் துறையின் ஒருங்கிணைப்பின் காரணமாக ஏற்பட்ட நிதியியல் துறையின் பலம் மற்றும் நீண்ட ஆற்றல் என்பன அதனது பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்கு குறிப்பிடத்தக்களவில் பங்களித்திருந்தது. இது வர்த்தகம் மற்றும் முதலீடுகள் என்பவற்றுடன் தொடர்புடையவற்றின் நோக்கங்களுக்கான நிதிகளில் பிராந்திய பாய்ச்சல்கள் என்பன உள்ளடங்கலாக உள்நாட்டுப் மற்றும் பன்னாட்டிலிருந்தான நிதிகளின் உட்பாய்ச்சல்களுக்குப் வசதியளித்திருந்த நிதியியல் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட பல எண்ணிக்கையான சேவைகளால் சான்று பகரப்பட்டது. தற்போது சிங்கப்பூரானது முன்னிலை வாய்ந்த பன்னாட்டு நிதியியல் நிலையங்களிடையே முதன்மை நிலையில் விளங்குவதுடன் உலகிலுள்ள முதன்மையான 500 வங்கிகளுள் அதன் மூன்று உள்நாட்டு வங்கித்தொழில் குழுமங்களும் காணப்படுகின்றன. மலேசியாவும்கூட நிதியியல் நிறுவனங்களின் ஒருங்கிணைப்புடன் உயர்ந்தளவான பொருளாதார வளர்ச்சியை அடைந்தகொள்வதற்கு இயலுமாயிருந்தது. ஏனெனில், இடரினை ஈர்த்தெடுப்பதற்கு அதிகளவான இயலுமையை கொண்டிருத்தல் மற்றும் வேறுபட்ட பொருளாதார முகவர்களின் தேவையை பூர்த்தி செய்வதற்கு பல்வேறு வகையான நிதிக்கருவிகளை வழங்கல் என்பவற்றுடன் நன்கு மூலதனமிடப்பட்ட வங்கிகள் பொருளாதார வளர்ச்சியை துணைபுரிவதற்கு இயலுமாயிருக்கும்.

**இலங்கையில் நிதியியல் துறை ஒருங்கிணைப்பு**

அண்மைக்காலங்களில் பொருளாதாரத்தின் வேறுபட்ட துறைகளுக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதிகளின் உருவாக்கம், கொடுப்பனவு வசதிகள் மற்றும் ஏனைய தொடர்புடைய வசதிகள் என்பவற்றுடன் இலங்கையின் நிதியியல் துறையானது பொருளாதார வளர்சியின் வேகத்தை வசதிப்படுத்தியிருந்தமையானது அவதானிக்கப்பட்டிருந்தது. நாடு உயர் நடுத்தர வருமானமுடைய நாடு என்ற நிலையை நோக்கியதான முன்னேற்றத்திற்கு இயலுமாக்குவதற்கான வளர்ச்சி உந்துதல்களை பேணுவதற்கு நிதியியல் துறையானது பொருளாதார நடவடிக்கைகளை விரிவாக்குவதற்கு நிதியியல் மற்றும் ஏனைய நிதியியல் சேவைகளை வழங்கக்கூடியதாகவிருக்க வேண்டும். அவ்வாறு மேற்கொள்வதற்கு, வங்கிகள் மற்றும் நிதிக் கம்பனிகள் மற்றும் குத்தகைக் கம்பனிகள் உள்ளடங்களான நிதியியல் நிறுவனங்களின் செயலாற்றல் குறிகாட்டிகள், சொத்து அடித்தளம் மற்றம் அதிர்வுகளுக்கான நிலைத்து நிற்கக்கூடிய தன்மை என்பவை தொடர்பில் பலமானதாக இருத்தல் வேண்டும். மேலும், பூகோளரீதியான பொருளாதார சூழலில் வெளிநாட்டு சந்தைகளின் சமூகமளிப்பானது குறிப்பாக நிதிகளின் திரட்டலில் உள்நாட்ட வங்கிகளுக்கு ஒரு நன்மையளிப்பதாகக் காணப்படும். அதன்படி, உள்நாட்டு நிதியியல் முறைமையை மேலும் பலப்படுத்தும் நோக்கிலும் எதிர்வு கூறப்பட்ட நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவக்கூடிய வங்கித்தொழில் மற்றும் வங்கியல்லாத நிறுவனங்களின் ஒரு தொகுதியை உள்ளடக்கிய ஒரு நிதியியல் துறையை உருவாக்கும் நோக்கிலும் உயிரூட்டமான

முன்னோக்கிய செயல்முறையாக நிதியியல் துறை ஒருங்கிணைப்பு செயல்முறை இலங்கையில் ஊக்குவிக்கப்பட்டது. இலங்கை மத்திய வங்கி ஒரு ஒழுங்குபடுத்துனராக ஒருங்கிணைத்தலை நிதியியல் நிறுவனங்களின் உபாய திட்டங்களின் ஒரு பகுதியாக கருதும்படி ஊக்குவிக்கின்றதுடன் தேவையான திறமைகளை கவருகின்ற அதேவேளை வங்கிகளின் ஒட்டுமொத்த செயல்திறன்களை இணங்காண்பதுடன் தொழில்நுட்ப தகவல்களை புதுப்பிப்பதற்காகவும் அவற்றின் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற முகாமைத்துவ தகவல் முறைகளில் தேவையான முதலீடுகளை மேற்கொள்கின்றது.

ஒருங்கிணைப்பு செயன்முறையானது பலமான நிதியியல் துறைக்கு இட்டுச்செல்லுமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஒருங்கிணைப்பினைத் தொடர்ந்து வங்கித்தறையானது ரூ. 1 றில்லியன் மற்றும் இதற்கு கூடுதலான சொத்துத் தளத்துடனான ஒரு சில வங்கிகளை உள்ளடக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மத்திய வங்கியின் மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்படன் முழு அளவில் இணங்கிச் செல்லும் உரிமம் பெற்ற நிதக் கம்பனிகள்/சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் சிறிய எண்ணிக்கையிலான மிகப் பெரிய மற்றும் பலமான கம்பனிகளை உள்ளடக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மத்திய வங்கி இச்செயன்முறையை வெற்றியாக்குவதற்கு தொடர்ச்சியாக ஒருங்கிணைப்பு செயன்முறை தொடர்பில் கண்காணிப்பதுடன் தொடர்பான ஆர்வலர்களுடன் தொடர்ச்சியான உரையாடல்களைத் தொடர்ந்து பேணும். இதன் குறிக்கோள் இலங்கையில் இயங்கியல் வாய்ந்த மிகவும் வினைத்திறனான மற்றும் நிலைத்து நிற்கக் கூடிய நிதியியல் துறையை கட்டியெழுப்புவதாகும்.

உசாத்துணைகள்

Amel D., Barnes C., Panetta Fabio & Salleo Carmello, (2002), "Consolidation and Efficiency in the Financial Sector: A review of international evidence", Journal of Banking and Finance, Volume 28.

Bank for International Settlements, (2001), "The banking industry in the emerging market economies: competition, consolidation, and systemic stability", BIS papers no. 4.

Group of Ten (2001), "Report on Consolidation in the Financial Sector", Basel.

International Monetary Fund, (2001)," International Capital Markets: Developments, Prospects, and Key Policy Issues", World Economic and Financial Surveys.

Stijn C., (2009), "Competition in the Financial Sector: Overview of Competition Policies", IMF Working Paper (WP/09/45).

Sufiyan F., (2006),"The Efficiency Effects of Bank Mergers and Acquisitions: A Non-Stochastic Window Event Analysis Approach", Chulalongkorn Journal of Economics.

www.bnm.gov

www.federalreserve.gov

எதிர்பார்ப்புக்களில் ஏற்பட்ட வீழ்ச்சி பங்குரிமை மற்றும் முறிச் சந்தைச் செயலாற்றத்தையும் உத்வேகப்படுத்துகிற வேளையில் கொடுகடன் வளர்ச்சியில் தூண்டுதலை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படும் மத்திய வங்கி நிதியியல் துறையின் ஒருங்கிணைப்பிற்காக முதன்மைத் திட்டமொன்றினை வெளியிட்டது. இது எல்லை கடந்த இணைப்புக்களுடனும் குறிப்பிடத்தக்களவு வெளிநாட்டு பிரசன்னத்துடனும் கூடிய வலுவான, இயக்கவாற்றல் வாய்ந்த, பன்னாட்டு ரீதியில் போட்டித்தன்மை கொண்ட நிதியியல் துறையினைக் கட்டியெழுப்பும் நோக்கத்துடன் வடிவமைக்கப்பட்டது. இனிவரும் ஆண்டுகளில் வெளிநாட்டு நிதியியல் நிறுவனங்களும் பொருளாதார நடவடிக்கைகளில் பெரும் வகிபாகமொன்றினை ஆற்றும் என எதிர்பார்க்கப்படுகிறது. நிதியியல் துறையின் எதிர்பார்க்கப்பட்ட மாற்றங்களுக்கு உதவியளிப்பதற்காக பாசல் III நியமங்களைப் பின்பற்றுவதன் மூலம் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை அமைப்பு வலுப்படுத்தப்படும். மேலும், ஆற்றல் வாய்ந்த கம்பனி ஆளுகையும் இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகளும் நிதியியல் நிறுவனங்களில் உள்ளடக்கப்படவுள்ள வேளையில் நிதியியல் உறுதிப்பாட்டிற்கு ஏற்படக்கூடிய சாத்தியமான இடர்நேர்வுகளை தணிக்கும் நோக்கில் பொருத்தமான வெளிப்படுத்துகை நியமங்கள் பின்பற்றப்படுவதும் ஊக்குவிக்கப்படும். அதிகரித்துவரும் நாட்டின் வளர்ச்சி வாய்ப்புக்களில் பெரும் பங்கினைக் கொண்டிருப்பதற்கு நிதியியல் துறையினை இயலச் செய்வதற்காக நிதியியல் சந்தைகளை குறிப்பாக கம்பனி முறிச் சந்தையினை ஆழப்படுத்தி அகலமாக்கும் நோக்குடன் தொடர்ச்சியான வழிமுறைகளும் மேற்கொள்ளப்பட்டன.

## 8.2 நிதியியல் நிறுவனங்களின் செயலாற்றம்

### வங்கித்தொழில் துறை

**மூலதன மயப்படுத்தல் மற்றும் இலாபத்தன்மை என்பன போதுமான திரவத்தன்மை தாங்கிருப்புக்களுடன் சேர்த்து ஆரோக்கியமான மட்டத்தில் பேணப்பட்டமையின் காரணமாக வங்கித்தொழில் துறை வலுவானதாகக் காணப்பட்டது.** எனினும், 2012இல் பேணப்பட்ட இறுக்கமான நாணயக் கொள்கை நிலையின் காலங்கடந்த தாக்கம், குறைவடைந்த வெளிநாட்டுக் கேள்வி குறிப்பாக ஆண்டின் தொடக்கப் பகுதியில் வர்த்தகம் தொடர்பான நடவடிக்கை மீது ஏற்படுத்திய தாக்கம் மற்றும் ஏறத்தாழ 2012 ஒத்தோபரிலிருந்து உலக சந்தையில் தங்கத்தின் விலை உறுதியாக வீழ்ச்சியடைந்தமையின் காரணமாக வங்கிகளின் தங்கக் கடன் சொத்துப்பட்டியல் சுருக்கமடைந்தமை என்பனவற்றின் விளைவாக 2013இல் தனியார் துறைக்கு வங்கிகளினால் வழங்கப்பட்ட கொடுகடன் மெதுவான வேகத்தில் விரிவடைந்தமையினால் இவ்வாண்டில்

**அட்டவணை 8.2 வங்கிகள் மற்றும் வங்கிக் கிளைகளின் பரம்பல்**

| வகை | முடிவில 2012 (அ) | முடிவில 2013 (ஆ) |
|---|---|---|
| உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் | | |
| i. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் மொத்த எண்ணிக்கை | **24** | **24** |
| உள்நாட்டு வங்கிகள் | 12 | 12 |
| வெளிநாட்டு வங்கிகள் | 12 | 12 |
| ii. வர்த்தகவங்கிக்கிளைகளும் ஏனைய பணி நிலையங்களும் | **5,586** | **5,667** |
| கிளைகள் (இ) | **2,730** | **2,582** |
| உள்நாட்டு வங்கிக் கிளைகள் | 2,510 | 2,576 |
| வெளிநாட்டு வங்கிக் கிளைகள் | 220 | 221 |
| மாணவர்களின் சேமிப்பு பிரிவுகளும் ஏனைய பணிநிலையங்களும் | **2,856** | **2,864** |
| தன்னியக்க கூற்றுப் பொறிகள் | **2,235** | **2,358** |
| உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் | | |
| i. உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் மொத்த எண்ணிக்கை | **9** | **9** |
| பிரதேச அபிவிருத்தி வங்கி | 1 | 1 |
| தேசிய மட்ட சேமிப்பு வங்கி | 2 | 2 |
| நீண்டகால கடன் வழங்கும் நிறுவனங்கள் | 2 | 2 |
| வீடமைப்பு நிதி நிறுவனங்கள் | 2 | 2 |
| தனியார் சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கிகள் | 2 | 2 |
| ii. உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிக்கிளைகளும் ஏனைய பணி நிலையங்களும் | **812** | **820** |
| கிளைகள் (இ) | **637** | **645** |
| பிரதேச அபிவிருத்தி வங்கிகள் | 254 | 255 |
| தேசிய மட்ட சேமிப்பு வங்கி | 220 | 223 |
| நீண்டகால கடன் வழங்கும் நிறுவனங்கள் | 27 | 28 |
| வீடமைப்பு நிதி நிறுவனங்கள் | 47 | 49 |
| தனியார் சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கிகள் | 89 | 90 |
| மாணவர்களின் சேமிப்பு பிரிவுகளும் ஏனைய பணிநிலையங்களும் | **175** | **175** |
| தன்னியக்க கூற்றுப் பொறிகள் | **180** | **180** |
| வங்கிக் கிளைகளினதும் ஏனைய பணி நிலையங்களினதும் மொத்த எண்ணிக்கை | **6,398** | **6,487** |
| தன்னியக்க கூற்றுப்பொறிகளின் மொத்த எண்ணிக்கை | **2,415** | **2,538** |
| விற்பனை பொறிகளில் இலத்திரனியல் நிதிமாற்றல் வசதிகளின் மொத்த எண்ணிக்கை | **27,689** | **27,955** |
| வங்கித்தொழில் அடர்த்தி: 100,000 ஆட்களுக்கான வங்கிக்கிளைகளின் எண்ணிக்கை | **16.5** | **16.8** |

(அ) திருத்தியமைக்கப்பட்டது

(ஆ) தற்காலிகமானது

(இ) வங்கித்தொழில் பணி நிலையங்கள் இருவகைகளாக, கிளைகள் மற்றும் மாணவர் சேமிப்பு பிரிவுகளாக மீள் வகைப்படுத்தப்பட்டதுடன், மாணவர் சேமிப்பு பிரிவுகளை தவிர்ந்த பணி நிலையங்கள் 01 சனவரி2013ற்குள் தரமுயர்த்தப்பட்டன

மூலம் : இலங்கை மத்திய வங்கி

சொத்துக்களின் வளர்ச்சி மிதமடைந்தது. இருப்பினும், 33 உரிமம் பெற்ற வங்கிகள், 9 உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் உட்பட 21 உள்நாட்டு வங்கிகள், 12 வர்த்தக வங்கிகள் மற்றும் வெளிநாட்டு வங்கிகளின் 12 கிளைகள் உள்ளடக்கிய உள்நாட்டு வங்கித்தொழில் துறை 2013இல் விரிவடைந்து நாட்டின் பொருளாதார நடவடிக்கைகள் விரிவடைவதற்கு தொடர்ச்சியாக ஆதரவளித்தன.

## வியாபார விரிவாக்கம்

**பாரிய செயல்விளைவு:** வங்கிக் கிளைகளின் வலையமைப்பு 2013இல் மேலும் விரிவடைந்ததுடன் நிதியியல் வசதிகளைப் பெறக்கூடிய தன்மையினையும் மேம்படுத்தியிருந்தன. 2013ஆம் ஆண்டு காலப்பகுதியில் மொத்த வங்கித்தொழில் வலையமைப்பானது 89 வங்கித்தொழில் நிலையங்கள் (மாணவர் சேமிப்புப் பிரிவுகள் உள்ளடங்கலாக) திறக்கப்பட்டமை மற்றும் 123 தன்னியக்கக் கூற்றுப் பொறிகள் நிறுவப்பட்டமை என்பனவற்றுடன் விரிவடைந்தது. இவற்றில், 71 வங்கித்தொழில் நிலையங்களும் 95 தன்னியக்கக் கூற்றுப் பொறிகளும் மேல் மாகாணத்திற்கு வெளியே நிறுவப்பட்டன. இதன்படி, 2013 இறுதியில் வங்கித்தொழில் முறைமை 6,487 வங்கித்தொழில் கிளைகளுடனும் 2,538 தன்னியக்கக் கூற்றுப் பொறிகளுடனும் தொழிற்பட்டது.

## சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்

**சொத்துக்கள்:** வங்கித்தொழில் துறையின் மொத்தச் சொத்துக்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 16.5 சதவீதத்தினால் ரூ.5.9 றில்லியனுக்கு அதிகரித்தன. ஒப்பிடுகையில் 2012இல் வங்கித்தொழில் துறையின் மொத்தச் சொத்துக்கள் 19.9 சதவீதத்தினால் அதிகரித்திருந்தன. கொடுகடன் வளர்ச்சி 2012இன் 21.1 சதவீத்ததிலிருந்து 2013இல் 8.8 சதவீதத்திற்கு மிதமடைந்தமையானது மொத்தச் சொத்துக்களில் கடன்கள் மற்றும் முற்பணங்களின் பங்கினை 2012இன் 61.8 சதவீதத்திலிருந்து 2013இல் 57.7 சதவீதத்திற்குக் குறைவடையச் செய்தது. இதன் விளைவாக, முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட திரட்டப்பட்ட நிதியம் மொத்தச் சொத்துக்களில் முதலீட்டின் பங்கினை 2012இன் 23.9 சதவீதத்திலிருந்து 2013இல் 28.5 சதவீதத்திற்கு அதிகரித்தது. 2013இல் மொத்த முதலீடுகளின் அதிகரிப்பிற்கு அரச பிணையங்கள் பெருமளவிற்கு வகைகூறின.

2013இல் கடன் வழங்கலில் ஏற்பட்ட அதிகரிப்பு பொருளாதார நடவடிக்கையின் ஐந்து முக்கிய துறைகளுக்கு வழங்கப்பட்ட கடன்களின் காரணமாக ஏற்பட்டதாகும். கட்டடவாக்கம் (26 சதவீதம்), வர்த்தகம் (21 சதவீதம்), உட்கட்டமைப்பு (20 சதவீதம்), தயாரிப்பு (17 சதவீதம்) மற்றும் போக்குவரத்து (11 சதவீதம்) என்பன கடன் வழங்கலில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு முக்கியமாகப் பங்களித்தன (கடன் வழங்கலில்

**அட்டவணை 8.3 வங்கித் தொழில் துறையின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் உள்ளடக்கம்**

| விடயம் | 2012 (அ) | | 2013 (ஆ) | | % மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|
| | ரூ.பில் | மொத்தத்தின் பங்கு % | ரூ.பில் | மொத்தத்தின் பங்கு % | 2012 | 2013 (ஆ) |
| சொத்துக்கள் | | | | | | |
| கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 3,149 | 61.8 | 3,427 | 57.7 | 21.1 | 8.8 |
| முதலீடுகள் | 1,218 | 23.9 | 1,695 | 28.5 | 15.2 | 39.2 |
| ஏனையவை (இ) | 731 | 14.3 | 820 | 13.8 | 23.1 | 12.2 |
| பொறுப்புக்கள் | | | | | | |
| வைப்புக்கள் | 3,625 | 71.1 | 4,170 | 70.2 | 18.0 | 15.0 |
| கடன் பெறுகைகள் | 804 | 15.8 | 1,015 | 17.1 | 26.6 | 26.2 |
| முதலீட்டு நிதிகள் | 436 | 8.5 | 490 | 8.2 | 17.5 | 12.3 |
| ஏனையவை | 233 | 4.6 | 267 | 4.5 | 34.2 | 15.5 |
| **மொத்த சொத்துக்கள்/ பொறுப்புக்கள்** | **5,098** | **100.0** | **5,942** | **100.0** | **19.9** | **16.5** |


(அ) திருத்தப்பட்டது

(ஆ) தற்காலிகமானது

(இ) காசு மற்றும் வங்கி மீதிகள், வைப்புகள் நேர்மாற்று மீள்கொள்வு உடன்படிக்கைகள் மற்றும் நிலையான சொத்துக்கள் உள்ளடங்களாக

மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 8.1 வங்கித்தொழில் துறையின் ஐந்தொகைக்கு வெளியேயான வெளிப்படுத்துகைகள்




ஏற்பட்ட அதிகரிப்பிற்கு அவை தொடர்பான பங்களிப்புக்கள் அடைப்புக்குறிப்புக்களில் தரப்பட்டுள்ளன). குறிப்பாக, நுகர்வு தொடர்பான நோக்கங்களுக்கான கடன் வழங்கல் 2013இன் கொடுகடன் வளர்ச்சியில் எதிர்மறையான பங்களிப்பினையே வழங்கின.

**பொறுப்புக்கள்:** வைப்புக்கள் வங்கித்தொழில் துறையின் முக்கிய நிதியியல் மூலமாகத் தொடர்ந்து விளங்கி 2013ஆம் ஆண்டின் இறுதியில் மொத்தப் பொறுப்புக்களில் 70.2 சதவீதமாக இருந்தன. நிதியிடல் மூலங்களில் கடன்பெறுகைகளின் பங்கானது 2012இன் இறுதியின் 15.8 சதவீதத்திலிருந்து 2013இன் இறுதியில் 17.1 சதவீதமாக அதிகரித்ததன் விளைவாக நிதியிடல் இடைவெளியை பெருமளவில் நிரப்புவதாக கடன்பெறுகைகள் விளங்கின. இருப்பினும், ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் வைப்புக்கள் மற்றும் கடன்பெறுகைகளின் வளர்ச்சி முறையே 2012இன் இறுதியின் 18.0 சதவீதம் மற்றும் 26.6 சதவீதம் ஆகியவற்றிலிருந்து 2013இன் இறுதியில் 15.0 சதவீதம் மற்றும் 26.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்திருந்தன. குறிப்பாக, கரைகடந்த மூலங்களிலிருந்தான கடன்பெறுகைகள் அமெரிக்க டொலர் 1,618 மில்லியன்களால் அதிகரித்தமை காரணமாக மொத்த கடன்பெறுகைகளில் வெளிநாட்டு நாணய கடன்பெறுகைகளின் பங்கு 2012இன் 54.8 சதவீதத்திலிருந்து 2013இல் 64.6 சதவீதத்திற்கு அதிகரித்திருந்தது.

**ஐந்தொகைக்கு வெளியேயான வெளிப்படுத்துகைகள்:** ஐந்தொகைக்கு வெளியேயான வெளிப்படுத்துகைகள் 2012 இன் 7 சதவீதத்திலிருந்து 2013 இல் 13.9 சதவீதத்திற்கு அதிகரித்ததுடன் இது பெருமளவில் எடுக்கப்படாத கொடுகடன் ஏற்பாடுகள், பெறுதிகள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணியுடன் தொடர்பான வெளிப்படுத்துகைகள் (வெளிநாட்டு செலாவணி விற்பனைகள் மற்றும் கொள்வனவுகள்) என்பனவற்றின் அதிகரிப்பின் காரணமாக ஏற்பட்டதாகும். மேலும், வெளிநாட்டு செலாவணி தொடர்பான வெளிப்படுத்துகைகள் மற்றும் எடுக்கப்படாத கொடுகடன் ஏற்பாடுகள் ஆகியன 2013ஆம் ஆண்டின் இறுதியின் மொத்த ஐந்தொகைக்கு வெளியேயான வெளிப்படுத்துகைகள் முறையே 41.3 சதவீதம் மற்றும் 22.2 சதவீதமாக இருந்தன.

## வங்கித்தொழில் துறையிலான இடர்நேர்வுகள்


**கொடுகடன் இடர்நேர்வு:** 2013இல் செயற்படாக் கடன்களில் அதிகரிப்புக் காணப்பட்ட போதும் மூலதன வடிவில் போதுமானளவில் கிடைக்கத்தக்கதாக இருந்த மூலவளங்களைக் கருத்திற்கொள்கையில் கொடுகடன் இடர்நேர்வு முகாமைப்படுத்தத்தக்க மட்டத்தில் இருந்தது. கொடுகடன் வளர்ச்சி 2012இல் 21.1 சதவீதத்திலிருந்து (ரூ. 548 பில்லியன்) 2013இல் 8.8 சதவீதத்திற்கு (ரூ.277 பில்லியன்) மிதமடைந்தது. கொடுகடன் வளர்ச்சியில் ஏற்பட்ட இம்மிதமான தன்மைக்கு 2012ஆம் ஆண்டின் பெரும்பகுதியில் பேணப்பட்ட இறுக்கமான நாணயக் கொள்கைகளின் காலங்கடந்த தாக்கம், உலகளாகவிய பொருளாதாரத்தின் பாதிக்கப்படக்கூடிய மீட்சி மற்றும் அதன் விளைவாக பன்னாட்டு வர்த்தகத்துடன் தொடர்பான நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்ட கொடுகடனில் ஏற்பட்ட குறைப்பு என்பன காரணங்களாக அமைந்தன. அதற்கு மேலாக, கம்பனி முயற்சிகளுக்கு உள்நாட்டு ரீதியாகவும் பன்னாட்டு ரீதியாகவும் கிடைக்கத்தக்கதாக இருந்த மாற்று நிதியிடல் மூலங்கள் மற்றும் சந்தை மனோபாவம் என்பனவும் கொடுகடன் வளர்ச்சியின் மீது தாக்கத்தினைக் கொண்டிருக்கலாம் போல் தெரிகிறது. மேலும், ஆண்டுகாலப் பகுதியில் அடகுபிடித்தல் சொத்துப்பட்டியலில் ஏற்பட்ட 17.1 சதவீதம் கொண்ட வீழ்ச்சி ஏனைய கடன் வழங்கல் வகைகளில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக ஓரளவிற்கு எதிரீடு செய்யப்பட்டது.

செயற்படாக் கடன்களின் விகிதம் 2012இன் இறுதியின் 3.7 சதவீதத்திலிருந்து 2013 இறுதியில் 5.6 சதவீதத்திற்கு அதிகரித்தமையின் மூலம் எடுத்துக்காட்டப்பட்டவாறு வங்கித்தொழில் துறையின் சொத்துக்களின் தரம் மோசமடைந்தது. இதற்கு குறிப்பாக, அடகுவைத்தல் சொத்துப்பட்டியல் மற்றும் மெதுவான கடன் வளர்ச்சி என்பனவற்றின் காரணமாக கடனின் தரம் நலிவடைந்தமையே பெருமளவிற்குக் காரணமாகும். 2013ஆம் ஆண்டுப் பகுதியில் தேறிய செயற்படாக் கடன்கள் 74 பில்லியனினால் அதிகரித்தன. இதில், அடகு முற்பணங்கள் தொடர்பானவை, 2012இன் ரூ.17 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.56 பில்லியனாகக் காணப்பட்டது. எஞ்சிய இடர்நேர்வை குறைந்தளவில் கொண்ட தங்கத்தினால் உத்தரவாதப்படுத்தப்பட்ட புதிய செயற்படாக்


8

நிதியியல்துறை செயலாற்றமும் முறைமை உறுதித்தன்மையும்

**வரைபடம் 8.2 வங்கித்தொழில் துறையின் செயற்படாக்கடன்கள்**




**வரைபடம் 8.3 வங்கித்தொழில் துறையின் துறைவாரியான கொடுகடன் வெளிப்படுத்துகைகள்**




கடன்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட குறைந்தளவு மேலதிக செயற்படாக் கடன்களுக்கான ஏற்பாடுகள் காரணமாக 2012இன் இறுதியின் 41.4 சதவீதத்திலிருந்து 2013இன் இறுதியில் 32.5 சதவீதத்திற்கு செயற்படாக் கடன்களுக்கான ஏற்பாடுகளின் (விசேட) போதுமை விகிதம் குறைந்திருந்தது.

வங்கித்தொழில் துறையின் கடன் வழங்கல் நடவடிக்கைகள் தொடர்ந்தும் பன்முகப்படுத்தப்பட்ட துறைகளுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்டன. வர்த்தகம் (15.7 சதவீதம்), கட்டடவாக்கம் (14.5 சதவீதம்), வேளாண்மை (12.2 சதவீதம்), நுகர்வு (11.5 சதவீதம்) மற்றும் தயாரிப்பு (11.4 சதவீதம்) என்பன வங்கிக் கடன் வழங்கல் பெரும் பங்கிற்கு தொடர்ந்தும் வகைகூறின.


**சந்தை இடர்நேர்வு:** சந்தை இடர்நேர்வுக்கான இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள், மொத்த இடர்நேர்வினை நிறையேற்றப்பட்ட சொத்துக்களில் 2 சதவீதத்திற்கு மாத்திரமே வகைகூறியமையினால் சந்தை இடர்நேர்வு வங்கித்தொழில் துறையின் ஒட்டுமொத்த இடர்நேர்வுச் சொத்துப்பட்டியில் தொடர்ந்தும் குறைவானதாக விளங்கியதுடன் சந்தை இடர்நேர்வுகளை ஈடுசெய்வதற்கு வங்கித்தொழில் துறை ரூ.6 பில்லியன் கொண்ட மூலதன விதிப்பினையே அறிக்கையிட்டது.

**வட்டி வீதங்கள்:** 2013ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாட்டிற்குப் பதிலளிக்கும் வகையில் சந்தை வட்டி வீதங்கள் கீழ் நோக்கி சீராக்கப்பட்டன. வர்த்தக நடவடிக்கைகளுக்காக வைக்கப்பட்டிருந்த அரச பிணைகள் மீது குறிப்பிடத்தக்களவு இலாபத்தை வங்கித்தொழில் துறை பதிவு செய்ததனால் அவற்றின் மீள் விலையிடல் இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மையை வினைத்திறனாக முகாமைப்படுத்த இயலுமாயிருந்தது. மேலும், ஒட்டுமொத்த அடிப்படையில், 0 இலிருந்து ஒரு ஆண்டு வரையான ஆண்டுக் கூடையிலுள்ள வட்டி வீத உணர்திறன் இடைவெளி (அதாவது வட்டி வீத உணர்திறன் சொத்துக்கள் - வட்டிவீத உணர்திறன் பொறுப்புக்கள்) 2012இன் எதிர்க்கணியமான 13.2 சதவீதத்திலிருந்து 2013இல் எதிர்க்கணியமான 6.6 சதவீதமாக குறுகியது. எனவே, வங்கித்தொழில் துறை வட்டிவீத இடர்நேர்வை மீள்விலையிடல் செய்வதற்கு ஒரு வரையறுக்கப்பட்ட வெளிப்பாட்டைக் கொண்டிருந்தது.

**பங்கு மூலதன விலைகள்:** பங்கு மூலதனச் சந்தையில் வங்கித்தொழில் துறையின் வெளிப்படுத்துகை மிகக் குறைவாகவிருந்த காரணத்தால் அதன் பங்கு மூலதன இடர்நேர்வு மிகச் சிறியதாக இருந்ததுடன் பங்குகளில் வங்கிகளின் முதலீடுகள் மொத்த மூலதனங்கள் மற்றும் மொத்த சொத்துக்களின் முறையே 2.4 சதவீதம் மற்றும் 0.7 சதவீதமாக மட்டுமே இருந்தன.

**செலாவணி வீதங்கள்:** 2013இன் இறுதியில், 9 சதவீதமான சொத்துக்கள் மட்டுமே வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்டிருந்தன. 2013ஆம் ஆண்டு இறுதியிலிருந்த

**வரைபடம் 8.4 வங்கித்தொழில் துறையின் செயற்படாக்கடன்களுக்கான ஏற்பாடுகள்**



அட்டவணை 8.4 வங்கித்தொழில் துறையின் நியதி திரவச் சொத்துக்களின் உள்ளடக்கம்

| விடயம் | 2012 (அ) | | 2013 (ஆ) | | மாற்றம் (ரூ.மில்) | |
|---|---|---|---|---|---|---|
| | ரூ.பில் | பங்கு % | ரூ.பில் | பங்கு % | 2012 | 2013 (ஆ) |
| திறைசேரி உண்டியல்கள் | 285 | 20.9 | 577 | 30.4 | 30 | 292 |
| திறைசேரி முறிகள் | 424 | 31.2 | 599 | 31.6 | 46 | 176 |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் | 217 | 16.0 | 362 | 19.1 | 43 | 145 |
| காசு | 73 | 5.4 | 84 | 4.4 | 13 | 10 |
| அழைப்புப் பணம் | 46 | 3.4 | 44 | 2.3 | (0.1) | (2) |
| வெளிநாட்டிலுள்ள வங்கிகளின் மீதிகள் | 209 | 15.4 | 149 | 7.9 | 70 | (60) |
| ஏனையவை | 104 | 7.7 | 83 | 4.3 | 18 | (22) |
| **மொத்த திரவச் சொத்துக்கள்** | **1,358** | **100.0** | **1,898** | **100.0** | **219** | **540** |


(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலம்: இலங்கை மத்திய வங்கி

தேறிய திறந்த வெளிநாட்டுச் செலாவணி நிலைகளின் மொத்த மதிப்பு வங்கிகளினுடைய ஒழுங்குமுறை மூலதனத்தின் 1 சதவீதத்திற்கும் குறைவாகவிருந்த காரணத்தினால் வெளிநாட்டு செலாவணி இடர்நேர்வு வங்கித்தொழில் துறையின் உறுதித்தன்மைக்கு குறிப்பிட்டதொரு அச்சுறுத்தலாக இருக்கவில்லை. ஆண்டின் பெரும்பகுதியில் வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள், வெளிநாட்டு நாணயப் பொறுப்புக்களை விஞ்சியிருந்தமையினால் 2.75 சதவீதத்திலான ஐ.அ.டொலருக்கு எதிரான ரூபாயின் பெறுமானத் தேய்வு வெளிநாட்டு நாணய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் மீள்மதிப்பினூடாக வங்கிகளின் இலாபத்தன்மையில் சாதகமான தாக்கத்தைக் கொண்டிருந்தது.

**திரவத்தன்மை இடர்நேர்வு:** 2013ஆம் ஆண்டு காலப்பகுதியில் வங்கித்தொழில் துறை போதுமானளவு திரவத்தன்மை மட்டங்களுடன் ஆரோக்கியமான விதத்தில் தொழிற்பட்டதுடன் வங்கித்தொழில் துறையின் நியதிச்சட்ட திரவத்சொத்து விகிதம் குறைந்தபட்ச தேவைப்பாட்டை விட 20 சதவீதம் குறிப்பிடத்தக்களவு உயர்வாகக் காணப்பட்டது. கொடுகடனுக்கெதிரான வைப்புக்கள் மற்றும் கடன் பெறுகைகள்

வரைபடம் 8.5 வங்கித்தொழில் துறையின் திரவவிகிதங்கள்




விகிதம் 2012இன் இறுதியின் 71.1 சதவீதத்திலிருந்து 2013இன் இறுதியின் 66.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்ததற்கு ஒத்திசைவாக நியதிச்சட்ட திரவசொத்து விகிதம் 2012 திசெம்பர் மாதத்திலிருந்த 31.3 சதவீதத்திலிருந்து 2013 திசெம்பர் மாதத்தில் 37.7 சதவீதமாக அதிகரித்தது. நியதிச் சட்ட திரவச் சொத்து விகித அதிகரிப்புக்கு பிரதானமான காரணம் திரவச் சொத்துக்களின் அதிகரித்த வளர்ச்சியாகும் (40 சதவீதத்தால்). வங்கித்தொழில் துறையின் திரவத்தன்மை நிலை வலுவடைந்தமையானது மேலும் மொத்தச் சொத்துக்களுக்கான திரவச் சொத்துக்களின் விகிதத்திலும் வைப்புக்களுக்கான திரவச் சொத்துக்களின் விகிதத்திலும் பிரதிபலிக்கப்பட்டது.


மொத்த திரவச் சொத்துக்கள் 2012ஆம் ஆண்டு காலப்பகுதியில் ரூ.219 பில்லியன்களுக்கு எதிராக 2013ஆம் ஆண்டு காலப்பகுதியில் ரூ.540 பில்லியன் கொண்ட உயர்ந்த அதிகரிப்பைப் பதிவு செய்தது. இவ்வதிகரிப்பு பிரதானமாக திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகள் ஆகியவற்றின் அதிகரித்த முதலீடுகளினால் ஏற்பட்டதாகும்.

ஆறு மாத காலப்பகுதிக்கும் குறைவான அனைத்து முதிர்ச்சிக் காலப்பகுதிகளிலும் (கூடைகள்) ஒன்றுசேர்ந்த பொறுப்புக்களின் சதவீதமாக ஒன்றுசேர்ந்த முதிர்ச்சி இடைவெளி 2012இல் இருந்ததிலும் பார்க்க ஒடுங்கியது. ஒரு ஆண்டிற்குக் குறைவான காலப்பகுதியிலான விகிதம் 2012இன் இறுதியின் எதிர்கணியமான 13.2 சதவீதத்திலிருந்து 2013 இறுதியில் எதிர்கணியமான 13.3 சதவீதத்திற்கு அதிகரித்தது.

## மூலவளங்கள்

**இலாபத்தன்மை:** வங்கித்தொழில் துறை 2012ஆம் ஆண்டு காலப்பகுதியில் அறிக்கையிட்ட ரூ.82.7 பில்லியன் வரிக்கும் பின்னரான இலாபத்திற்கெதிராக 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ரூ.74.6 பில்லியன் வரிக்குப்பின்னரான இலாபத்தை அறிக்கையிட்டது. மொத்த வைப்புக்களில் அதிகூடிய செலவைக்கொண்ட தவணை வைப்புக்களின் அதிகரிப்பு, கொடுகடன் வளர்ச்சியின் சீராக்கம் மற்றும் குறைந்த வருமான சொத்துக்களின் அதிகரிப்பு என்பவை காரணமாக தேறிய வட்டி வீத வேறுபாடு 2012இன் 4.1 சதவீதத்திலிருந்து 2013இல் 3.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. தேறிய வட்டி இலாப அளவு வீழ்ச்சியடைந்து 2013இல் வங்கித்தொழில் துறையின் மைய வியாபாரத் தொழிற்பாடுகள் மெதுவடைந்தமையை ஓரளவு பிரதிபலித்ததுடன் அறவிடமுடியா மற்றும் ஐயக்கடன்கள் மற்றும் கடன் பதிவழிப்பிற்கான ஒதுக்கங்கள் 2012இன் ரூ.6.3 பில்லியனிலிருந்து 2013இல் ரூ.18.4 பில்லியனுக்கு


வரைபடம் 8.6 வங்கித்தொழில் துறையின் ஒன்று திரண்ட பொறுப்புகளின் சதவீதமாக ஒன்று திரண்ட முதிர்ச்சி இடைவெளி




அதிகரித்தன. எனினும், தொழிற்பாட்டுச் செலவுகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கள் எதுவும் காணப்படவில்லை. இவ்வபிவிருத்திகளின் விளைவாக, வங்கித்தொழில் துறையின் அனைத்து இலாபத்தன்மைக் குறிகாட்டிகளும் அதாவது தேறிய வட்டி இலாபம், சொத்தின் மீதான வருவாய், பங்குரிமை மீதான இலாபம் என்பன ஆண்டுக்காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்திருந்தன.

**மூலதனம்:** பெருமளவில் உள்ளக ரீதியாக உருவாக்கப்பட்ட நிதியங்களின் இலாபங்கள் மூலமாக வங்கித்தொழில் துறையின் மூலதன நிதியங்களின் அடித்தளம் 2013 இல் 11.7 சதவீதத்தால் அதிகரித்தது. இந்த ஆண்டு காலப்பகுதியில், ஆரம்ப பங்கு வழங்கல்கள் ஊடான பங்கு மூலதனத்தின் அதிகரிப்பு, உரிமைப்பங்கு வழங்கல்கள், குறைந்த மட்ட மூலதனத் தேவைப்பாட்டை பூர்த்தி செய்வதற்காக புதிய மூலதன உட்செலுத்தல்கல், ஒதுக்குகளின் மூலதனமாக்கல், தொழிலாளர் பங்கு உடைமை திட்டங்கள் மற்றும் ஆவண பங்கிலாபங்கள் ஆகியன மூலதன நிதியங்களின் அதிகரிப்பில் 22.8 சதவீத பங்களிப்பைக் கொண்டிருந்த

வரைபடம் 8.7 வங்கித்தொழில் துறையின் இலாபக் குறிகாட்டிகள்




அதேவேளை எஞ்சிய பகுதியானது ஒதுக்குகளை உள்ளடக்கிய பிடித்துவைத்தல் இலாபம் மற்றும் நியது ஒதுக்கு நிதிகள் என்பவற்றால் கணக்கிடப்பட்டன.


2013 இற்கான கணக்காய்வு செய்யப்பட வங்கிகளின் இலாபங்கள் மூலதனத்துடன் சேர்க்கப்பட்டதைத் தொடர்ந்து மொத்த மூலதன போதுமை விகிதம் மற்றும் மைய மூலதனப் போதுமை விகிதம் என்பன முறையே ஏறத்தாழ 16.3 சதவீதம் மற்றும் 13.7 சதவீதம் என மதிப்பீடு செய்யப்பட்டது.

தற்பொழுது, வங்கித்தொழில் துறை பொதுப்பங்குரிமை மூலதன விகிதமான 13.7 சதவீதம் மற்றும் மொத்த மூலதன விகிதமான 16.0 சதவீதம் என்பனவற்றுடன் தொழிற்படுவதுடன் அவை குறைந்த மட்டத் தேவைப்பாடான முறையே 6 சதவீதம் மற்றும் 10.5 சதவீதத்திற்கு மேலாக காணப்படுவதனால், பாசல் IIIஇற்குக் கீழேயான புதிய மூலதனத் தேவைபாடுகளுக்கு இலங்கை வங்கித்தொழில் துறை இணங்குவதாகவுள்ளது.

**மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் அபிவிருத்திகள்**

இலங்கை மத்திய வங்கி, வங்கித்தொழில் துறையின் இடர்நேர்வு முகாமைத்துவத்தைப் பலப்படுத்தும் வகையில் முன்மதியுடைய வழிமுறைகளைத் தொடர்ந்தும் அமுல்படுத்தி வந்தது. பங்குசந்தைக்கான வெளிப்பாடுகளிலிருந்து எழும் இடர்நேர்வுகளை மட்டுபடுத்துவதற்காகவும் வங்கித்தொழில் கட்டமைப்பின் பாதுகாப்பு மற்றும் உறுதித்தன்மையை மேம்படுத்தும் வகையில் வங்கிகள் பொருத்தமான இடர்நேர்வு முகாமைத்துவ நியமங்களைக் கடைப்பிடிப்பதற்காகவும் பங்குசந்தைக்கான வெளிப்பாடு மீது பணிப்புரைகள் வழங்கப்பட்டன. வங்கிகளின் மூலதன போதுமையை அளவிடும் நோக்கிலும் மற்றும் பாசல் II தூண் I இன் கீழேயான குறைந்த மட்ட மூலதன தேவைப்படுகளினால் உள்ளடக்கபடாத அல்லது முழுமையாக உள்ளடக்கப்படாத இடர்நேர்வுகளை

வரைபடம் 8.8 வங்கித்தொழில் துறையின் மூலதன போதுமான தன்மை விகிதங்கள்



அட்டவணை 8.5 வங்கித்தொழில் துறையின் இலாபம்

| விடயம் | 2012 (அ) தொகை (ரூ.பில்) | 2012 (அ) சராசரி சொத்தின் % ஆக | 2013 (ஆ) தொகை (ரூ.பில்) | 2013 (ஆ) சராசரி சொத்தின் % ஆக |
|---|---|---|---|---|
| வட்டி வருமானம் | 495.6 | 10.4 | 591.4 | 10.6 |
| வட்டிச் செலவுகள் | 298.4 | 6.2 | 394.8 | 7.1 |
| **தேறிய வட்டி வருமானம்** | **197.2** | **4.1** | **196.7** | **3.5** |
| வட்டியல்லா வருமானம் | 78.9 | 1.6 | 85.7 | 1.5 |
| வெளிநாட்டு செலாவணி வருமானம் | 26.7 | 0.6 | 16.8 | 0.3 |
| வட்டியல்லா செலவுகள் | 133.5 | 2.8 | 141.9 | 2.5 |
| ஊழியர் செலவுகள் | 68.9 | 1.4 | 70.5 | 1.3 |
| கடன் இழப்பீட்டு ஒதுக்குகள் | 6.3 | 0.1 | 18.4 | 0.3 |
| **வரிக்கு முன்னரான இலாபம் (பெறுமதி சேர் வரிக்குப் பின்னரான)** | **116.8** | **2.4** | **104.7** | **1.9** |
| **வரிக்கு பின்னரான இலாபம்** | **82.7** | **1.7** | **74.6** | **1.3** |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
மூலம்: இலங்கை மத்திய வங்கி

உள்ளடக்கத் தேவையான மேலதிக மூலதனத்தை வங்கிகள் வைத்திருத்தலைத் தீர்மானித்தலுக்காகவும் தூண் 2 பாசல் II இன் மேற்பார்வை மீளாய்வு செயல்முறையின் மீது பணிப்புரைகள் வழங்கப்பட்டன.

பன்னாட்டு கணக்கியல் நியமங்களின் மீதான மாற்றங்கள் மற்றும் உரிமம் பெற்ற வங்கிகள், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் ஆகியவற்றினால் வழங்கப்பட்ட கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் என்பனவற்றைக் கருத்தில் கொண்டு காலாண்டு நிதிக் கூற்றுக்களை பத்திரிகையில் பிரசுரிப்பது மற்றும் ஆண்டுக் கணக்காய்வு செய்யப்பட நிதிக்கூற்றுக்களை தயார் செய்வதற்கான புதிய வடிவமைப்புக்கள் வெளியிடப்பட்டன. புதிய அறிக்கையிடும் வடிவமைப்புக்கள் வங்கிகள் பன்னாட்டு கணக்கியல் நியமங்களைக் கடைப் பிடிக்கும் ஏனைய நிதியியல் நிறுவனங்களுடன் சமனான நிலையில் இருப்பதற்கு வழிவகுப்பதுடன் வெளிப்படுத்துகைகள், அவற்றின் வெளிப்படையான தன்மை என்பனவற்றை மேம்படுத்தவும் உதவும். அறிக்கையிடலின் ஒருமைப்பாட்டை அதிகரிப்பது மற்றும் வங்கிகளுக்கிடையில் சுமுகமான போட்டியினை மேம்படுத்துதல் என்பனவற்றிற்காக வங்கிகள் அவற்றின் நிதிக்கூற்றுகள் மற்றும் ஏனைய வெளிப்படுத்தல் தேவைப்பாடுகளை அவர்களின் இணையத்தளங்களில் பிரசுரிக்க வேண்டும். மேலும், வங்கிகள் பிழையாக வழிநடத்தும் மற்றும் ஒழுங்கு நெறியற்ற விளம்பரங்களைப் பிரசுரிப்பதிலிருந்து விலகியிருக்கவேண்டும்.

அட்டவணை 8.6 வங்கித்தொழில் துறையின் ஒழுங்குபடுத்தல் மூலதனத்தின் உள்ளடக்கம்

| விடயம் | தொகை (ரூ.பில்) 2012 (அ) | தொகை (ரூ.பில்) 2013 (ஆ) | உள்ளடக்கம் % 2012 (அ) | உள்ளடக்கம் % 2013 (ஆ) |
|---|---|---|---|---|
| **அடுக்கு I மூலதனம்** | **378.0** | **396.8** | **100.0** | **100.0** |
| பங்கு மூலதனம் | 128.7 | 140.8 | 34.0 | 35.5 |
| நியதி ஒதுக்கு நிதிகள் | 24.1 | 25.2 | 6.4 | 6.3 |
| வைத்திருக்கப்பட்ட இலாபம் | 121.7 | 114.6 | 32.2 | 28.9 |
| பொது மற்றும் ஏனைய ஒதுக்குகள் | 126.3 | 128.0 | 33.4 | 32.3 |
| ஏனையவை | (0.1) | 11.6 | 0.0 | 2.9 |
| ஒழுங்குபடுத்தப்பட்ட சரிப்படுத்தல்கள் | (22.6) | (23.3) | (6.0) | (5.9) |
| **அடுக்கு II மூலதனம்** | **46.8** | **76.3** | **100.0** | **100.0** |
| மீள் மதிப்பீட்டு ஒதுக்குகள் | 8.9 | 8.8 | 19.4 | 11.6 |
| கீழ்மட்ட தவணை படுகடன் | 38.9 | 69.7 | 83.3 | 91.4 |
| பொது ஏற்பாடு மற்றும் ஏனையவை | 13.5 | 13.4 | 28.9 | 17.5 |
| ஒழுங்குபடுத்தப்பட்ட சரிப்படுத்தல்கள் | (14.6) | (15.7) | (31.2) | (20.6) |
| **மொத்த ஒழுங்குபடுத்தப்பட்ட அடிப்படை மூலதனம்** | **423.7** | **473.1** | | |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
மூலம்: இலங்கை மத்திய வங்கி

நாட்டின் பொருளாதார செயல்முறைகளின் விரிவாக்கத்திற்கான நிதியின் பொருட்டு வளர்ச்சியடைந்துவரும் கேள்விக்கு உதவும் முகமாக திரவத்தன்மை சொத்துக்களின் வரைவிலக்கணம் மற்றும் வேளாண்மைக்கான கடன் கொடுத்தல் மீதான வரைவிலக்கணம் என்பன விரிவாக்கப்பட்டதுடன் வட்டி வீதங்கள் மீது உச்சவரம்பு விதிக்கப்பட்டது. இலங்கை அரசினால் வழங்கப்பட்ட நாட்டுக்கான பன்னாட்டு முறிகளில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் முதலீடு செய்வதற்கு அனுமதிக்கப்பட்டன. வங்கி மேற்பார்வைத் திணைக்களம் பணிப்பாளரின் முன்னொப்புதல் இல்லாமல் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் அரச பிணைகள், திறைசேரி உண்டியல்கள், இலங்கை மத்திய வங்கி பிணைகள் மற்றும் நிலையான வைப்புக்கள் என்பனவற்றிக்கு எதிராக உரிமம் பெற்ற நிதிக்கம்பனிகளுக்கு நிதியியல் கடன்கள் கொடுக்க முடியாதென இருந்த கட்டுப்பாடு நீக்கப்பட்டது. வங்கி மேற்பார்வை திணைக்களப் பணிப்பாளரின் முன் அனுமதியுடன் அசையாச் சொத்துக்களை விற்பனை செய்தல், மாற்றியமைத்தல், ஒப்படைத்தல் அல்லது அப்புறப்படுத்த வங்கிகளை அனுமதிக்கும் வகையில் தற்போதுள்ள பணிப்புரை திருத்தியமைக்கப்பட்டுள்ளது. வேறுபட்ட துறைகளிலிருந்து அனுபவங்கள் மற்றும் தகமைகளைப் பெற்றுக் கொண்ட பணிப்பாளர்களை வங்கியின் தொழிற்பாட்டில் ஈடுபடுத்தும் விதத்தில் 10ற்கு மேலாக குறிப்பிடப்பட்ட வியாபார நிறுவனங்களின் பணிப்பாளர் பதவியினை கொண்டிருப்பது தொடர்பாக கம்பனி ஆளுகைப் பணிப்புரைகளிலிருந்த கட்டுப்பாடு நீக்கப்பட்டது. மேலும், உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டு செலாவணி கடன் பெறுதல்கள் மீதான ஒழுங்குமுறைப்படுத்தல் எல்லைகள் தாராளமாக்கப்பட்டன. அதேவேளை பெண்களின் தொழில் முனைவு முயற்சி, குறைந்த செலவிலான வீடமைப்பு அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் நிலைத்திருக்கக்கூடிய சக்தி மூல திட்டங்களிலிருந்தான வலுசக்தி என்பன முதலீட்டு நிதிக் கணக்கின் நிதிகளைப் பாவிப்பதற்கான அனுமதியளிக்கப்பட்ட துறைகளாக அடையாளப்படுத்தப்பட்டன.

மேற்பார்வைக் கட்டமைப்புக்கு மேலதிகமாக, நிதியியல் பொருட்கள் தொடர்பில் பொதுமக்களுக்கு கிடைக்கக்கூடிய பாதுகாப்பு வலையமைப்பாக இலங்கை வைப்புக்காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவு திட்டம் என்பனவற்றையும் பிரதான கூறுகளாக சேர்த்துக்கொண்டுள்ளது. 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 33 வங்கிகள் மற்றும் 48 நிதிக்கம்பனிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய 81 அங்கத்துவ நிறுவனங்களை இத்திட்டம் கொண்டுள்ளதுடன் வைப்புக்காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவு நிதியானது ஏறத்தாழ ரூ.12.5 பில்லியன்களாக இருந்தது.

மொத்தத்தில், 2013ஆம் ஆண்டு காலப்பகுதியில் வங்கித்தொழில் துறையின் செயற்பாடு மற்றும் உறுதித்தன்மை என்பன குறிப்பிடத்தக்களவு வலிமையடைந்திருந்ததுடன் வங்கித்தொழில் துறையில் வைப்பாளர் மற்றும் முதலீட்டாளரின் நம்பிக்கைத் தொடர்ந்தும் உறுதிபடுத்திய பொருத்தமான கொள்கை முயற்சிகள் மற்றும் முன்மதியுடைய ஒழுங்குமுறை நடவடிக்கைகளால் தாங்கப்பட்டது. கடந்த காலங்களில் கட்டமைப்பு மாற்றங்கள், வங்கித்துறையானது உள்ளாகியிருந்த போதிலும் எதிர்பார்த்த வலுவான மற்றும் தளராது நாட்டின் நீடித்த பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவு கொடுப்பதற்காக வங்கித்தொழில் துறை அதன் முழு உள்ளாற்றலுடன் வளர்வதற்கு மேலதிக வினைத்திறன் மாற்றங்கள் தேவைப்படுகின்றன.

## உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள்

**உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் துறையினரினால் வழங்கப்பட்ட கடன் வசதிகளின் வளர்ச்சி மெதுவடைந்தமைக்கு மத்தியிலும் துறையின் அதிகரித்த சொத்துக்களுடன் இத்துறையானது 2013இல் விரிவடைந்திருந்தது.** இலங்கையின் நிதியியல் முறைமையின் 7 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் துறையானது வங்கித்தொழில் முறைமைக்குத் தொடர்ந்தும் உதவியாக இருந்தது. நடைமுறைப்படுத்தப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகளின் காத்திரமான தன்மையானது கட்டியெழுப்பப்பட்ட துறையின் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மை மற்றும் ஆற்றல் வாய்ந்த தன்மை என்பவற்றில் பிரதிபலிக்கப்பட்டது. எனினும், தங்கத்தின் சந்தை விலைகளில் ஏற்பட்ட தளம்பல்கள் மற்றும் 2012ஆம் ஆண்டு காலப்பகுதியில் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளால் வழங்கப்பட்ட ஒப்பீட்டளவில் உயர்ந்தளவான கடன் வழங்கல் வீதங்கள் என்பன செயற்படாக் கடன்களின் அதிகரிப்புக்கு வழிவகுத்திருந்தன. இது அடித்தளத்தை எதிர்மறையாகப் பாதித்த அதேவேளை அதிகரித்த தொழிற்பாட்டுச் செலவுகள் இலாபத்தன்மையை மேலும் பாதித்திருந்தன.

வரும் ஆண்டுகளில் எதிர்பார்க்கப்படும் உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளின் வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு, பொருளாதார நடவடிக்கைகளின் விரிவாக்கத்திற்கு வசதியளிப்பதற்கும் இடர்நேர்வுகளை முகாமைப்படுத்துவதற்கும் தாங்கிக் கொள்வதற்குமான ஆற்றலை உறுதிப்படுத்தும் பொருட்டு உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் துறையின் இயலளவைக் கட்டியெழுப்புவதற்காக இலங்கை மத்திய வங்கி பல்வேறு வழிமுறைகளைக் கையாண்டிருந்தது. உரிமம் பெற்ற வர்த்தக வங்கி மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் ஆகியவற்றின் இணைப்பை மேம்படுத்துவதற்கு மத்திய வங்கியால் எடுக்கப்பட்ட வழிமுறைகளில் இந்நடவடிக்கை முக்கியமாக இருந்தது.

## வியாபார விரிவாக்கம்

**பாரிய செயல் விளைவு:** இரண்டு சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் நிலையை அடைந்தமை, ஒரு உரிமம் பெற்ற நிதிக் கம்பனி இன்னுமொரு உரிமம் பெற்ற நிதிக் கம்பனியுடன் இணைக்கப்பட்டமை மற்றும் ஒரு சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் உரிமம் பெற்ற நிதிக் கம்பனியுடன் இணைக்கப்பட்டமையைத் தொடர்ந்து 2013 இறுதியில் இத்துறையானது 48 உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளையும் 10 சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளையும் கொண்டிருந்தது. அதேவேளை, உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் துறையின் கிளை வலையமைப்பானது 2013இல் 88 இனால் 1,060 இற்கு விரிவடைந்தது. புதிய கிளைகளில் 61இற்கு மேல் மாகாணத்திற்கு வெளியே திறக்கப்பட்டிருந்தன.

## சொத்துக்களும் பொறுப்புக்களும்

**சொத்துக்கள்:** 2013ஆம் ஆண்டுப் பகுதியில் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் துறையின் மொத்தச் சொத்துத் தளமானது ரூ.717 பில்லியனுக்கு 20 சதவீதத்தினால் அதிகரித்தது. ஒப்பிடுகையில், உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் துறையின் சொத்துத் தளமானது 2012இல் 22 சதவீதமான வளர்ச்சியைப் பதிவு செய்திருந்தது. சொத்துத் தளத்தின் விரிவாக்கத்திற்கான முக்கிய பங்களிப்புக் காரணியாக கடன் வசதிகள் சொத்துப்பட்டியல் மற்றும் திரவச் சொத்துக்களின் வளர்ச்சி காணப்பட்டது. எனினும், கடன்

**அட்டவணை 8.7 மாகாண ரீதியான உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகை கம்பனிகளின் கிளைப் பரம்பல்**

| மாகாணம் | முடிவில் 2012 | முடிவில் 2013 (அ) |
|---|---|---|
| மேல் | 316 | 344 |
| தென் | 112 | 119 |
| சபரகமுவ | 76 | 78 |
| வட மேல் | 99 | 112 |
| மத்திய | 107 | 118 |
| ஊவா | 52 | 51 |
| வட மத்திய | 69 | 75 |
| கிழக்கு | 78 | 87 |
| வட | 63 | 76 |
| **மொத்தம்** | **972** | **1,060** |


(அ) தற்காலிகமானது

மூலம்: இலங்கை மத்திய வங்கி

வசதிகளின் வளர்ச்சியானது 2012இன் 21 சதவீதத்திலிருந்து 2013இல் 17 சதவீதத்திற்கு மெதுவடைந்ததுடன் கடன் வசதி சொத்துப்பட்டியல் 2013இன் இறுதியில் ரூ.553 பில்லியனாக இருந்தது. நிதிக் குத்தகை, வாடகைக் கொள்வனவுகள் மற்றும் ஏனைய பிணையிடப்பட்ட முற்பணங்கள் என்பன கடன் வசதி சொத்துப்பட்டியலின் பெரும் பங்கிற்கு வகைகூறியதுடன் இவை கடன் வசதி சொத்துப்பட்டியலின் முறையே 46 சதவீதம், 22 சதவீதம் மற்றும் 22 சதவீதத்திற்கு வகைகூறின. கடன் வசதி சாதனங்களிடையே, ஏனைய பிணையிடப்பட்ட கடன்கள், வைப்புக்களுக்கெதிரான கடன்கள் மற்றும் நிதிக் குத்தகைகள் என்பன முறையே 63 சதவீதம், 26 சதவீதம் மற்றும் 16 சதவீதமான உயர்ந்த வளர்ச்சி வீதங்களைப் பதிவு செய்தன. இத்துறையின் முதலீட்டுச் சொத்துப்பட்டியல் 2012இல் பதிவு செய்யப்பட்ட 14 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 3 சதவீதமான சிறிதளவு வளர்ச்சியைப் பதிவு செய்தன. ஏனைய சொத்துக்கள் பிரதானமாக திரவச் சொத்துக்கள், வியாபார இருப்புக்கள் மற்றும் நிலையான சொத்துக்களை உள்ளடக்கியிருந்தன.

**பொறுப்புக்கள்:** உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளின் நிதியிடலின் முக்கிய மூலமாக வைப்புக்கள் காணப்பட்ட அதேவேளையில், சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் நிதியிடலின் முக்கிய மூலமாகக் கடன்பாடுகள் விளங்கி, உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் துறையின் மொத்தப் பொறுப்புக்களில் முறையே 47 சதவீதம் மற்றும் 27 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தின. உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளின் வைப்புக்கள் 2012இன் 37 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2013 இறுதியில் ரூ.337 பில்லியனுக்கு 33 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. ஒரு சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனி உரிமம் பெற்ற நிதிக் கம்பனியின் நிலையைப் பெற்றமை, உரிமம் பெற்ற நிதிக் கம்பனித் துறையின் வைப்புத் தள அதிகரிப்பிற்கு வழிவகுத்தது. உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளின் வைப்புக்களைப் பொறுத்தவரை, தவணை வைப்புக்கள் மொத்த வைப்புக்களில் 98 சதவீதத்திற்கு வகைகூறின. 2013 இறுதியில் இத்துறையில் காணப்பட்ட மொத்தக் கடன்பாடுகள் ரூ.192 பில்லியனை அடைந்து, 2012இல் பதிவு செய்யப்பட்ட 3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 9 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. 2013ஆம் ஆண்டு காலப்பகுதியில் 11 உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் ரூ.21.9 பில்லியன் பெறுமதியான பட்டியலிடப்பட்ட தொகுதிக்கடன்களை வழங்கின. கடன் வசதிகளுக்கான வைப்புக்கள் மற்றும் கடன்பாடுகள் விகிதம் 2012இன் 110 சதவீதத்திலிருந்து 2013இல் 104 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து, துறையின் கடன் வழங்கல் நடவடிக்கைகளுக்கான கேள்வியிலதன வீழ்ச்சியைக்

**வரைபடம் 8.9 உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகை கம்பனிகளின் சாதனங்கள் வாரியான மொத்த கடன் வசதிகள்**




**அட்டவணை 8.8 உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகை கம்பனிகளின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் உள்ளடக்கம்**

| விடயம் | 2012 (அ) | | 2013 (ஆ) | | மாற்றம் (%) | |
|---|---|---|---|---|---|---|
| | ரூ.பில் | பங்கு % | ரூ.பில் | பங்கு % | 2012 | 2013 (ஆ) |
| **சொத்துக்கள்** | | | | | | |
| கடன் வசதிகள் | 471.7 | 79.1 | 553.1 | 77.1 | 21.4 | 17.3 |
| நிதிக் குத்தகை | 214.9 | 36.0 | 249.1 | 34.7 | 29.4 | 15.9 |
| வாடகைக் கொள்வனவு | 123.0 | 20.6 | 122.2 | 17.0 | 3.9 | (0.7) |
| முதலீடுகள் | 15.4 | 2.6 | 15.8 | 2.2 | 14.1 | 2.5 |
| ஏனையவை | 109.6 | 18.4 | 148.8 | 20.7 | 24.5 | 35.8 |
| **பொறுப்புக்கள்** | | | | | | |
| மொத்த வைப்புக்கள் | 254.1 | 42.6 | 337.3 | 47.0 | 36.6 | 32.7 |
| மொத்த பெறுகைகள் | 176.0 | 29.5 | 192.3 | 26.8 | 2.6 | 9.3 |
| மூலதன கூறுகள் | 94.9 | 15.9 | 97.4 | 13.6 | 23.2 | 2.6 |
| **மொத்த நிதிகள்** | **525.0** | **88.0** | **627.0** | **87.4** | **20.8** | **19.4** |
| ஏனையவை | 71.6 | 12.0 | 90.6 | 12.6 | 29.6 | 26.5 |
| **மொத்த சொத்துக்கள்/ பொறுப்புக்கள்** | **596.6** | **100.0** | **717.6** | **100.0** | **21.8** | **20.3** |

(அ) திருத்தப்பட்டது

(ஆ) தற்காலிகமானது

மூலம்: இலங்கை மத்திய வங்கி

குறித்துக்காட்டின. துறையின் மூலதனமானது 2012இன் 23 சதவீதமான அதிகரிப்புடன் ஒப்பிடும் போது 2013இல் ரூ.97 பில்லியனுக்கு 3 சதவீதத்தினால் சிறிதளவால் அதிகரித்தமைக்குத் துறையின் இலாபத்தன்மையிலான வீழ்ச்சியே பிரதான காரணமாகும்.


## இடர்நேர்வு முகாமைத்துவம்

**கொடுகடன் இடர்நேர்வு:** செயற்படாக் கடன்வசதிகளின் மொத்தத் தொகை 2012இன் ரூ.23 பில்லியனிலிருந்து 2013ஆம் ஆண்டு காலப்பகுதியில் ரூ.37 பில்லியனுக்கு அதிகரித்தது. மேலும், வெளிநின்ற மொத்தக் கடன் வசதிகள் தொடர்பாக செயற்படாக் கடன் வசதிகளுக்கான வெளிப்படுத்துகை 2012இன் 5.0 சதவீதத்திலிருந்து 2013 இறுதியில் 6.7 சதவீதத்திற்கு அதிகரித்தமைக்கு, செலுத்தத் தவறிய கடன்களிலான அதிகரிப்பே முக்கிய காரணமாகும். உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் துறை செயற்படாக் கடன் வசதிகளின் 92 சதவீதத்திற்கு வகைகூறியதுடன் மீள்கட்டமைக்கப்பட்ட கம்பனிகள் செயற்படாக் கடன் வசதிகளின் முக்கிய பங்களிப்பாளர்களாக விளங்கின. கடன் இழப்பிற்கான ஏற்பாடுகளை பொறுத்தவரையில் தேறிய செயற்படாக் கடன் வசதிகளின் விகிதம் 2013 இறுதியில் 2.5 சதவீதமாகக் காணப்பட்டது. செயற்படாக் கடன் வசதிகளுக்கான மொத்த ஏற்பாட்டு உள்ளடக்கம் முன்னைய ஆண்டின் 55.6 சதவீதத்திலிருந்து 2013இல் 56.1 சதவீதத்திற்கு சிறிதளவால் அதிகரித்தது.

**சந்தை இடர்நேர்வு:** இத்துறையானது 2013 ஆண்டு காலப்பகுதியில் சந்தை வட்டி வீதங்களிலான தளம்பல்களின் காரணமாக இடர்நேர்வுகளுக்கு முகம் கொடுத்தது. எனினும், பங்குரிமை மூலதன விலைகள் மற்றும் செலாவணி வீதங்களின் தளம்பல்களின் காரணமாக உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளுக்கு ஏற்படக்கூடிய இடர்நேர்வுகள், பங்குரிமை மூலதனச் சந்தை மற்றும் வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல்களுக்கான குறைந்தளவு வெளிப்படுத்துகை காரணமாக குறைந்த மட்டத்தில் காணப்பட்டன. குறைந்து செல்லும் வட்டி வீத அமைப்பானது துறையின் தேறிய வட்டி வருமானத்தை எதிர்மறையாகப் பாதித்ததுடன், இது முன்னைய ஆண்டின் ரூ.40 பில்லியனிலிருந்து 2013 ஆண்டு காலப்பகுதியில் ரூ.44 பில்லியனுக்கு 10 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. இதற்கு வட்டி வீத உணர்திறனுடைய சொத்துக்களின் குறைந்த வட்டியுழைக்கும் இயலளவு, கொடுகடன் வளர்ச்சியின் வீழ்ச்சி மற்றும் வட்டி வீத உணர்திறனுடைய பொறுப்புக்கள் என்பனவே முக்கிய காரணமாகும். துறையின் மொத்தச் சொத்துக்களுக்கான சதவீதமான தேறிய வட்டி வருமானத்தைக் கணிக்கும் வட்டி இலாபமானது முன்னைய ஆண்டின் 7.4 சதவீதத்திலிருந்து 2013இல் 6.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

**திரவத்தன்மை இடர்நேர்வு:** 2013 இறுதியில் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் துறையில் திரவச் சொத்துக்களின் கிடைப்பனவு, குறித்துரைக்கப்பட்ட குறைந்தபட்சத் தேவைப்பாடான ரூ.39 பில்லியனுடன் ஒப்பிடுகையில், ரூ.18 பில்லியனால் மிகையாகக் காணப்பட்டது. மொத்தச் சொத்துக்களுக்கன திரவச் சொத்துக்களின் விகிதம் 2012இல் காணப்பட்ட 6 சதவீதத்திலிருந்து 2013இல் 8 சதவீதத்திற்கு அதிகரித்தது. இதற்கு கொடுகடன் வளர்ச்சியில் ஏற்பட்ட மெதுவடைவும் துறையின் வைப்புக்களிலான உறுதியான வளர்ச்சியும் காரணமாக இருக்கலாம். துறையின் திரவச் சொத்துக்கள் 2012இன் ரூ.11 பில்லியன் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2013இல் ரூ.24 பில்லியனினால் அதிகரித்தன. இது பிரதானமாக திறைசேரி உண்டியல்களிலான அதிகரித்த முதலீடுகளினதும் உரிமம் பெற்ற வங்கிகளின் வைப்புக்களினதும் விளைவாக ஏற்பட்டதாகும்.

வரைபடம் 8.10 உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகை கம்பனிகள் துறையின் செயற்படா கொடுகடன்கள் மற்றும் ஏற்பாட்டுக் காப்பீடு



## வளங்கள்

**இலாபத்தன்மை:** தொழிற்பாட்டுச் செலவினம் மற்றும் ஒதுக்குத் தேவைப்பாடுகள் அதிகரித்தமையின் முக்கிய காரணமாக 2013ஆம் ஆண்டு காலப்பகுதியில் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளின் இலாபத்தன்மை வீழ்ச்சியடைந்தது. இத்துறை 2012இல் பதிவு செய்த ரூ.15 பில்லியன் வரிக்குப் பின்னராக இலாபத்துடன் ஒப்பிடுகையில் 2013இல் வரிக்குப் பின்னரான இலாபமாக ரூ.8 பில்லியனைப் பதிவு செய்தது. தேறிய வட்டி வருமானத்திலான அதிகரிப்புடன் இணைந்து வட்டியல்லா வருமானம் மற்றும் வட்டியல்லாச் செலவினமும் முறையே ரூ.4 பில்லியனாலும் ரூ.9 பில்லியனாலும் அதிகரித்தன. கடன் இழப்பு ஏற்பாடுகள் 2012இன் ரூ.3 பில்லியனான அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2013இல் ரூ.7 பில்லியனால் அதிகரித்தன. துறையின் இலாபத்தன்மை குறிகாட்டிகளான சொத்துக்கள் மீதான வருவாயும் பங்குரிமை மூலதனத்தின் மீதான வருவாயும் 2012இன் முறையே 4 சதவீதம் மற்றும் 19 சதவீதத்திலிருந்து 2013இல் 2 சதவீதத்திற்கும் 8 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தன.

**மூலதனம்:** 2012இல் 27 சதவீதத்தினால் அதிகரித்திருந்த மூலதன நிதியங்கள் 2013இல் 10 சதவீதத்தினால் மேலும் அதிகரித்தமைக்கு உள்ளக ரீதியாக உருவாக்கப்பட்ட நிதியங்களான இலாபங்கள் 2013 இறுதியில் ரூ.95 பில்லியனாகக் காணப்பட்டமையே முக்கிய காரணமாகும். துறையின் மூலதனப் போதுமை விகிதங்கள் இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களின் வளர்ச்சியினால் குறைவடைந்த போதும் தேவைப்படுத்தப்பட்ட குறைந்தபட்ச மட்டங்களுக்கு மேலேயே காணப்பட்டன. இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களின் சதவீதமாக மொத்த மூலதனப் போதுமை விகிதம் 2012 இறுதியின் 16 சதவீதத்திலிருந்து 2013 இறுதியில் 15 சதவீதத்திற்கு குறைவடைந்தது. இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களின் சதவீதமாக மைய மூலதன விகிதமும் 2012இன் 15 சதவீதத்திலிருந்து 2013இல் 13 சதவீதத்திற்கு குறைவடைந்தது. அதேபோன்று, மொத்த வைப்புக்களுக்கான உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளின் மூலதன நிதியங்களின் விகிதமும் கூட 2012 இறுதியின் 28 சதவீதத்திலிருந்து 2013இல் 23 சதவீதத்திற்கு குறைவடைந்தது.

**அதிகாரமின்றி நிதி வியாபாரத்தினை மேற்கொள்வதற்கு எதிராக நடவடிக்கை:** மத்திய வங்கி, அதிகாரமின்றி நிதி வியாபாரத்தில் ஈடுபட்டு வருவதாகக் குற்றம் சாட்டப்பட்ட நிறுவனங்கள் மீதான புலனாய்வுகளைத் தொடர்ந்து மேற்கொண்டுவரும் அதேவேளை, தற்பொழுது நடைபெற்றுவரும் வழக்குகள் தொடர்பில் நீதிமன்றங்களுக்கு உதவிகளையும் வழங்கியது. 2013ஆம் ஆண்டு காலப்பகுதியில் அதிகாரமளிக்கப்படாத நிதி நிறுவனங்களில் முதலிடுவதிலுள்ள இடர்நேர்வுகள் தொடர்பாக விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள் மூலம் பொதுமக்களுக்கு அறிவூட்டுவதற்காக நாடளாவிய ரீதியிலான ஆய்வரங்குகள்/ செயலமர்வுகள் மத்திய வங்கியினால் நடாத்தப்பட்டன. அதிகாரமளிக்கப்படாத நிதி நிறுவனங்களில் முதலீடு செய்வதன் இடர்நேர்வு தொடர்பான விசேட செய்திகள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பிராந்திய பணியூடாகவும் தமிழ் மற்றும் சிங்கள மொழியில் ஒளிபரப்பப்பட்ட தொலைக்காட்சி விளம்பரங்களூடாகவும் பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. மேலும், உரிமம் பெற்ற வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளின் பட்டியலைக் கொண்ட சுவரொட்டிகள் தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களிலுள்ள கிராம சேவகர்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டதுடன் கண்டறியப்பட்ட நடைமுறைக்குச் சாத்தியமற்ற திட்டங்களின் இடர்நேர்வுகள் தொடர்பாக பொதுமக்களுக்கு அறிவூட்டுவதற்காக 2013இன் முன்னரைப் பகுதியில் சிறப்பு அறிவித்தல்கள் அனைத்து மும்மொழிகளிலும் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டன.


**அட்டவணை 8.9 உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகை கம்பனிகளின் துறையின் வருமானம் மற்றும் செலவுகளின் உள்ளடக்கம்**

| வகை | தொகை (ரூ.பில்) | | வளர்ச்சி | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | 2012 (அ) | | 2013 (ஆ) | |
| | 2012 (அ) | 2013 (ஆ) | தொகை (ரூ.பில்) | % | தொகை (ரூ.பில்) | % |
| வட்டி வருமானம் | 92.9 | 117.3 | 24.8 | 36.5 | 24.5 | 26.4 |
| வட்டி செலவுகள் | 52.6 | 73.2 | 17.5 | 49.7 | 20.7 | 39.3 |
| **தேறிய வட்டி வருமானம்** | **40.3** | **44.1** | **7.4** | **22.4** | **3.8** | **9.5** |
| வட்டியல்லா வருமானம் | 13.3 | 17.2 | (3.9) | (22.6) | 3.9 | 29.2 |
| வட்டியல்லா செலவுகள் | 30.1 | 39.3 | 4.1 | 15.9 | 9.3 | 30.8 |
| ஊழியர் செலவுகள் | 11.0 | 13.6 | 2.3 | 26.0 | 2.6 | 23.5 |
| கடன் இழப்பீட்டு ஏற்பாடுகள் (தேறிய)) | 1.5 | 8.1 | 3.0 | (205.2) | 6.6 | (436.3) |
| **வரிக்கு முந்திய இலாபம்** | **22.7** | **13.8** | **(2.9)** | **(11.5)** | **(8.8)** | **(38.9)** |
| வரி | 6.5 | 6.1 | (0.2) | (2.4) | (0.3) | (5.2) |
| **வரிக்கு பிந்திய இலாபம்** | **14.9** | **7.7** | **(4.0)** | **(21.3)** | **(7.2)** | **(93.6)** |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலம்: இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 8.11 உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகை கம்பனிகளின் துறையின் இலாபக் குறிகாட்டிகள்**




8

நிதியியல்துறை செயலாற்றமும் முறைமை உறுதித்தன்மையும்

அட்டவணை 8.10 உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகை கம்பனிகளின் ஒழுங்குபடுத்தல் மூலதனத்தின் உள்ளடக்கம்

| விடயம் | தொகை (ரூ.பில்) | | உள்ளடக்கம் % | |
|---|---|---|---|---|
| | 2012 (அ) | 2013 (ஆ) | 2012 (அ) | 2013 (ஆ) |
| **அடுக்கு I : மைய மூலதனம்** | **72.8** | **77.6** | **100** | **100** |
| வழங்கப்பட்ட மற்றும் செலுத்தப்பட்ட சாதாரண பங்குகள் / பொதுப்பங்குகள் (பணம்) | 53.0 | 56.5 | 73 | 73 |
| திரளாத மற்றும் மீட்க முடியாத முன்னுரிமைப் பங்குகள் | 0.0 | 1.8 | 0 | 2 |
| பங்கு மேலதிகப் பெறுமதி | 2.6 | 0.2 | 4 | 0 |
| நியதி ஒதுக்கு நிதிகள் | 6.7 | 8.1 | 9 | 10 |
| பொது மற்றும் ஏனைய கட்டற்ற ஒதுக்குகள் | 17.0 | 18.0 | 23 | 23 |
| ஏனையவை | (6.5) | (6.9) | (9) | (9) |
| **அடுக்கு II : துணை மூலதனம்** | **4.7** | **9.3** | **100** | **100** |
| தகுதியுடைய மீள்மதிப்பீட்டு ஒதுக்குகள் | 2.5 | 2.6 | 53 | 28 |
| பொது ஏற்பாடுகள் | 0.4 | 0.2 | 8 | 2 |
| தகுதியுடைய ஒப்புதலளிக்கப்பட்ட கீழ்மட்ட தவணை படுகடன் | 0.9 | 5.8 | 18 | 62 |
| ஏனையவை | 1.0 | 0.8 | 21 | 8 |
| ஒழுங்குபடுத்தப்பட்ட சரிப்படுத்தல்கள் | (2.5) | (3.2) | | |
| **மொத்த ஒழுங்குபடுத்தப்பட்ட அடிப்படை மூலதனம்** | **75.0** | **83.8** | | |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலம்: இலங்கை மத்திய வங்கி

**மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் அபிவிருத்திகள்:** பிரதானமான மேற்பார்வைப் பொறிமுறையாக உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளின் தளத்திலான மற்றும் உடனடியான பரீட்சிப்புக்கள் இடர்நேர்வை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையுடன் நடத்தப்பட்டதுடன் பரீட்சிப்புக்களில் கண்டறியப்பட்ட விடயங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விதந்துரைப்புக்களை குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் நடைமுறைப்படுத்துமாறு தொடர்பான கம்பனிகள் அறிவுறுத்தப்பட்டிருந்தன. மேலும், தொடர்ச்சியான தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்ட அதேவேளை, இடர்நேர்வுகளை அடையாளம் கண்டு அவற்றைத் தடுக்கும் வழிமுறைகளை உரிய காலத்தில் மேற்கொள்வதற்காகவுள்ள இடர்நேர்வுத் தரமிடல் மாதிரிகள் மற்றும் நேரகாலத்துடன் எச்சரிக்கைப்படுத்தும் முறைமை என்பன நடைமுறைப்படுத்தப்பட்டன. 2013ஆம் ஆண்டு காலப்பகுதியில் மத்திய வங்கி பல கொள்கை வழிமுறைகளையும் ஒழுங்குமுறைப் படுத்தல்களையும் அறிமுகப்படுத்தியதுடன் ஏற்கனவேயிருக்கும் அமைப்பியல் மாற்றங்கள் பணிப்புரையின் செயற்பரப்பு விரிவாக்கப்பட்டது. நிதிக் கம்பனிகளின் தொடர்பான தரப்பினர்களின் கடன்களை பதிவழிப்பது தொடர்பில் நாணயச் சபையின் முன்னொப்புதலைப் பெறவேண்டும் என்ற கட்டாயத் தேவைப்பாடு, என்ற விடயங்களில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளரின் ஒப்புதலைப் பெறவேண்டும் என்று தேவைப்படுத்தும் ஒரு தேவைப்பாட்டின் மூலம் பதிலிடப்பட்டது. குறிப்பாக திரவத்தன்மை மற்றும் வட்டி வீதங்களைக் கையாள்வதற்காக நிதிக் கம்பனிகளால் வழங்கப்படும் படுகடன் சாதனங்கள் தொடர்பில் மேற்பார்வைக் கட்டமைப்பொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 32 மற்றும் 39 அத்துடன் இலங்கை நிதியியல் அறிக்கையிடும் நியமங்கள் 7 என்பவற்றைப் பின்பற்றுவது தொடர்பான வழிகாட்டலானது, உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளும் பங்கிலாப பகிர்ந்தளிப்பிற்கு வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் பணிப்பாளரின் முன்னொப்புதலைத் தேவைப்படுத்துவதுடன் கம்பனி ஆளுகை பணிப்புரையிலுள்ள வெளிப்படுத்தல் தேவைப்பாடுகளுக்குத் தொடர்பான திருத்தங்கள் உள்ளடக்கப்பட்டன. மேலும், உரிமம் பெற்ற நிதிக் கம்பனியொன்றினால் செலுத்தப்பட வேண்டிய ஆண்டு உரிமக் கட்டணமும் திருத்தப்பட்டது.

## அரச பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்கள்

**முதனிலை வணிகர்களின் செயலாற்றம் 2013இலும் தொடர்ந்து முன்னேற்றமடைந்தது.** மொத்தச் சொத்துக்கள், மூலதன நிதியங்கள் மற்றும் இலாபங்கள் என்பன முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2013இல் உயர்ந்த வளர்ச்சியைப் பதிவு செய்தன. அரச பிணையங்களுக்கான வங்கித்தொழில் துறையிலிருந்தான அதிகரித்த கேள்வி மற்றும் பணவீக்கத்திலான மெதுவடைவு என்பன, குறிப்பாக 2013இன் பிற்பகுதியில் விளைவு வளையியில் படிப்படியான கீழ் நோக்கிய பெயர்வுக்கு வழிவகுத்ததுடன், இது துறையானது வர்த்தகப்படுத்தல் சொத்துப்பட்டியல் மீது உயர்ந்த மூலதன இலாபங்கள் உழைப்பதை இயலச் செய்த அதேவேளை, 2013இல் அரச பிணையங்களின் மொத்த உடைமைகளை அதிகரித்திருந்தது. மீளாய்வுக்குரிய ஆண்டில், முதனிலை ஏலங்களில் அரச பிணையங்களுக்கான போட்டித்தன்மை மற்றும் மொத்த உதவுத்தொகை மட்டம் என்பவற்றை அதிகரிக்கும் நோக்குடன், தனியான முதனிலை வணிகர்களுக்கு ஏற்புடைத்தான குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாட்டிற்கிணங்க, மூலதனத்தைப் பேண வேண்டிய தேவையின்றி அரச பிணையங்களில் முதனிலை வணிகர்களாகத் தொழிற்படுவதற்கு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் அனுமதிக்கப்பட்டன. இதன்படி, பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேசன் பிஎல்சி மற்றும் த ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பரேசன் ஆகிய இரண்டு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் ஆண்டு காலப்பகுதியில் முதனிலை வணிகர்களாக நியமிக்கப்பட்டன. வங்கியல்லா முதனிலை வணிகரான பேர்ப்பசுவல் ரெஷரீஸ் லிமிடெட்டின் நியமனத்தையடுத்து முதனிலை வணிகர்களின் மொத்த எண்ணிக்கை 15 இற்கு

அதிகரித்ததுடன் இது உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் 7 முதனிலை வணிகர் பிரிவுகளையும் (வங்கி முதனிலை வணிகர் பிரிவுகள்) 8 தனியான முதனிலை வணிகர்களையும் கொண்டிருந்தது.

**சொத்துக்களும் பொறுப்புக்களும்:** 2013இல் முதனிலை வணிகர் துறையின் மொத்தச் சொத்துக்கள் 33.5 சதவீதத்தினால் ரூ.213.6 பில்லியனுக்கு அதிகரித்தன. ஒப்பிடுகையில், முதனிலை வணிகர் துறையின் சொத்துக்கள் 2012இல் 20.6 சதவீதத்தினால் அதிகரித்திருந்தன. துறையின் மொத்தச் சொத்துக்களில் 98.1 சதவீதமானவற்றிற்கு அரச பிணையங்கள் வகைகூறின. வர்த்தகப்படுத்தலுக்கான பிணையங்கள், விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாக இருக்கும் பிணையங்கள், முதலீட்டுச் சொத்துப்பட்டியல் மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவின் கீழான பிணையங்கள் என்பவற்றைக் கொண்ட அரச பிணையங்களின் மொத்தச் சொத்துப்பட்டியல் ரூ.209.6 பில்லியனாக விளங்கி, 2012ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 31.5 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. அரச பிணையங்களின் வர்த்தகப்படுத்தல் சொத்துப்பட்டியல் 2012இன் இறுதியின் ரூ.87.1 பில்லியனிலிருந்து 2013இல் 145.9 பில்லியனுக்கு 67.6 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. மொத்தச் சொத்துப்பட்டியலின் அதிகரிப்பிற்கு இதுவே முக்கிய பங்களிப்புக் காரணியாக விளங்கியது. எனினும், முதலீட்டுச் சொத்துப்பட்டியலானது 2012இன் இறுதியில் வைத்திருக்கப்பட்ட சொத்துப்பட்டியலுடன் ஒப்பிடுகையில் 2013இல் 7.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இது பிரதானமாக வர்த்தகப்படுத்தலுக்கான அரச பிணையங்களிலான முதலீட்டுச் சொத்துப்பட்டியலிலிருந்தான அனைத்து முதிர்ச்சிப் பெறுகைகளும் மீள முதலிடப்பட்டமையினால் ஏற்பட்டதாகும். முதனிலை வணிகர்களின் பாரிய நிதியிடல் மூலமான மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழான கடன் பெறுகைகள் 2012 இறுதியின் ரூ.104.1 பில்லியனிலிருந்து 2013 இறுதியில் 22.7 சதவீதத்தினால் ரூ.127.8 பில்லியனுக்கு அதிகரித்திருந்தது.

**மூலதனம்:** தனியான முதனிலை வணிகர்களின் மூலதனத் தளம் 2013இல் ரூ.6.7 பில்லியனுக்கு அதிகரித்தது. எனினும், தனியான முதனிலை வணிகர்களின் மொத்த இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களுக்கான மூலதன விகிதம், தனியான முதனிலை வணிகர்களின் சொத்துக்களிலான அதிகரிப்பினைத் தொடர்ந்து, 2012 இறுதியின் 22.1 சதவீதத்திலிருந்து 2013 இறுதியில் 18.4 சதவீதத்திற்குக் குறைவடைந்தது. அனைத்துத் தனியான முதனிலை வணிகர்களும் ரூ.300 மில்லியன் அல்லது மொத்த இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களில் 8 சதவீதம், அதாவது இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமை விகிதம், இவற்றுள் உயர்வான குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாட்டை பூர்த்தி செய்தனர். தனியான முதனிலை வணிகர்களின் மூலதன முடுக்கியானது 2013 இறுதியில் 7.5 தடவைகள் என்ற மிதமான மட்டத்தில் பேணப்பட்டது.

**இலாபத்தன்மை:** துறையின் வரிக்கு முன்னரான இலாபம் 2012இன் ரூ.2.9 பில்லியனிலிருந்து ஆண்டு காலப்பகுதியில் ரூ.8.1 பில்லியனுக்கு அதிகரித்தது. துறையின் ஆண்டு ரீதியான சொத்துக்கள் மீதான வருவாய் மற்றும் பங்குரிமை மூலதனத்தின் மீதான வருவாய் என்பன 2013இல் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்தன. துறையின் சொத்துக்கள் மீதான வருவாய் 2012இன் 1.8 சதவீதத்திலிருந்து 2013இல் 4.0 சதவீதத்திற்கு அதிகரித்த அதேவேளை பங்குரிமை மூலதனத்தின் மீதான வருவாய் 17.7 சதவீதத்திலிருந்து 34.4 சதவீதத்திற்கு அதிகரித்தது. முதனிலை வணிகர்களின் இலாபத்தன்மையின் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்திற்கு மீளாய்விற்குரிய காலப்பகுதியில் சந்தை வட்டி வீதங்களிலான வீழ்ச்சி மற்றும் வர்த்தகப்படுத்தப்பட்டவற்றின் அளவுகளிலான அதிகரிப்பு என்பவற்றின் விளைவாக ஏற்பட்ட மூலதன மற்றும் மீள்மதிப்பீட்டு இலாபங்கள் முக்கியமாகப் பங்களித்திருந்தன.

## இடர்நேர்வு முகாமைத்துவம்

**சந்தை இடர்நேர்வு வெளிப்படுத்துகை வீழ்ச்சியடைந்தது.** ஆண்டுக் காலத்தில் அரச பிணையங்களின் முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தை விளைவு வீதங்கள் தொடர்ச்சியாகப் படிப்படியாக குறைவடைந்தமையால் ஆண்டுக்காலத்தில் துறை மற்றும் தனித்தனியான முதனிலை வணிகர்கள் ஆகிய இரண்டினதும் சந்தை இடர்நேர்வுகளுக்கான வெளிப்பாடு குறைவடைந்திருந்தது. மேலும், அழுத்தப் பரீட்சிப்புக்களின் பெறுபேறுகள் ஒவ்வொரு முதனிலை வணிகரும் மூலதனத்தின் மீது எந்தவித பாரிய பாதிப்புமில்லாமல் சந்தை வட்டி வீதங்களின் பாதகமான அசைவுகளுக்கும் தாக்குப்பிடிக்கக் கூடிய இயலுமையைக் கொண்டிருந்தமையை எடுத்துக்காட்டின. இதன்படி, 2013 இறுதியில் நிலவிய மட்டங்களிலிருந்து சந்தை வட்டி வீதங்கள் 300 அடிப்படைப் புள்ளிகளால் மேல் நோக்கி நகர்ந்திருப்பினும் கூட, தனியான முதனிலை வணிகர்கள் அவர்களின் மூலதனத்தை, குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடான ரூ.300 மில்லியன் அல்லது இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமை விகிதம், இவற்றில் உயர்வான அளவிற்கு பேணக்கூடியதாக இருக்கும்.

**அட்டவணை 8.11 முதனிலை வணிகர்களின் செயலாற்றம்**

ரூபா மில்லியன்

| விடயம் | 2012 (அ) | 2013 (ஆ) | ஆண்டு வளர்ச்சி வீதம் (%) | |
|---|---|---|---|---|
| | | | 2012 (அ) | 2013 (ஆ) |
| மொத்தச் சொத்துக்கள் | 160,082 | 213,633 | 20.6 | 33.5 |
| **மொத்தப்பட்டியல்** | **159,397** | **209,627** | **21.9** | **31.5** |
| வணிகப்படுத்துகின்ற பிணையங்கள் | 87,057 | 145,949 | (1.7) | 67.6 |
| முதலீட்டு பிணையங்கள் | 49,674 | 46,211 | 116.5 | (7.0) |
| நேர்மாற்று மீள்கொள்வனவு | 18,804 | 15,357 | (2.2) | (18.3) |
| விற்பனைக்கு கிடைக்கக்கூடியது | 3,862 | 2,110 | 100.0 | (45.4) |
| பங்கு மற்றும் பொறுப்புக்கள் | 160,082 | 213,633 | 20.6 | 33.5 |
| மொத்த மூலதனம் (இ) | 5,478 | 6,750 | 15.8 | 23.2 |
| மீள்கொள்வனவு | 104,150 | 127,769 | 22.2 | 22.7 |
| வரிக்கு முந்திய இலாபம் | 2,913 | 8,099 | 92.6 | 178.0 |
| வரிக்கு பிந்திய இலாபம் | 2,541 | 7,524 | 127.8 | 196.1 |
| சொத்துக்களில் இருந்தான வருவாய் % | 1.8 | 4.0 | 0.7 | 2.2 |
| பங்குகளில் இருந்தான வருவாய் % (இ) | 17.7 | 34.4 | 17.4 | 16.7 |
| நிறையேற்றப்பட்ட மூலதன போதுமானதன்மை விகித இடர்நேர்வு % (இ) | 22.1 | 18.4 | 3.2 | (3.7) |
| முடுக்கி காலங்கள் (இ) | 7.5 | 7.5 | (0.8) | - |
| வணிகப்படுத்தல்கள் | 10,406,840 | 14,554,616 | 16.3 | 39.9 |
| முதலாந்தரச் சந்தை வணிகப்படுத்தல்கள் | 2,576,323 | 2,252,438 | 45.8 | (12.6) |
| இரண்டாந்தரச் சந்தை வணிகப்படுத்தல்கள் | 7,830,517 | 12,302,178 | 9.0 | 57.1 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) தன்னிச்சை முதனிலை வணிகர்கள் மட்டும்

மூலம்: இலங்கை மத்திய வங்கி

**திரவத்தன்மை இடர்நேர்வு வெளிப்படுத்துகை முன்னேற்றமடைந்திருந்தது.** முதனிலை வணிகர் துறையின் திரவத்தன்மை இடர்நேர்வு வெளிப்படுத்துகை 2013 ஆண்டு காலத்தில் துறையின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் முதிர்ச்சித் தோற்றப்பாட்டிலான முன்னேற்றம் காரணமாக குறைவடைந்தது. சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் முதிர்ச்சித் தோற்றப்பாட்டிலான காணப்பட்ட ஓரிரவு எதிர்க்கணிய பொருத்தப்பாடின்மை 2012 இறுதியின் ரூ.11.2 பில்லியன் அல்லது துறையின் ஒட்டுமொத்த பொறுப்புக்களின் 10.5 சதவீதத்திலிருந்து 2013 இறுதியில் ரூ.7.4 பில்லியனுக்கு துறையின் ஒட்டுமொத்தப் பொறுப்புக்களின் 5.7 சதவீதத்திற்குக் குறைவடைந்தது. மேலும், மொத்தச் சொத்துக்களில் 98.1 சதவீதமானவை, எந்தவொரு எதிர்பாராத திரவத்தன்மைத் தேவைப்பாட்டின் போது நிதியங்களைப் பெறுவதற்காகப் பிணையாக வைக்கக்கூடிய உயர் திரவத்தன்மை கொண்ட அரச பிணையங்களில் காணப்படுவதனால் துறையின் திரவத்தன்மை இடர்நேர்வானது குறைவாக இருந்தது. அதேநேரம், தனியான முதனிலை வணிகர்கள் எதிர்பாராத திரவத்தன்மை இடைவெளிகளை நிரப்புவதற்கான போதுமான துணைநில் வசதிகளையும் கொண்டிருந்தனர்.


**சந்தைப் பங்கேற்பு:** ஆண்டுக் காலத்தில் 'வங்கிகளின் முதனிலை வணிகர் பிரிவுகள்' திறைசேரி உண்டியல் ஏலங்களில் 65.5 சதவீதமான காத்திரமான பங்கேற்பினைக் பதிவுசெய்திருந்தது. தனியான முதனிலை வணிகர்கள் மற்றும் ஊழியர் சேம நிதியின் காத்திரமான பங்கேற்பு 2013இல் முறையே 31.4 சதவீதம் மற்றும் 3.1 சதவீதமாக இருந்தது. திறைசேரி முறிகளுக்கான ஏலங்கள் முக்கியமாக ஊழியர் சேம நிதியத்தின் மூலம் உதவப்பட்டதுடன் இது ஆண்டு காலப்பகுதியில் வழங்கப்பட்டவற்றில் 56.5 சதவீதத்திற்கு வகைகூறியிருந்தது. அதேவேளை, அரசாங்கப் பிணையங்களிலான இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் 2013 ஆண்டு காலத்தில் 57.1 சதவீதத்தினால் மிகக் கூடுதலாக அதிகரித்தது. மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்கள் 2013இன் இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களின் மொத்த அளவில் 83.2 சதவீதத்திற்கு வகைகூறின.

## கூறு நம்பிக்கைகள்

**2013இல் பதினாறு புதிய நிதியங்களின் உருவாக்கத்துடன் கூறு நம்பிக்கைகள் துறை விரிவடைந்திருந்தது.** 2013 திசெம்பர் இறுதியில், 13 கூறு நம்பிக்கை முகாமைத்துவக் கம்பனிகளால் முகாமை செய்யப்படும் 53 கூறு நம்பிக்கைகள் தொழிற்பாட்டிலிருந்தன. 2013 இறுதியில் ஒரு மூடிய நிலை நிதியம் காணப்பட்டதுடன் இது பங்குரிமை மூலதன வளர்ச்சி நிதியமாகும். ஏனைய கூறு நம்பிக்கைகள் திறந்த நிலை நிதியங்களாகும். 2013 இறுதியில், திறந்த நிலை நிதியங்களானது 11 வருமான நிதியங்கள், 9 நிறைக்காப்பு நிதியங்கள், 9 பணச் சந்தை நிதியங்கள், 7 வளர்ச்சி நிதியங்கள், 4 சமப்படுத்தப்பட்ட நிதியங்கள், 4 ஷாறியா நிதியங்கள், 1 பங்குரிமை மூலதன நிதியம், 2 ஆரம்பப் பங்கு வழங்கல் நிதியங்கள், 1 சுட்டெண் நிதியம் மற்றும் 1 கம்பனிப் படுகடன் நிதியம் என்பவற்றை உள்ளடக்கியிருந்தது.

**வியாபார வளர்ச்சி:** வழங்கப்பட்ட கூறுகளின் எண்ணிக்கையிலான அதிகரிப்பு மற்றும் குறிப்பாக அரச பிணையங்கள் மற்றும் கம்பனிப் படுகடன் பிணையங்களிலான முதலீடுகளின் பெறுமதியேற்றம் என்பவற்றால் ஆதரவளிக்கப்பட்டு, கூறு நம்பிக்கைகளின் தேறிய சொத்துப் பெறுமதி 2013 திசெம்பர் இறுதியில் ரூ.54.4 பில்லியனுக்கு 76 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்திருந்தது. எனினும், கூறொன்றிற்கான தேறிய சொத்துப் பெறுமதியானது 2012இன் ரூ.13.87 உடன் ஒப்பிடுகையில் 2013 இறுதியில் ரூ.13.27 ஆக சிறிதளவால் குறைவாக இருந்தது. இருப்பினும், துறையின் மொத்தத் தேறிய சொத்தத்தில் 31 சதவீதப் பங்குகளைக் கொண்டிருக்கும் கூறு நம்பிக்கைகளின் பாரிய பிரிவான வருமான நிதியங்களின் கூறொன்றிற்கான தேறிய சொத்துப் பெறுமதியானது 2012 இறுதியின் ரூ.114.70 இலிருந்து 2013 இறுதியில் ரூ.171.00 இற்கு அதிகரித்ததுடன் 2013இல்

**வரைபடம் 8.12 தேறிய சொத்தின் பெறுமதி அடிப்படையில் நம்பிக்கை கூறுக் கைத்தொழிலின் பகுப்பாய்வு**




* ஏனையவை பங்கு மூலதன வளர்ச்சி நிதிகள் 1.9%, சாரியா நிதிகள் 0.6%, பங்கு மூலதன குறிகாட்டி நிதிகள் 0.2%, பங்கு மூலதன துறை நிதிகள் 0.1%,பொதுமக்களுக்கான ஆரம்ப பங்கு வழங்கல்கள் 0.02%. குறிகாட்டி நிதிகள் 0.01%. கூட்டுக்கம்பனி படுகடன் நிதிகள் 0.002%

அவற்றின் தேறிய சொத்துப் பெறுமதியில் 241 சதவீத வளர்ச்சியைக் காட்டியது. 2013இல் கூறொன்றிற்கான தேறிய சொத்துப் பெறுமதியில் அதிகரிப்பைப் பதிவு செய்த ஏனைய வகை நிதியங்களாக பணச் சந்தை நிதியங்கள், வளர்ச்சி நிதியங்கள் மற்றும் ஷறியா நிதியங்கள் என்பன காணப்பட்டன.

அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்ட வேறுபட்ட கொள்கை வழிமுறைகளுக்கு சாதகமாகப் பதிலிறுத்தும் விதத்தில், ஆண்டுக் காலப்பகுதியில் கூறு உடமையாளர்களின் மொத்த எண்ணிக்கை மற்றும் வழங்கப்பட்ட கூறுகள் அதிகரித்திருந்தன. கூறு உடமையாளர்களின் எண்ணிக்கை 2012 இறுதியில் காணப்பட்ட 27,253 இலிருந்து 2013 இறுதியில் 29,940 இற்கு அதிகரித்த அதேவேளை, வழங்கப்பட்ட கூறுகளின் எண்ணிக்கை 2012 இறுதியின் 2,227 மில்லியனிலிருந்து 2013 திசெம்பர் இறுதியில் 4,103 மில்லியனுக்கு அதிகரித்தது.

**முதலீடு:** பங்குரிமை மூலதனத்தின் மீதான முதலீட்டின் பங்கு தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்த அதேவேளை, அரச பிணையங்கள் மற்றும் கம்பனிப் படுகடன் பிணையங்களிலான முதலீடு 2013இல் அதிகரித்தது. கூறு நம்பிக்கைகளின் முதலீட்டுச் சொத்துப்பட்டியலிலுள்ள உரிமை மூலதனத்தின் பங்கு 2012இன் 28.6 சதவீதத்திலிருந்து 2013 திசெம்பர் இறுதியில் 17.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 2013இல் கூறு நம்பிக்கைகளின் முதலீட்டுச் சொத்துப்பட்டியலின் அரச பிணையங்கள் மற்றும் கம்பனிப் படுகடன் பிணையங்கள் சொத்துப்பட்டியலானது முறையே 32.0 சதவீதம் மற்றும் 50.2 சதவீதத்திற்கு அதிகரித்தது. இவ்வதிகரிப்புக்கு, அரச பிணையங்கள் மற்றும் கம்பனிப் படுகடன் பிணையங்களில் குறிப்பிடத்தக்க முதலீடுகளை மேற்கொண்ட, கூறு நம்பிக்கைத் துறையில் புதிதாக நுழைந்த நிறுவனங்களே காரணமாகும். நிறைகாப்பு நிதியங்கள் அரச பிணையங்களிலான அதிகரித்த முதலீடுகளுக்குப் பெருமளவு பங்களித்ததுடன், இவை அரச பிணையங்களில் கூறு நம்பிக்கைகளால் மேற்கொள்ளப்படும் முதலீட்டில் 62 சதவீதத்திற்கு வகைகூறின. வருமான நிதியங்கள் கம்பனிப் படுகடன் பிணையங்களிலான அதிகரித்த முதலீடுகளுக்குப் பிணையங்களில் கூறுநம்பிக்கைகளால் மேற்கொள்ளப்படும் முதலீட்டில் 56 சதவீதத்திற்கு வகைகூறின.

**அட்டவணை 8.12 நம்பிக்கை கூறுகள் துறையின் செயலாற்றம்**

| விடயம் | 2012 (அ) | 2013 (ஆ) |
|---|---|---|
| நம்பிக்கை பொறுப்புக்களின் எண்ணிக்கை | 37 | 53 |
| கூறு உடைமையாளர்களின் மொத்த எண்ணிக்கை | 27,253 | 29,940 |
| வழங்கலில் உள்ள கூற்றுக்கள் (மில்) | 2,227 | 4,103 |
| மொத்தச் சொத்துக்கள் (ரூ. மில்) | 31,088 | 54,323 |
| தேறிய சொத்து பெறுமதி (ரூ. மில்) | 30,890 | 54,448 |
| பங்குகளின் முதலீடுகள் (ரூ. மில்) | 8,841 | 9,486 |
| மொத்தச் சொத்துக்களின் பங்கு % | 29 | 17 |
| அரச பிணையங்களில் முதலீடுகள் | | |
| பிணையங்கள் (ரூ. மில்) | 5,919 | 17,363 |
| மொத்தச் சொத்துக்களின் பங்கு % | 19 | 32 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலம்: இலங்கை நம்பிக்கை கூறுகளின் சங்கம்

**மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் அபிவிருத்திகள்:** கூறுநம்பிக்கை முகாமைத்துவக் கம்பனிகளுக்கு ஏற்புடையதான வருமான வரி 28 சதவீதத்திலிருந்து 10 சதவீதத்திற்கு குறைவடைந்தமை மற்றும் கூறு நம்பிக்கை முகாமைத்துவக் கம்பனிகளினால் கூறுநம்பிக்கைகளுக்கு வழங்கக்கப்பட்ட பணிகளிற்கான பெறுமதிசேர் வரி விலக்களித்தமை கூறுநம்பிக்கை முகாமைத்துவக் கம்பனிகளின் இலாபத்தன்மையினை அதிகரித்துள்ள அதேவேளை அவை கூறு நம்பிக்கைகளினூடாக மூலதனச் சந்தைக்கான அதிக முதலீடுகளையும் கவர்ந்திருந்தன. மேலும், பிணையங்கள் முதலீட்டுக் கணக்கினூடாக அனுப்புதலினை விடவும் கூறுநம்பிக்கைகளின் முதலீடுகளை பிரபல்யப்படுத்தும் நோக்குடன் வெளிநாட்டு குறுங்கால முதலீட்டாளர்கள் மற்றும் வெளிநாட்டில் வசிக்கும் மற்றும் தொழில்புரியும் இலங்கையர்கள் வெளிநாட்டு பணவனுப்பல்களை பிணையங்கள் முதலீடுகள் கணிக்கினூடாக அனுப்புதலினை விடவும் கூறுநம்பிக்கைகளுக்கு நேரடியாகவே மேற்கொள்ளலாம். உள்நாட்டு மூலதன சந்தையில் கூறு நம்பிக்கைகளினூடாக பட்டியலிடப்பட்ட உரிமை மூலதனங்கள் மற்றும் கம்பனி முறிகளில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு தனியார் ஓய்வூதிய நிதியங்கள் மற்றும் தனியார் சேம நிதியங்களை அனுமதிப்பதன் மூலம் நிறுவன முதலீடுகளை ஊக்குவித்தல் நிறுவன முதலீட்டாளர்களின் கூறுநம்பிக்கைக்கான கேள்விகளை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், உரிமம்பெற்ற வங்கிகளினால் மேற்கொள்ளப்படும் நிறைகாப்புடைய கூறுநம்பிக்கைகளிலான

முதலீடுகள் நியதிச் சட்ட திரவச் சொத்து விகிதத்தினை பூர்த்தி செய்யும் நோக்கத்திற்காக சில நிபந்தனைகளிற்கு உட்பட்டு திரவச் சொத்துக்களில் உள்ளடக்கப்படலாம் என மத்திய வங்கி தீர்மானித்தது. இது கூறுநம்பிக்கை துறை அபிவிருத்தியில் சாதகமான தாக்கத்தினை கொண்டிருக்கும்.


## காப்புறுதிக் கம்பனிகள்

**காப்புறுதித் துறையானது நிதியியல் துறையின் மொத்தச் சொத்துக்களில் 3.5 சதவீதத்திற்கு வகைகூறுகிறது.** 2013 திசெம்பர் முடிவில் உள்ளவாறு இலங்கை காப்புறுதிச் சபையில் பதிவுசெய்யப்பட்ட 21 காப்புறுதிக் கம்பனிகள் தொழிற்பட்டுவருகின்றன. இவற்றுள் 12 கம்பனிகள் நீண்ட காலம் (ஆயுள்) மற்றும் பொதுகாப்புறுதி (ஆயுள் அல்லாத) வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள காப்புறுதியாளர்களைக் கொண்டுள்ள அதேவேளை 6 கம்பனிகள் தனியே பொதுக்காப்புறுதி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளதுடன் 3 கம்பனிகள் நீண்டகால காப்புறுதி வியாபாரங்களை மட்டுமே மேற்கொள்கின்றன. ஆண்டு காலத்தின் இறுதியில், பொதுகாப்புறுதியில் ஈடுபடும் 54 காப்புறுதி தரகர்களும் ஏறத்தாழ 37,000 காப்புறுதி முகவர்களும் தொழிட்பாட்டிலிருந்தனர். 2013 ஆம் ஆண்டு முடிவில், ஏழு காப்புறுதிக் கம்பனிகள் கொழும்பு பங்கு பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டுள்ள வேளையில் ஆறு கம்பனிகள் வெளிநாட்டு இணைப்பைக் கொண்டுள்ளன.

**இலங்கையில் காப்புறுதி நுழைவு மற்றும் அடர்த்தி என்பன ஏனைய ஆசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் சார்பு ரீதியில் குறைவாகவே காணப்படுகிறது.** 2013 இல் காப்புறுதி நுழைவு மொத்தக் கட்டணம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக, 1.14 சதவீதமாகக் காணப்பட்ட வேளையில் காப்புறுதி அடர்த்தி அதாவது மொத்த சனத்தொகைக்கான கட்டண விகிதம், 2013இல் ரூ.4807 மில்லியன் (ஐ.அ.டொ. 37 மில்) ஆகக் காணப்பட்டது. நாட்டின் குறைவான காப்புறுதி நுழைவிற்கு ஏனைய ஆசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் குறைந்த தலைக்குரிய வருமானம், காப்புறுதி தொடர்பான எண்ணக்கருக்கள் மற்றும் அவற்றின் நன்மைகள் பற்றிய குறைவான ஊக்குவிப்புக்கள் என்பன பிரதானமாக பங்களிப்பு செய்யும் காரணிகளாகும். எனினும், நாட்டின் அபிவிருத்தி மற்றும் மக்களின் செலவிடத்தக்க வருமானத்தை உயர்த்துதல் போன்றவற்றிற்கான அரசாங்கத்தின் முயற்சிகள் என்பன தொடர்ச்சியாக காப்புறுதித் துறையில் ஓர் சாதகமான தாக்கத்தினை கொண்டிருக்கும் என்பதுடன் காப்புறுதி நுழைவு மற்றும் காப்புறுதி அடர்த்தி என்பனவற்றிலும் சாதகமானத் தாக்கத்தினை கொண்டு வரும்.

**வியாபார வளர்ச்சி:** காப்புறுதிக் கம்பனிகளின் மொத்த சொத்துக்கள் 2012 இல் பதிவுசெய்யப்பட்ட 21.1 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2013 இல் 13.0 சதவீதத்தினால் அதிகரித்தது. 2013 முடிவில் நீண்டகால காப்புறுதி வியாபாரத்தின் மொத்தச் சொத்துக்கள் ரூ. 217 பில்லியன்களாக விளங்கி காப்புறுதி துறையின் மொத்தச் சொத்துக்களில் 60 சதவீதத்திற்கு வகைகூறியது. 2013 திசெம்பர் முடிவில் பொதுக்காப்புறுதி வியாபாரம் ரூ.147 பில்லியனாக விளங்கி மொத்தக் காப்புறுதித்துறை சொத்துக்களில் 40 சதவீதத்திற்கு வகைகூறியது. காப்புறுதித்துறையின் மொத்தப் பதியப்பட்ட காப்புறுதித் தவணைக் கட்டணங்கள் 2009இன் நடுப்பகுதியிலிருந்து 2011 நடுப்பகுதிவரையான காலப்பகுதியில் அதிகரித்துச் செல்லும் வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. ஆனால், அதனைத் தொடர்ந்து 2013இல் மொத்தப் பதியப்பட்ட காப்புறுதி தவணைக் கட்டணங்களின் மொத்த வளர்ச்சி மெதுவடைந்து ஆண்டிற்காண்டு அடிப்படையில் 8.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. மொத்த பதிவு செய்யப்பட்ட காப்புறுதிக் கட்டணங்களின் வளர்ச்சி மெதுவடைந்தமைக்கு 2013 இல் எடுக்கப்பட்ட வாகன இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளே காரணமாகும். அதாவது, குறைப்பதற்காக வாகனங்களின் இறக்குமதி நோக்கத்திற்காக வணிக வங்கிகளுடன் நாணயக்கடிதம் திறக்கப்படும் வேளையில் 100 சதவீத குறைந்தபட்ச வைப்புத் தேவைப்பாட்டினை உள்ளடக்கக்கூடிய தொகையினை வைப்பிலிடல் வேண்டும் என கேட்டுக் கொள்ளப்பட்டமையும் குறைந்தபட்சத் தேவைப்பாட்டினை பூர்த்தி செய்யும் நோக்கத்திற்காக வங்கிகள் முற்பணங்களை வழங்கக்கூடாது என தடை செய்யப்பட்டமையும் பங்களித்திருந்தன. இவ்வழிமுறைகளின் அடிப்படை விளைவாக மொத்த பதியப்பட்ட காப்புறுதிக் கட்டணங்களில் 56.3 சதவீதத்திற்கு வகைகூறிய பொதுக்காப்புறுதித் துறையின் மொத்த பதியப்பட்ட

**வரைபடம் 8.13** காப்புறுதி கைத்தொழிலின் மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணம்



காப்புறுதிக் கட்டணங்கள் வீழ்ச்சியடைந்ததுடன் 2012இன் 15.1 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2013 இல் 7.0 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்தது. 2013 இல் பொதுக்காப்புறுதியின் கீழ் பதிவுசெய்யப்பட்ட அனைத்து முக்கிய துணை வகைகளும், கடல் காப்புறுதி தவிர்ந்த, மொத்த பதிவுசெய்யப்பட்ட காப்புறுதிக் கட்டணத்தில் அதிகரிப்பினை பதிவுசெய்துள்ள போதிலும் 2012இல் அது குறைந்த வேகத்திலேயே பதியப்பட்டுள்ளது. பொதுக் காப்புறுதியில் அதிகப் பங்கினைக் கொண்ட மோட்டார் காப்புறுதியின் மொத்த பதியப்பட்ட காப்புறுதிக் கட்டணங்கள் 62 சதவீதப் பங்கினைக் கொண்டுள்ளதுடன் 4.6 சதவீதத்தினால் அதிகரித்த தீக்காப்புறுதியின் மொத்த பதிவுசெய்யப்பட்ட காப்புறுதிக் கட்டணங்கள் 12 சதவீத பங்குடனும் ஏனைய காப்புறுதிகள் 22 சதவீத பங்குடனும் முறையே 16.4 சதவீதம் மற்றும் 11.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. எனினும், கடல் காப்புறுதியின் மொத்த பதியப்பட்ட கப்புறுதிக் கட்டணங்கள் 4.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. மொத்த பதியப்பட்ட காப்புறுதிக் கட்டணங்களில் 43.7 சதவீதத்திற்கு வகைகூறும் நீண்டகால காப்புறுதிகளின் மொத்த பதியப்பட்ட காப்புறுதிக் கட்டணங்கள் 2012இல் 6.6 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2013 இல் 10.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன.

**வருவாய்கள் மற்றும் இலாபத்தன்மை:** 2013 இல் காப்புறுதித் துறையின் மொத்த முதலீட்டு வருமானம் 2012 இன் 3.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் ரூபா. 29.0 பில்லியனுக்கு 23 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. முதலீட்டு வருவாய்களின் அதிகூடிய வளர்ச்சிக்கு நீண்டகாலக் காப்புறுதித் துறையின் கணிசமான முதலீட்டு வருமான வளர்ச்சியே காரணமாகும், அதேவேளை முதலீடுகளின் அதிகளவு பகுதி அரச பிணையங்கள் மற்றும் கம்பனிப் படுகடன் பிணையங்களில் காணப்பட்டன. 2013 இல் நீண்டகால காப்புறுதித் துறையின் மொத்த முதலீட்டு வருவாய்கள் 2012இன் 2 சதவீத சிறிதளவு வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 25 சதவீதமாகக் காணப்பட்டது. எனினும், 2013இல் பொதுக்காப்புறுதித்துறையின் மொத்த முதலீட்டு வருவாய் 2012இன் 7.9 சதவீத வளர்ச்சிக்கு ஒப்பிடுகையில் 18.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. காப்புறுதித் துறையின் வரிக்கு முந்திய இலாபம் முன்னைய ஆண்டின் 2 சதவீத வீழ்ச்சிக்கு மாறாக 2013இல் 11.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது, ஆண்டுக்காலத்தில் பொதுக்காப்புறுதித் துறையின் பதியப்பட்ட இலாபங்கள் (உழைக்கப்பட்ட காப்புறுதிக் கட்டணங்கள் மற்றும் செலுத்தப்பட்ட கோரல்கள், உறப்பட்ட செலவினங்கள் என்பவற்றிற்கிடையேயான வித்தியாசம்) 11.1 சதவீத சிறிதளவான வளர்ச்சியைப் பதிவு செய்திருந்தது.

**அட்டவணை 8.13 காப்புறுதி நிறுவனங்கள் துறையின் செயலாற்றம்**

ரூபா பில்லியன்

| விடயம் | 2012(அ) | 2013 (ஆ) |
|---|---|---|
| மொத்தச் சொத்துக்கள் | 321.8 | 363.8 |
| அரச பிணையங்கள் | 127.7 | 121.6 |
| பங்கு மூலதனங்கள் | 41.6 | 40.1 |
| காசு மற்றும் வைப்புக்கள் | 47.4 | 62.6 |
| மொத்த வருமானம் | 110.7 | 123.5 |
| பெறுமதிக்கு அதிகமான வருமானம் | 87.2 | 94.5 |
| முதலீட்டு வருமானம் | 23.5 | 29.0 |
| வரிக்கு முந்திய இலாபம் | 12.1 | 13.5 |
| கடன் தீர்த்தல் அளவு விகிதம் - ஆயுட் காப்புறுதி | 7.2 | 8.9 |
| - பொதுக் காப்புறுதி | 2.4 | 2.6 |
| பிடித்து வைத்தல் விகிதம் (%) - ஆயுட் காப்புறுதி | 96.2 | 96.0 |
| - பொதுக் காப்புறுதி | 82.5 | 83.5 |
| இணைந்த தொழிற்பாட்டு விகிதம்(%) - ஆயுட் காப்புறுதி | 37.2 | 46.2 |
| - பொதுக் காப்புறுதி | 61.8 | 58.7 |
| சொத்துக்களில் இருந்தான வருவாய்(%) - ஆயுட் காப்புறுதி | 82.7 | 93.7 |
| - பொதுக் காப்புறுதி | 100.3 | 101.7 |
| சொத்துக்களில் இருந்தான வருவாய்(%) - ஆயுட் காப்புறுதி | 3.3 | 3.1 |
| - பொதுக் காப்புறுதி | 5.3 | 5.1 |
| பங்குகளில் இருந்தான வருவாய் (%) - பொதுக் காப்புறுதி | 9.9 | 9.1 |
| ஒப்புறுதி விகிதம் (%) - பொதுக் காப்புறுதி | 20.5 | 20.8 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலம்: இலங்கை காப்புறுதிச் சபை

**ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல்:** அனைத்துக் காப்புறுதிக் கம்பனிகளும் 2013 இறுதியின் நியதிச்சட்ட கடன் தீராற்றல் எல்லைகளை பூர்த்தி செய்தன. 2013 திசெம்பர் இறுதியில் பொதுக் காப்புறுதிக்கான கடன் தீராற்றல் எல்லை விகிதம் 2012 இன் 2.4 தடவைகளிலிருந்து 2.6 தடவைகளாக அதிகரித்த வேளையில் நீண்டகால காப்புறுதிக்கான கடன்தீராற்றல் எல்லை விகிதம் 2012 திசெம்பரின் 7.2 தடவைகளிலிருந்து 2013 திசெம்பர் இறுதியில் 8.9 தடவைகளுக்கு அதிகரித்தது. இருப்பினும், காப்புறுதி வியாபாரத்தினை தனித்தனிக் கம்பனிகளாக வேறுபடுத்தலில் காணப்படும் தடைகள் அதாவது 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதிக் கைத்தொழில் சட்ட திருத்தங்களிற்கமைய நீண்டகாலக் காப்புறுதி வியாபாரங்களிலிருந்து பொதுக்காப்புறுதி வியாபாரத்தினை வேறுபடுத்தலானது கைத்தொழில்துறைக்கு மூலதன நிலையினை ஆரோக்கியமான மட்டங்களில் பேணுவதில் சவால்களை ஏற்படுத்தியுள்ளது. எனினும், அதன் இந்த ஒழுங்குமுறைப்படுத்தல் திருத்தங்கள் காப்புறுதிக் கைத்தொழிலின் ஒன்றிணைப்புக்கள் நடுத்தர காலத்திற்கு அத்துறைக்கு நன்மையளிக்கக்கூடியது என்பதால் ஊக்கப்படுத்தப்படுகிறது. அனைத்துக் காப்புறுதிக் கம்பனிகளும் பொதுக் காப்புறுதியின் தொழில்நுட்ப ஒதுக்குகளின் 20 சதவீதம் மற்றும் அரச பிணையங்களின் நீண்டகால நிதியங்களில் 30 சதவீதத்தையும் முதலிடுவதன் தேவைப்பாடுகளுடன் இணங்கிச்செல்ல இயலக்கூடியனவாக இருந்தன. 2013 இன் இறுதியில் அரச பிணையங்கள் நீண்டகால

காப்புறுதி வியாபாரத்தின் சொத்துக்களில் 43 சதவீதத்திற்கும் பொதுக்காப்புறுதி வியாபாரத்தின் சொத்துக்களில் 19 சதவீதத்திற்கும் வகைகூறின. 2013 இறுதியில், காப்புறுதித் துறையின் மொத்தச் சொத்துக்களில் பங்குரிமை மூலதனம் மற்றும் கம்பனி படுகடன் பிணையங்கள் என்பவற்றின் பங்குகள் முறையே 11.0 சதவீதம் மற்றும் 10.7 சதவீதமாகக் காணப்பட்டன.

**மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்துதல் அபிவிருத்திகள் :** காப்புறுதி தொழில் துறையுடன் தொடர்பான ஒழுங்கு முறைப்படுத்தல் கட்டமைப்பு, மேற்பார்வை மற்றும் நடைமுறைப்படுத்தல் அமைப்பு என்பன 2013இல் மேலும் பலப்படுத்தப்பட்டன. இலங்கை காப்புறுதிச் சபை காப்புறுதிக் கம்பனிகளுக்கு நீண்டகால மற்றும் பொதுக்காப்புறுதி வியாபாரங்களுடன் தொடர்பான கடன் தீராற்றல் எல்லை ஒழுங்கு விதிகளுக்கான இலங்கையில் காணி மற்றும் கட்டிடங்களை மதிப்பீடு செய்தலை இயலச்செய்வதன் பொருட்டு ஒவ்வொரு மதிப்பீட்டாளர்களும் பூர்த்தி செய்யவேண்டிய பொருத்தப்பாட்டு பிரமாணங்களுக்கான வழிகாட்டல்கள் மற்றும் அறிவுறுத்தல்களை வழங்கியது. மேலும், காப்புறுதிக்கம்பனிகள் மற்றும் காப்புறுதி தரகுக் கம்பனிகள் குறைந்தபட்ச மூலதன தேவைப்பாடுகளுடன் தொடர்பாக பேணப்படவேண்டிய மூலதனம் அவற்றின் நிதியியல் நம்பிக்கையை கட்டியெழுப்பும் நோக்கில் அதிகரிக்கப்பட்டது. இதன்படி, 2015 தொடக்கம் காப்புறுதிக் கம்பனிகள் ரூபா 500 மில்லியனுக்கு குறையாத மூலதனத்தினைப் பேணுகின்ற அதேவேளை காப்புறுதித் தரகு கம்பனிகள் 2014 தொடக்கம் ரூபா 2.5 மில்லியன்களுக்குக் குறையாத மூலதனமட்டத்தினைப் பேணுதல் வேண்டும்.

## ஓய்வூதிய நிதியங்கள்

**ஓய்வூதிய நிதியங்கள் துறை, நிதியியல் துறைச் சொத்துக்களின் 16 சதவீதத்துக்கு வகைகூறுவதுடன் இது ஓய்வூதியத்துறை சொத்துக்களின் 79 சதவீதமளவுக்கு வகைகூறும் ஊழியர் சேமலாப நிதியங்களால் ஆதிக்கம் செலுத்தப்படுகிறது.** ஊ.சே. நிதியம் அரசால் முகாமைப்படுத்தப்படும் நிதியமாக இருக்கையில், ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் அரசதுறை பொதுப்பணிகள் ஓய்வு நிதியம் ஆகியன அரசால் முகாமைப்படுத்தப்படும் ஏனைய இரண்டு நிதியங்களும் காணப்படுகின்றன. மேலும், இலங்கையில் தனியாரால் முகாமை செய்யப்படும் ஒப்புதலளிக்கப்பட்ட ஓய்வூதிய மற்றும் சேம நிதியங்கள் 170 காணப்படுகின்றன.

**தனியார் துறைக்கான முக்கிய ஓய்வூதிய நன்மைகள் நிதியமான ஊழியர் சேம நிதியம் நிதியங்களின் தேறிய பங்களிப்புக்களின் அதிகரிப்புடன் விரிவடைந்தது.** உறுப்பினர்களின் தேறிய பங்களிப்புக்களின் வளர்ச்சிக்குப் புறம்பாக பயனுறுதி வாய்ந்த மற்றும் முன்மதியுடைய நிதி முகாமைத்துவமும் நிதியத்தின் சொத்துத் தளத்தின் அதிகரிப்பிற்கும் பங்களித்தது. 2013 இறுதியில் ஊழியர் சேம நிதியத்தின் மொத்த உறுப்பினர் கணக்குகளின் எண்ணிக்கை 15 மில்லியனாக விளங்கியதுடன் அவற்றுள் 2.4 மில்லியன் செயற்படும் கணக்குகளாகவும் விளங்கின. 2013 இறுதியில், நிதியத்தின் மொத்தப் பெறுமதி ரூ.1,300 பில்லியனுக்கு 13.6 சதவீதத்தினால் அதிகரித்தது. 2013இல் மொத்தப் பங்களிப்புக்கள் ரூ.80.5 பில்லியனுக்கு 14.7 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் மீளளிப்புக்கள் ரூ.50.2 பில்லியனுக்கு 3.1 சதவீதத்தினால் அதிகரித்தது. அதன் விளைவாக, 2013இன் தேறிய பங்களிப்புக்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் ரூ.30.3 பில்லியனுக்கு 40.9 சதவீதத்தினால் அதிகரித்தது. 2013இல் நிதியத்தின் மொத்த வருவாய்கள் முன்னைய ஆண்டின் ரூ.121.4 பில்லியனிலிருந்து ரூ.136.7 பில்லியனுக்கு 12.6 சதவீதத்தினால் அதிகரித்தன. 2013இல் மொத்த வருவாய்களில் 76.9 சதவீதத்திற்கு வகைகூறும் வட்டி வருவாய்கள் ரூ.105 பில்லியனுக்கு 15.5 சதவீதத்தினால் அதிகரித்தது. 2013இல் அரச பிணையங்களிலிருந்தான மூலதன இலாபங்கள் 2012இன் ரூ.34 மில்லியனிலிருந்து ரூ.1,019 மில்லியனுக்கு அதிகரித்த அதேவேளை பங்குரிமை மூலதனங்களிலிருந்தான மூலதன இலாபங்கள் ரூ.1,020 மில்லியனிலிருந்து ரூ.113 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. 2013 திசெம்பர் இறுதியில் உள்ளவாறு, முதலீட்டுச் சொத்துப்பட்டியல் 92.5 சதவீதத்திற்கு வகைகூறிய அரச பிணையங்கள், முதலீட்டுச் சொத்துப்பட்டியலின் 5.8 சதவீதத்திற்கு வகைகூறிய பங்குரிமை மூலதனம், முதலீட்டுச் சொத்துப்பட்டியலின் 1.2 சதவீதத்திற்கு வகைகூறிய கம்பனிப் படுகடன் மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு என்பவற்றை உள்ளடக்கியிருந்தது. 2013ஆம் ஆண்டுக்கான உறுப்பினர் நிலுவைகள் மீதான வருவாயின் பயனுறு வீதம் 11.14 சதவீதமாக இருந்தது.

**நாட்டின் தொழில்தருநர் பங்களிப்புடனான ஓய்வூதிய நன்மைத் திட்டமான ஊழியர் நம்பிக்கை நிதியமும் அதன் சொத்துத் தளத்தில் தேறிய பங்களிப்புக்களின் அதிகரிப்புடன் ஓர் அதிகரிப்பை எடுத்துக்காட்டியது.** 2013இல் மொத்த உறுப்பினர் ஊழியர் நம்பிக்கை நிதியக் கணக்குகளின் எண்ணிக்கையானது 10 மில்லியனாகக் காணப்பட்டதுடன் இதில் 2.2 மில்லியன்

**அட்டவணை 8.14 ஊழியர் சேமநிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியின் செயலாற்றம்**

| விபரங்கள் | ஊழியர் சேமலாப நிதி | | ஊழியர் நம்பிக்கை நிதியம் | |
|---|---|---|---|---|
| | 2012 (அ) | 2013 (ஆ) | 2012 (அ) | 2013 (ஆ) |
| மொத்தச் சொத்துக்கள் (ரூ. பில்) | 1,144.4 | 1,300.0 | 158.3 | 178.5 |
| மொத்த அங்கத்தவர் மீதி (ரூ. பில்) | 1,124.5 | 1,285.0 | 153.6 | 174.3 |
| அங்கத்தவர் கணக்குகளின் எண்ணிக்கை (மில்) | 14.6 | 15.0 | 10.0 | 10.0 |
| இயங்கு நிலையில் உள்ள கணக்குகளின் எண்ணிக்கை(மில்) | 2.3 | 2.4 | 2.2 | 2.2 |
| பங்களிப்பு செய்யும் ஊழியர்களின் எண்ணிக்கை | 68,140 | 70,392 | 70,109 | 72,145 |
| மொத்த பங்களிப்புகள் (ரூ. பில்) | 70.2 | 80.5 | 12.7 | 14.4 |
| மொத்த மீளளிப்புகள் (ரூ. பில்) | 48.7 | 50.2 | 8.6 | 9.6 |
| மொத்த முதலீடுகளின் பட்டியல் (ரூ. பில்) | 1,105.5 | 1,257.3 | 149.7 | 168.0 |
| இதில்: அரச பிணையங்கள் (%) | 93.6 | 92.5 | 89.3 | 88.9 |
| மொத்த வருமானம் (ரூ. பில்) | 121.4 | 136.7 | 13.5 | 16.5 |
| பகிர்ந்தளிப்பிற்காக உள்ள இலாபம் (ரூ. பில்) | 111.8 | 125.6 | 14.1 | 15.8 |
| முதலீடுகளிலிருந்தான வருவாய் (%) | 11.6 | 11.5 | 8.4 | 10.1 |
| அங்கத்தவர் மீதிகளுக்கு வழங்கப்பட்ட வட்டி வீதம்(%) | 11.5 | 11.1 | 10.0 | 10.0 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
ஊழியர் நம்பிக்கை நிதிச் சபை

செயற்படும் கணக்குகளாகும். 2013 திசெம்பர் முடிவில் உள்ளவாறு ஊழியர் நம்பிக்கை நிதியமானது 72,145 தொழில்தருநர்களை நிதியத்திற்கு பங்களிப்புச் செய்பவர்களாக கொண்டிருந்தது. 2013இல் பெற்றுக்கொண்ட பங்களிப்புக்கள் 2012இன் 12.7 பில்லியனிலிருந்து ரூ.14.4 பில்லியனுக்கு அதிகரித்திருக்கையில் 2013இல் உறுப்பினர்களிற்குச் செலுத்தப்பட்ட மொத்தப் பங்களிப்புக்கள் 2012இல் காணப்பட்ட ரூ.8.6 பில்லியனிலிருந்து ரூ.9.6 பில்லியனுக்கு அதிகரித்திருந்தன. 2013ஆம் ஆண்டுப் பகுதியில் தேறிய பங்களிப்புக்கள் ரூ.4.8 பில்லியனுக்கு 15.6 சதவீதத்தினால் அதிகரித்தன. ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் மொத்தச் சொத்துக்கள் 2013 திசெம்பர் இறுதியில் உள்ளவாறு ரூ.178.5 பில்லியனுக்கு 12.8 சதவீதத்தால் அதிகரித்தன. ஊ.ந. நிதியத்தின் வெளிநின்ற உறுப்பினர் நிலுவைகள் 2012இன் ரூ.153.6 பில்லியனிலிருந்து 2013 இறுதியில் 174.3 பில்லியனுக்கு அதிகரித்தன. ஊ,சே. நிதியத்தினைப் போன்றே முதலீட்டுச் சொத்துப்பட்டியலும் அரச பிணையங்களில் செறிந்திருந்ததுடன் இது மொத்தச் சொத்துப்பட்டியலில் 88.9 சதவீதத்திற்கு வகைகூறியது. பங்குரிமை மூலதனம் மற்றும் கம்பனிப் படுகடன் பிணைங்களிலான முதலீடுகள் மொத்தச் சொத்துப்பட்டியலில் முறையே 4.6 சதவீதத்திற்கும் 0.5 சதவீதத்திற்கும் வகைகூறியன. நிதியத்தின் மொத்த வருமானம் இவ்வாண்டில் ரூ.16.5 பில்லியனுக்கு 22.2 சதவீதத்தால் கணிசமானளவு அதிகரித்தது. 2013இல் ஊ.ந.நிதியத்தின் உறுப்பினர் நிலுவைகள் மீதான வருவாய்களின் பயனுறு வீதம் 10 சதவீதமாக இருந்தது.

**ஓய்வூதியத் திணைக்களத்தால் முகாமை செய்யப்படும் அரச பணி சேம நிதியம், 2013 திசெம்பர் இறுதியில் 226,837 செயற்படு உறுப்பினர்களைக் கொண்டிருந்தது.** 2013 காலப்பகுதியில் மொத்தப் பங்களிப்புக்கள் மற்றும் மீளளிப்புக்கள் முறையே ரூ.1,339 மில்லியனாகவும் ரூ.336 மில்லியனாகவும் விளங்கின. அரச பணி சேம நிதியத்தின் மொத்தச் சொத்துக்கள் 2013 திசெம்பர் இறுதியில் உள்ளவாறு ரூ.36.4 பில்லியனுக்கு 10.8 சதவீதத்தால் அதிகரித்தன. 2013 இறுதியில் உறுப்பினர்களின் வெளிநின்ற நிலுவைகள் ரூ.35.0 பில்லியனுக்கு 6.7 சதவீதத்தால் அதிகரித்தது. அதனது முதலீடுகளைப் பொறுத்தவரையில், அரச பிணையங்களில் அதனது முதலீட்டின் பங்கு 2013 திசெம்பர் இறுதியில் 99.8 சதவீதமாக இருந்தது.

**தொழில் ஆணையாளர் திணைக்களத்தினால் கண்காணிக்கப் படுகின்றதும் தனியாரால் முகாமை செய்யப்படுகின்றதுமான செயற்படு தனியார் சேம நிதியங்கள் 2012 செத்தெம்பர் இறுதியில் 155,096 செயற்படு உறுப்பினர்களைக் கொண்டிருந்தது.** செயற்படுகின்ற தனியார் சேம நிதியங்களின் மொத்தச் சொத்துக்கள் 2013 செத்தெம்பர் இறுதியில் ரூ.123 பில்லியனுக்கு 11.7 சதவீதத்தால் அதிகரித்தன. நிதியங்களின் மொத்த முதலீட்டுச் சொத்துப்பட்டியல் ரூ.105.4 பில்லியனைக் கொண்டிருந்தது.

## 8.3 நிதியியல் சந்தைகளின் செயலாற்றம்

### பணச்சந்தை

**2013இன் பெரும்பாலான காலப்பகுதியில் உள்நாட்டுப் பணச் சந்தை மிகையான திரவத்தன்மையினைக் கொண்டிருந்தது.** ஆண்டின் தொடக்கத்தில் சந்தைத் திரவத்தன்மையில் ஓர் பற்றாக்குறை நிலவிய போதும், சனவரி முதல் கிழமையில் இலங்கை வங்கியுடன் பரஸ்பர பரிமாற்றல் ஒழுங்குகளுக்குள் மத்திய வங்கி நுழைந்ததைத் தொடர்ந்து சந்தைத் திரவத்தன்மையில் மிகை நிலை ஏற்பட்டது. அன்றிலிருந்து நாணயச் சந்தை பெரும்பாலும் ஆண்டுக்காலம் முழுவதும் மிகையான திரவத்தன்மை நிலையினைக் கொண்டிருந்தது. திரவத்தன்மை மிகைநிலைக்கு பங்களித்த ஏனைய முக்கிய காரணிகளாக செத்தெம்பரில் தேசிய சேமிப்பு வங்கியுடனான மத்திய வங்கியின் பரஸ்பர பரிமாற்றல் ஒழுங்குகள், 2013 யூலை 01ஆம் நாளன்று நியதிச்சட்ட ஒதுக்குவீதம் 200 அடிப்படைப் புள்ளிகளினால் குறைக்கப்பட்டமையால், சந்தைக்கு ரூபா 52 பில்லியனை விடுவிக்கப்பட்டமை, மத்திய வங்கியால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நாணயங்களின் உடனடிக் கொள்வனவுகள் மற்றும் மத்திய வங்கியின் இலாபங்களின் ஒரு பகுதியை அரசாங்கத்திற்கு மாற்றப்பட்டமை போன்றவை விளங்கின. ஆண்டுக்காலம் முழுவதும் நிலவிய சந்தைத் திரவத்தன்மையின் மிகைநிலை திறந்த சந்தைத்

தொழிற்பாடுகள் மூலம் அகற்றப்பட்டது. ஏறத்தாழ யூலை மாதம் வரையில் மிகைச் சந்தைத் திரவத் தன்மையினை அகற்றுவதற்காக முக்கியமாக ஓரிரவு மீள்கொள்வனவுகள் பயன்படுத்தப்பட்ட வேளையில் அதன்பின்னர் மிகைச் சந்தைத் திரவத்தன்மையினை உள்ளெடுத்தலுக்கு குறுங்கால மீள் கொள்வனவு உடன்படிக்கைகள் பயன்படுத்தப்பட்டன. அதேவேளை, 2013 காலப்பகுதியில் ரூ.128.8 பில்லியன்கள் திரவத்தன்மையினை நிரந்தரமான அடிப்படையில் ஈர்ப்பதற்கு மத்திய வங்கி வைத்திருந்த திறைசேரி உண்டியல்களின் பொருட்டு உடனடி விற்பனைக்கான ஏலங்கள் நடாத்தப்பட்டன. மிகைத் திரவத்தன்மையினை ஈர்ப்பதற்கு மத்திய வங்கி வசமிருந்த அரச பிணையங்கள் பற்றாக்குறையாகக் காணப்பட்டமையினால் மத்திய வங்கி மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களுக்காக முறிகள் கடன்பாடுகள் திட்டத்தின் கீழ் கடன்பட்ட திறைசேரி முறிகளினைப் பயன்படுத்தியது. எனினும் ஆண்டுக்காலப்பகுதியில் சில நேரங்களில் சந்தை திரவத்தன்மை பற்றாக்குறையினைக் கொண்டிருந்த வேளையில் துணைநில் வசதிகளினூடாக திரவத்தன்மையினை வழங்கியதற்குப் புறம்பாக, ஓரிரவு நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களுடன் தவணை நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களும் நடாத்தப்பட்டன.

**2013இல் பணச்சந்தையில் திரவத்தன்மை முகாமைத்துவத்தினை மேம்படுத்துவதற்கும் திறந்த சந்தை நடவடிக்கைகளை வலுப்படுத்துவதற்கும் பல்வேறு வழிமுறைகள் எடுக்கப்பட்டன.** இதன்படி, வர்த்தக வங்கிகளின் ஒதுக்கு கணிப்பு மற்றும் பேணல் நோக்கங்களிற்காக 7 நாட்கள் எனக் கருதப்பட்ட காலப்பகுதிக்குப் பதிலாக 2013 மே 01ஆம் நாளிலிருந்து ஒவ்வொரு கலண்டர் மாதமும் 2 காலங்களாக பிரிக்கப்பட்டது. அதாவது அதன் ஒவ்வொரு மாதத்தினதும் 1ஆம் நாளிலிருந்து 15ஆம் நாள் வரை மற்றும் 16ஆம் நாளிலிருந்து மாதத்தின் இறுதி நாள் வரையாகக் காணப்பட்டது. 2013 யூன் 01 ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் மத்திய வங்கி நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களை முன்வைக்கும் நாட்களில் மீள்கொள்வனவு துணைநில் வசதிகள் மீதான ரூ.100 மில்லியன் வரையறைகள் நீக்கப்பட்டன. மேலும், 2013 யூலை 24 இலிருந்து திறந்த சந்தைத் திரவத்தன்மை முகாமைத்துவத்தினை வசதிப்படுத்துவதற்காக ஏல முறைமையின் கீழ் 7 நாள் காலப்பகுதியைக் கொண்ட அதே நாளில் கொடுப்பனவு மேற்கொள்ளும் அடிப்படையிலான குறுங்கால மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. 2013 யூலை 01ஆம் நாளன்று மேற்கொள்ளப்பட்ட நியதிச்சட்ட ஒதுக்கு விகிதம் 200 அடிப்படைப் புள்ளிகளினால் 6 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டமையானது மேற்கூறிய வழிமுறைகளைப் பூரணப்படுத்தும்.

**அட்டவணை 8.15 பணச் சந்தை கொடுக்கல்வாங்கல்கள்**

| சந்தை | அளவு (ரூபா பில்.) | | நிறையேற்றப்பட்ட சராசரி வட்டி வீதம் (குறைந்ததிலிருந்து உச்சம்) % | |
|---|---|---|---|---|
| | 2012 | 2013 | 2012 | 2013 |
| அழைப்புப் பணம் | 3,179 | 2,079 | 8.53-10.71 | 7.61-9.84 |
| வங்கிகளுக்கிடையிலான மீள்கொள்வனவு | 1,431 | 3,422 | 7.91-9.68 | 6.97-9.08 |
| மத்திய வங்கி மீள்கொள்வனவு | 2,740 | 5,677 | 7.00-9.46 | 6.50-8.55 |
| மத்திய வங்கி நேர்மாற்று மீள்கொள்வனவு | 793 | 187 | 7.94-9.75 | 8.10-9.50 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

**திறந்த சந்தை நடவடிக்கை நியதிச்சட்ட ஒதுக்க முகாமைத்துவம் மற்றும் வங்கியின் நாணயக்கொள்கை நிலையினை தளர்த்தல் போன்ற மத்திய வங்கியின் கொள்கைகளில் ஏற்படும் மாற்றங்களிற்குப் பதிலிறுக்கும் வகையில் ஆண்டுக்காலத்தில் அழைப்புப் பணச் சந்தை விகிதங்கள் கீழ்நோக்கி திருத்தப்பட்டன.** 2013 மே 10இல் மத்திய வங்கி மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதங்களை முறையே 7.00 சதவீதம் மற்றும் 9.00 சதவீதத்திற்கு 50 அடிப்படைப் புள்ளிகளினால் குறைத்த வேளையில் அவை 2013 ஒத்தோபர் 15இல் மேலும் 50 அடிப்படைப் புள்ளிகளினால் முறையே 6.50 சதவீதம் மற்றும் 8.50 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டது. இதனால் பெப்புரவரி நடுப்பகுதி வரை கொள்கை வட்டிவீத வீழ்ச்சிக்கும் மேலாகக் காணப்பட்ட சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்பு பண வீதம் ஆண்டிறுதியில் கொள்கை வீத வீழ்ச்சியின் நடுப்பகுதி நோக்கி படிப்படியாக வீழ்ச்சியடைந்தது. சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம் 2012 இறுதியின் 9.83 சதவீதத்திலிருந்து 2013 இறுதியில் 7.66 சதவீதமாக இருந்தது.

## உள்நாட்டின் அந்நியச் செலாவணிச் சந்தை

**பாதகமான உலகச் சந்தை நிலமைகளைக் கருத்திற்கொள்கையில் 2013இல் இலங்கை ரூபா 2.8 சதவீதத்தினால் தேய்வடைந்தமை சிறிதளவானதாகக் கருதப்படுகின்றது.** 2012 இறுதி நிலைமைகளுடன் ஒப்பிடுகையில் 2013 மே இறுதியில் இலங்கை ரூபா சிறிதளவான பெறுமதி அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளதுடன் இது வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்கள் குறிப்பாக தொழிலாளர் பணவனுப்பல்கள் மற்றும் சுற்றுலாவின் பேரிலான உட்பாய்ச்சல்கள் அதிகரித்திருந்தன. எனினும் யூன் தொடக்கம் ஓகத்து வரையான காலப்பகுதியில் ரூபா கணிசமானளவு தேய்வடைந்தமைக்கு ஐக்கிய அமெரிக்காவில் நிலவிய

நிச்சயமற்ற தன்மைகள் நாணய தூண்டுதல்களின் காரணமாக முன்கூட்டிய மீளப்பெறல்களினால் ஓர் தற்காலிக வெளிநாட்டு நாணய வெளிப்பாய்ச்சல்கள் ஏற்பட்டமையே காரணமாகும், ஆனால் அதற்குப் பிறகு மீண்டது. இதன் விளைவாக, 2013 காலப்பகுதியில் இலங்கை ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக 2.8 சதவீதத்தினால் பெறுமதித் தேய்வை அதாவது ரூ.127.1608 இலிருந்து ரூ.130.7530 பதிவு செய்தது. இலங்கை ரூபா ஸ்ரேலிங் பவுணுக்கெதிராகவும் யூரோவிற்கெதிராகவும் முறையே 4.69 சதவீதம் மற்றும் 6.83 சதவீதத்தினால் தேய்வடைந்த அதேவேளை யப்பானிய யென், அவுத்திரேலிய டொலர் மற்றும் இந்திய ரூபாய்க்கெதிராக முறையே 18.78 சதவீதம் 13.35 சதவீதம் மற்றும் 10.16 சதவீதத்தினால் பெறுமதி உயர்வடைந்தது.

**உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் பதிவு செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் அளவுகள் ஓர் அதிகரிப்பைக்காட்டின.** உள்நாட்டுச் சந்தையில் வெளிநாட்டுச் செலாவணிகளின் கொடுக்கல்வாங்கல்களின் அளவு 2012இன் ஐ.அ.டொலர் 13,420 மில்லியனிலிருந்து 2013இல் ஐ.அ.டொலர் 13,705 மில்லியனுக்கு சிறிதளவில் அதிகரித்து உள்நாட்டுப் பொருளாதாரத்தின் மீதான உலகளாவிய பொருளாதார மெதுவான திருப்பத்தின் தாக்கத்தினைப் பிரதிபலிக்கின்றது. வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலான நாளாந்தச் சராசரி அளவுகள் 2012இன் ஐ.அ.டொலர் 55.45 மில்லியனிலிருந்து 2013இல் ஐ.அ.டொலர் 56.4 மில்லியனுக்கு சிறிதளவால் அதிகரித்தது.

**2013இல் வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டு நாணயத்தின் நாளாந்த தேறிய திறந்த நிலையானது மேல் நோக்கித் திருத்தப்பட்டது.** 2013 சனவரி 2 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் 2012இன் ஐ.அ.டொலர் 64.7 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 120 மில்லியனுக்கு மேல் நோக்கித் திருத்தப்பட்டது. இது பொருளாதார நடவடிக்கைகள் மேம்படும் என்ற எதிர்பார்க்கைகளுடன் வர்த்தக வங்கிகள் தமது வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களை நெகிழ்வுத்தன்மையுடன் ஈடுபடுதலை அனுமதிக்கிறது.

**2013இல் இலங்கை மத்திய வங்கி சந்தையில் தேறிய கொள்வனவாளனாக விளங்கியது.** மத்திய வங்கி செலாவணி வீதங்களில் காரணங்களற்ற ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கும் பொருட்டு வரையறுக்கப்பட்ட அளவில் சந்தையில் தலையீடு செய்தது. ஆண்டுக் காலத்தின் முதலரைப் பகுதியில், மத்திய வங்கி சந்தையிலிருந்து ஐ.அ.டொலர் 700.75 மில்லியனை உள்ளீர்த்தது. ஐக்கிய அமெரிக்காவில் நேரகாலத்துடனான நாணயத் தூண்டல்கள் புறக்கீடு செய்வதற்கான சாத்தியங்களிற்கான சூழல் நிலவுவதைக் கருத்திற்கொண்டு முதலீட்டாளர்கள் குறிப்பிட்ட இக்காலப்பகுதியில் மேற்கொண்ட வெளிநாட்டு நாணயங்களின் வெளிப்பாய்ச்சலைக் கருத்திற்கொண்டு யூன் தொடக்கம் செத்தெம்பர் வரையான காலப்பகுதியில் மத்திய வங்கி ஐ.அ.டொலர் 559.4 மில்லியனுக்கு நிரம்பல் செய்தது. 2013 காலப்பகுதியில் ஆண்டு முழுவதுமாக, மத்திய வங்கி ஐ.அ.டொலர் 435.59 மில்லியன் பெறுமதியான தேறிய கொள்வனவுகளுடன் சந்தையின் தேறிய கொள்வனவாளராக விளங்கியது.

## அரச பிணையங்கள் சந்தை

**2013இன் ஆரம்பத்தில் உயர்வாகக் காணப்பட்ட திறைசேரி உண்டியல்கள் தொடர்பான விளைவு வீதங்கள் தணிந்த பணவீக்கச் சூழலில் நடைமுறைக்கிடப்பட்ட முன்மதியுடைய படுகடன் முகாமைத்துவ உபாயங்களினால் 2013இன் இரண்டாம் அரையாண்டிலிருந்து கணிசமானளவு வீழ்ச்சியடைந்தது.** சாதகமான சந்தைத் திரவத்தன்மை மட்டங்கள் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் தொடர்ச்சியான ஈடுபாடு என்பனவும் அரச பிணையங்கள் சந்தையின் அதிகரித்தளவு நடவடிக்கைகளுக்கும் அரச பிணையங்கள் தொடர்பான வட்டி வீதங்கள் வீழ்ச்சியடையவும் பங்களித்தன. ஆண்டுக் காலப்பகுதியில் 91 நாள், 182 நாள் மற்றும் 364 நாள் திறைசேரி உண்டியல்கள் மீதான நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்கள் முறையே 246 அடிப்படைப் புள்ளிகள், 347 அடிப்படைப் புள்ளிகள் மற்றும் 340 அடிப்படைப் புள்ளிகளினால் 2013 திசெம்பர் இறுதியில் முறையே 7.54 சதவீதம், 7.85 சதவீதம் மற்றும் 8.29 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

**2013இல் திறைசேரி உண்டியல்களின் விளைவுகளின் வீழ்ச்சியுடன் சேர்ந்து திறைசேரி முறிகளுடன் தொடர்புடைய விளைவு வீதங்களும் வீழ்ச்சியடைந்திருந்தன.** 2013இல் திறைசேரி முறிகளின் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்கள் அண்ணளவாக 500 அடிப்படைப் புள்ளிகளிலிருந்து 200 அடிப்படைப் புள்ளிகளினால் விளைவு வளையி (2-30 ஆண்டுகள்) வீழ்ச்சியடைந்தது. அரச பிணையங்கள் தொடர்பில் 2013ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் வெளிநாட்டு முதலீட்டாளர் முன்னுரிமைகளில் ஓர் நகர்வு திறைசேரி உண்டியல்களிலிருந்து திறைசேரி முறிகளுக்குக் காணப்பட்டது. இதன்படி, வெளிநாட்டு முதலீட்டாளர்கள் கொண்டிருந்த திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள் 2012 இறுதியின் முறையே ரூ.80.2 பில்லியன் மற்றும் ரூ.317.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2013 திசெம்பர் இறுதியில் முறையே ரூ.73.9 பில்லியன் மற்றும் ரூ.403.5 பில்லியனாகக் காணப்பட்டது.

**அட்டவணை 8.16 திறைசேரி உண்டியல்களின் ஆண்டுக்கான முதன்மைச் சந்தை நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்கள்**

ஓராண்டுக்கு சதவீதம்

| ஆண்டு | முதிர்ச்சி | | | திரண்ட சராகரி |
|---|---|---|---|---|
| | 91-நாட்கள் | 182-நாட்கள் | 364-நாட்கள் | |
| 2009 | 11.43 | 12.18 | 12.76 | 12.25 |
| 2010 | 7.86 | 8.42 | 8.43 | 8.32 |
| 2011 | 7.28 | 7.21 | 7.41 | 7.31 |
| 2012 | 10.72 | 12.29 | 12.14 | 11.81 |
| 2013 | 8.95 | 9.91 | 10.65 | 10.45 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

**உள்நாட்டில் ஐ.அ.டொலர்களின் கிடைப்பனவைப் பயன்படுத்தல் மற்றும் அரசாங்கத்தின் நிதியிடல் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக பெறுதிகளின் கிரயத்தைக் குறைத்தலின் பொருட்டு 2013இல் ஐ.அ.டொலர்களில் குறித்துரைக்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி முறிகள் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டன.** இலங்கை அபிவிருத்தி முறிகளின் முதன்மை முதலீட்டாளர்கள் வணிக வங்கிகளாகக் காணப்பட்ட போதிலும் ஐக்கிய அமெரிக்கா தவிர்ந்த வெளிநாட்டு முதலீட்டாளர்களும் முதலீடு செய்தனர். இதுவரையில், அரசாங்கம் 3 ஆண்டுகள், 4 ஆண்டுகள் மற்றும் 5 ஆண்டுகள் முதிர்ச்சிக் காலத்தினைக் கொண்ட இலங்கை அபிவிருத்தி முறிகளை முதலாந்தரச் சந்தையில் வழங்கியது. 2013இல் அரசாங்கம் 3 ஆண்டுகள் மற்றும் 5 ஆண்டுகள் முதிர்ச்சிக் காலத்தினைக் கொண்ட முறிகளை ஆறு மாத லண்டன் வங்கிகளுக்கிடையேயான வழங்கல் வீதங்களுடன் முறையே 400 அடிப்படைப் புள்ளிகள் மற்றும் 415 அடிப்படைப் புள்ளிகளைக் கூட்டிய விளைவு வீதங்களாகக் கொண்ட இலங்கை அபிவிருத்தி முறிகளை தேறிய அடிப்படையில் வழங்கியதனூடாக ஐ.அ.டொலர் 1,070.1 மில்லியனைத் திரட்டியது.

**திறைசேரி உண்டியல்கள் மற்றும் குறுகிய கால திறைசேரி முறிகள் என்பவற்றின் வழங்கலை குறைப்பதற்கான கூட்டு முயற்சிகளின் விளைவாக, 2013இல் நடுத்தர காலத்திலிருந்து நீண்ட காலத்திற்காக வெளியிடப்பட்ட திறைசேரி முறிகளின் தொகையானது அதிகரித்தது.** 2013இல், அரச பிணையங்களுக்கான நடுத்தர காலத்திலிருந்து நீண்ட கால இலக்குகள், விளைவு வீதத்தினை செயற்படுத்துவதற்கான நடுத்தர காலப் படுகடன் முகாமைத்துவ தந்திரோபாயங்களுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் மேற்கொள்ளப்பட்ட திறைசேரி முறிகளுக்கான மொத்தமான 30 ஏல விற்பனைகளில், 15 ஏல விற்பனைகள் 5 தொடக்கம் 10 ஆண்டுக் கால முதிர்ச்சிக் காலத்தைக் கொண்ட திறைசேரி முறிகளுக்காக மேற்கொள்ளப்பட்ட வேளையில் 13 ஏல விற்பனைகளானது 11 ஆண்டுகள் மற்றும் முதல் தடவையாக வெளியிடப்பட்ட 30 ஆண்டு திறைசேரி முறிகள் உட்பட நீண்ட கால முதிர்ச்சிக் காலத்தைக் கொண்ட திறைசேரி முறிகளுக்காக மேற்கொள்ளப்பட்டது. அரச பிணையங்களின் முதிர்ச்சிக் கட்டமைப்பினை நீடித்தலானது உள்நாட்டுப் படுகடன் சொத்துப்பட்டியல் தொடர்பான தீர்ப்பனவு தேவைப்பாடுகளின் குறைப்பிற்கு பங்களித்தது. நடுத்தர காலத்திலிருந்து நீண்ட காலத்திற்கான திறைசேரி முறிகளானது (5 ஆண்டுகள் அல்லது அதற்குக்கூடிய முதிர்ச்சிக்காலம்) 2013இன் மொத்த வெளியீட்டில் 80.4 சதவீதமாக விளங்கியது. இதன் விளைவாக, வெளியிடப்பட்ட திறைசேரி முறிகளின் பட்டியல் மீள்நிதியிடல் இடர்நேர்வை அளவிடும் முக்கிய குறிகாட்டியான முதிர்ச்சிக்கான சராசரிக் காலமானது 2012இல் காணப்பட்ட 6.86 ஆண்டுகளிலிருந்து 2013இற்கு 10.24 ஆண்டுகளாக அதிகரித்ததுடன், ஒட்டுமொத்த பொதுப்படுகடன் பட்டியலின் முதிர்ச்சிக் காலமானது 2012இல் காணப்பட்ட 3.23 ஆண்டுகளிலிருந்து 2013இற்கு 4.82 ஆண்டுகளாக மேலும் முன்னேறுவதற்கு உதவின.

**அட்டவணை 8.17 அரச பிணையங்களின் சந்தை விளைவு வீதங்கள்**

ஓராண்டுக்கு சதவீதம்

| விடயம் | முதலாந்தர சந்தை | | | | இரண்டாந்தர சந்தை | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2012 | | 2013 | | 2012 | | 2013 | |
| | தாழ்ந்த | உயர்ந்த | தாழ்ந்த | உயர்ந்த | தாழ்ந்த | உயர்ந்த | தாழ்ந்த | உயர்ந்த |
| திறைசேரி உண்டியல்கள் | | | | | | | | |
| 91 நாள் | 8.67 | 12.19 | 7.54 | 9.91 | 8.63 | 12.06 | 7.52 | 10.12 |
| 182 நாள் | 8.71 | 13.12 | 7.85 | 10.99 | 8.71 | 13.10 | 7.83 | 11.26 |
| 364 நாள் | 9.30 | 13.60 | 8.29 | 11.38 | 9.28 | 13.34 | 8.27 | 11.72 |
| திறைசேரி முறிகள் | | | | | | | | |
| 2 ஆண்டு | 9.45 | 13.62 | - | - | 9.37 | 13.77 | 8.53 | 11.65 |
| 3 ஆண்டு | 10.20 | 13.50 | 10.87 | 10.98 | 9.58 | 13.93 | 9.05 | 11.75 |
| 4 ஆண்டு | 9.55 | 14.10 | - | - | 9.69 | 14.16 | 9.54 | 11.95 |
| 5 ஆண்டு | 10.75 | 14.15 | 10.64 | 11.17 | 9.78 | 14.35 | 10.26 | 12.01 |
| 6 ஆண்டு | 9.75 | 14.25 | 10.97 | | 9.81 | 14.36 | 10.37 | 11.99 |
| 10 ஆண்டு | 10.25 | 14.75 | 11.76 | 11.8 | 9.93 | 14.63 | 10.88 | 12.30 |
| 15 ஆண்டு | - | - | 11.9 | 12.21 | 10.07 | 14.59 | 11.14 | 12.72 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

## கம்பனிப் படுகடன் பிணையங்கள் சந்தை

### வர்த்தகப் பத்திரங்கள்

**வர்த்தகப் பத்திரங்களுக்கான சந்தை நடவடிக்கைகளானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2013இல் குறைவாகக் காணப்பட்டது.** 2013இல் வங்கிகளின் ஆதரவுடன் வெளியிடப்பட்ட வர்த்தகப் பத்திரங்களின் மொத்தப் பெறுமதி 2012இன் ரூ.36.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.28.3 பில்லியனாகக் காணப்பட்டது. 2013இல் வர்த்தகப் பத்திரங்கள் மீதான வட்டி வீதங்களும் 2012இன் 11.25 - 22.00 சதவீத வீச்சுடன் ஒப்பிடுகையில் 8.5 - 22.00 சதவீத வீச்சாக வேறுபட்டது. 3 மாதங்கள் வரையான முதிர்ச்சியைக் கொண்ட வர்த்தகப் பத்திரங்கள் சந்தையின் 80 சதவீதத்திற்கு வகைகூறிய

வேளையில் 6 மாத மற்றும் 12 மாத முதிர்ச்சிகளைக் கொண்ட வர்த்தகப் பத்திரங்களின் பங்குகள் முறையே 13 சதவீதமாகவும் மற்றும் 7 சதவீதமாகவும் காணப்பட்டன. வர்த்தகப் பத்திரங்களின் மொத்த வெளிநின்ற பெறுமதி 2012 திசெம்பர் இறுதியின் ரூ.10.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2013 திசெம்பர் இறுதியில் ரூ.7.4 பில்லியனாகக் காணப்பட்டது.


## கம்பனி முறிகள்

**வழங்கப்பட்ட தொகுதிக் கடன்களின் பெறுமதி மற்றும் எண்ணிக்கை ஆகிய இரண்டும் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமையின் காரணமாக 2013இல் தொகுதிக் கடன்களுக்கான சந்தையில் காணப்பட்ட நடவடிக்கை மட்டம் செங்குத்தாக உயர்வடைந்தது.** இவ்வளர்ச்சிக்கு 2013ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டதிற்கேற்ப வழங்கப்பட்ட வரி விலக்கல்களே முக்கிய காரணமாகும். இவ்வாண்டுப் பகுதியில் 24 கம்பனிகளினால் 83 புதிய தொகுதிக் கடன்கள் வழங்கப்பட்டன. இவை பின்னர் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் 24 கம்பனிகளினால் பட்டியலிடப்பட்டன. 2012 உடன் ஒப்பிடுகையில், 2013இல் ரூ.69.1 பில்லியன் தொகை கொண்ட தொகுதிக் கடன்கள் வெளியிடப்படாததுடன் இரண்டு வங்கிதொழில் நிறுவனங்களினால் வெளியிடப்பட்ட ரூ.12.5 பில்லியன் கொண்ட 9 வழங்கல்களும் காணப்பட்டன. 2013இல் வழங்கப்பட்ட தொகுதிக் கடன்கள் தொடர்பில் நிதியியல் துறைக்கு வெளியேயுள்ள கம்பனிகள் 20 தொகுதிக் கடன்களுக்கு வகைகூறின. இவற்றின் மூலம் அவை ரூ.11 பில்லியனைத் திரட்டிக் கொண்டன. வங்கிகள் 22 தொகுதிக் கடன்களின் வெளியீடுகளுக்கு வகைகூறி ரூ.36 பில்லியனைத் திரட்டிக் கொண்ட வேளையில், ரூ.22.1 பில்லியன் திரட்டிக் கொண்ட நிதிக் கம்பனிகள் 41 தொகுதிக் கடன்களின் வெளியீட்டிற்கு வகைகூறின. குறிப்பாக, தேசிய அபிவிருத்தி வங்கி பிஎல்சி ரூ.10 பில்லியன் கொண்ட உள்ளார்ந்த தொகையினைத் திரட்டியதுடன் இவ்வாண்டுப் பகுதியில் தொகுதிக் கடனுடன் திரட்டப்பட்ட மொத்தத் தொகையில் 14.4 சதவீதத்திற்கு வகைகூறியது. 2013இல் வெளியிடப்பட்ட தொகுதிக் கடன்கள் நிலையான மற்றும் மிதக்கும் வட்டி வீதங்கள் இரண்டினையும் கொண்டிருந்ததுடன் அவை 8 இலிருந்து 20 சதவீதம் வரையில் வேறுபட்டன. கொழும்பு பங்குச் சந்தையின் படுகடன் பிணையங்கள் வர்த்தகப்படுத்தல் முறைமையில் பட்டியலிடப்பட்டுள்ள தொகுதிக் கடன்களின் வர்த்தகப்படுத்தப்பட்ட புரள்வு 2012இன் ரூ.75.7 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2013இல் ரூ.2,229 மில்லியனாக பெருமளவில் உயர்ந்து காணப்பட்டது. கம்பனிப் படுகடன் சந்தையை அபிவிருத்தி செய்வதன் பொருட்டு, கம்பனிப் படுகடன் பிணையங்களின் வட்டி வருமானத்தின் மீதான வருமான வரி 2013ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளின்படி 2013 சனவரி மாதத்திலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் விலக்களிக்கப்பட்டுள்ளது.


## பங்கு மூலதனச் சந்தை

**அனைத்துப் பங்கு விலைச்சுட்டெண் மற்றும் இலங்கைப் பங்குச் சந்தையின் எஸ்.பி.சிறிலங்கா 20 என்பன 2013இல் இலாபத்தினைப் பதிவு செய்திருந்தன.** அனைத்துப் பங்கு விலைச்சுட்டெண் தொடர்ந்து இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் 2013இல் ஏறத்தாழ 16 சதவீதத்தினால் அதிகரித்தது. இது 2012இல் 7.1 சதவீதமாகவும் 2011இல் 8.5 சதவீதமாகவும் காணப்பட்டன. 2013ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் அனைத்துப் பங்கு விலைச்சுட்டெண்ணானது 4.8 சதவீதத்தினைப் பெற்றுக் கொள்ள முடிந்த வேளையில், கொங்கொங் (+3.8 சதவீதம்), இந்தியா (+3.6 சதவீதம்), பிலிப்பைன்ஸ் (+1.3 சதவீதம்), கொரியா (0.7 சதவீதம்) மற்றும் சிங்கப்பூர் (+0.01 சதவீதம்) போன்ற அநேக பிராந்திய சந்தைகளினை விட மேலதிகமான செயற்பாட்டினைக் கொண்டிருந்தது. 2013 திசெம்பர் முடிவில் ஸ்ரான்டட் அன்ட் புவர் இலங்கை, 2012 யூனில் அறிமுகப்படுத்தப்பட்ட 20 சுட்டெண்ணானது 5.8 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. சந்தை மூலதனமாக்கல் 2012இல் ரூ.2.17 றில்லியனிலிருந்து 2013 திசெம்பர் முடிவில் 13.4 சதவீதத்தால் அதாவது ரூ.292 பில்லியனினால் அதிகரித்து ரூ.2.46 றில்லியனை அடைந்தது. இவ்வாண்டில் வட்டி வீதங்களில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைத் தோற்றுவித்த உள்நாட்டு வட்டி வீதங்களின் கீழ் நோக்கிய போக்கு, இலங்கை ரூபாவிற்கெதிராக ஒப்பீட்டு ரீதியில் உறுதியாகக் காணப்பட்ட செலாவணி வீதங்கள், உலகளாவிய பொருளாதாரங்களின்

வரைபடம் 8.14 அனைத்து பங்கு விலைச்சுட்டெண், எஸ்அன்ட்பீ இலங்கை 20 சுட்டெண் மற்றும் கொழும்பு பங்கு பரிவர்த்தனையின் மொத்த புரள்வு



**வரைபடம் 8.15 கொழும்பு பங்கு பரிவர்த்தனையில் வெளிநாட்டு பங்கேற்பு**




படிப்படியான மீட்சி உள்நாட்டு பேரண்டப் பொருளாதாரங்களின் செயலாற்றத்தின் மீது கொண்டிருந்த சாதகமான தாக்கம் என்பன பங்குச் சந்தைச் செயலாற்றத்திற்கு ஆதரவாக விளங்கிய காரணிகளாகும். 2013இல் ரூ.22.9 பில்லியன் கொண்ட வெளிநாட்டு முதலீடுகளின் தேறிய பாய்ச்சலைத் தோற்றுவித்த நிறுவன ரீதியான முதலீட்டாளர்கள் உட்பட வெளிநாட்டு முதலீட்டாளர்களின் அதிகரித்த பங்கேற்பும் இவ்வாண்டுப் பகுதியில் கொழும்பு பங்குச் சந்தையின் செயலாற்றத்திற்கு சாதகமான முறையில் பங்களித்தது. ஒப்பிடுகையில், தேறிய அடிப்படையில், கொழும்பு பங்குச் சந்தையில் வெளிநாட்டு முதலீடுகள் 2012இல் ரூ.38.7 பில்லியனாகக் காணப்பட்டன. 2013இல் கொழும்பு பங்குச் சந்தையில் முதலாந்தரச் சந்தை நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில் ஒன்பது கம்பனிகளின் உரிமை வழங்கலின் மூலம் ரூ.25.6 பில்லியன் இரண்டு கம்பனிகளின் ஆரம்பப் பங்கு வழங்கலின் மூலம் ரூ.2 பில்லியனும் திரட்டப்பட்டன. அதேவேளை கொழும்புப் பங்குச் சந்தையில் பட்டியலிடப்படுவதனை ஊக்குவிக்கும் ஒரு முயற்சியாக 2014இல் கொழும்புப் பங்குச் சந்தையில் பட்டியலிடும் கம்பனிகளுக்கு 2014இற்கான வரவு செலவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு 3 ஆண்டு காலப்பகுதிக்கு அரை வரி விடுப்பு வழங்கப்பட்டது.

**அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண்ணில் ஏற்பட்ட அதிகரிப்புடன் சேர்ந்து 2013இல் பல துறைவாரியான சுட்டெண்களும் இலாபங்களைப் பதிவு செய்தன.** அவற்றுள் உணவு, குடிபானம் மற்றும் புகையிலை (28 சதவீதம்), வலு மற்றும் சக்தி (20 சதவீதம்), நலக் கவனிப்பு (17 சதவீதம்), காணி மற்றும் சொத்து (12 சதவீதம்), தயாரிப்பு (9 சதவீதம்) வங்கி நிதி மற்றும் காப்புறுதி (6 சதவீதம்) மற்றும் கட்டுமானம் மற்றும் பொறியியல் (6 சதவீதம்) என்பன காணப்பட்டதுடன் இவை ஒன்றுசேர்ந்து 2013 இறுதியில் சந்தை மூலதனமயமாக்கலில் 52.5 சதவீதத்திற்கு வகைகூறின (தொடர்பான சுட்டெண்ணில் ஏற்பட்ட அதிகரிப்பு அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளன). இவ்வாண்டில் பின்னடைவினைக் கொண்ட துறைகளாக தகவல் தொழில்நுட்பம் (-27 சதவீதம்), வர்த்தகப்படுத்தல் (-21 சதவீதம்), களஞ்சியப்படுத்தல் மற்றும் வழங்கல் (-17 சதவீதம்) மற்றும் இரசாயனங்கள் மற்றும் மருந்தாக்கல் உற்பத்திகள் (-13 சதவீதம்) என்பன காணப்பட்டன. துறைவாரியான விலைச் சுட்டெண்களில் ஏற்பட்ட அசைவுகளின் மூலம் காட்டப்பட்டவாறு பங்கு விலைகளின் அசைவுகளைப் பிரதிபலிக்கின்றவாறு சந்தை விலை வருவாய் விகிதமும் 2012 இறுதியின் 15.93 இலிருந்து 2013இல் 15.92 இற்கு நகர்ந்தது.

**மொத்தப் புரள்வு மட்டங்களினால் பிரதிபலிக்கப்பட்டவாறு கொழும்புப் பங்குச் சந்தையின் நடவடிக்கைகள் 2013இன் பெரும்பகுதியில் ஒப்பீட்டு ரீதியில் குறைந்த நிலையில் காணப்பட்டன.** 2013ஆம் ஆண்டுக்கான மொத்தப் புரள்வானது அதன் முன்னைய ஆண்டினைவிட 6.2 சதவீதக் குறைப்பினை வெளிப்படுத்தி ரூ.200.4 பில்லியனாக இருந்தது. 2013இல் சராசரி நாளாந்தப் புரள்வானது 2012இல் ரூ.884 மில்லியனிலிருந்து ரூ.828 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. சராசரி நாளாந்தப் புரள்வில் ஏற்பட்ட வீழ்ச்சியைக் கருத்திற்கொள்கையில் சராசரி சந்தை மூலதனமயமாக்கலுக்கான ஆண்டின் மொத்தப் புரள்வு விகிதமான மொத்தப் புரள்வு வேக விகிதத்தினால்

**அட்டவணை 8.18 பங்குச் சந்தையின் செயலாற்றம்**

| விடயம் | 2012 | 2013 |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டெண் (1985=100) (அ) | 5,643.0 | 5,912.8 |
| ஆண்டுக்கு ஆண்டு மாற்றம் (%) | (7.0) | 4.8 |
| எஸ் அண்ட்பி எஸ் எல் 20 சுட்டென் (2004 திசெம்பர் 17=1,000) (அ) | 3,085 | 3,264 |
| ஆண்டுக்கு ஆண்டு மாற்றம் (%) | 8.0 | 5.8 |
| சந்தை மூலதனமாக்கல் (ரூ.பில்) (அ) | 2,167.6 | 2,459.9 |
| மொ.உ.உ.யின் சதவீதமாக (%) | 28.6 | 28.4 |
| சந்தை விலை வருவாயீட்டு விகிதம் (அ) | 15.9 | 15.9 |
| சந்தை மூலதனவாக்கத்திற்கான மொத்த புரள்வு (%) | 9.9 | 8.7 |
| சராசரி நாளாந்த மொத்த புரள்வு (ரூ. மில்) | 884.0 | 828.0 |
| வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகளின் பெறுமதி (ரூ. பில்) | 213.8 | 200.5 |
| வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை (மில்) | 9,691 | 9,054 |
| பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கை | 287 | 289 |
| அறிமுகம் செய்யப்பட்டவை (ஆ) | 11 | 1 |
| பொது மக்களுக்கான ஆரம்ப பங்கு வழங்கல்களின் எண்ணிக்கை / விற்பனைக்கான வழங்கல்கள் (ஆ) | 6 | 1 |
| உரிமை வழங்கல்களின் எண்ணிக்கை | 19 | 9 |
| உரிமை வழங்கல்கள் ஊடாகவும் ஆரம்ப பொது வழங்கல் ஊடாகவும் திரட்டப்பட்ட தொகை (ரூ.பில்) | 13.3 | 26.0 |

(அ) ஆண்டு முடிவில்
(ஆ) பதிவினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு 3 முறைகள் உள்ளன, அதாவது பொதுமக்களுக்கான வழங்கலினைத் தேவைப்படுத்தாத ஒரு அறிமுகம் ஏற்கனவே உள்ள பங்குகளை பொதுமக்களுக்கு வழங்குகின்ற விற்பனைக்கான வழங்கல் மற்றும் புதிய பங்குகளை பொதுமக்களுக்கு வழங்குகின்ற உதவு தொகைக்கான வழங்கல்கள் என்பன.

மூலம்: கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

பிரதிபலிக்கப்பட்டவாறு சந்தைத் திரவத்தன்மையும் வீழ்ச்சியடைந்தது. புரள்வு சுற்றோட்ட விகிதம் 2012இல் காணப்பட்ட 10.6 சதவீதத்திலிருந்து 2013இல் 8.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. குறைந்த சில்லறை நடவடிக்கையின் ஓரளவு காரணமாக, வர்த்தகப்படுத்தப்பட்ட பங்குகளின் சராசரி நாளாந்த அளவு மற்றும் வர்த்தகங்களின் சராசரி எண்ணிக்கையும் கூட 2013இல் வீழ்ச்சியடைந்தன. உள்நாட்டுப் பங்கேற்பாளர்கள் அதாவது, சில்லறை முதலீட்டாளர்கள் அதேபோன்று உள்நாட்டில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் இவ்வாண்டின் மொத்த சந்தைப் புரள்வில் 64 சதவீதத்திற்கு வகைகூறின. ஒப்பிடுகையில் முன்னைய ஆண்டில் இவை 66 சதவீதத்திற்கு வகைகூறியிருந்தன.

**2013இல் பங்கு மூலதனச் சந்தையை மேம்படுத்துவதற்காக பல ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.** சந்தையில் திரவத்தன்மை மற்றும் புரள்வினை அதிகரிக்கும் நோக்குடன் பட்டியலிடப்பட்ட கம்பனிகளுக்காக கட்டாயப் பொறுப்புக்களை அறிமுகப்படுத்தல், தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல்வாங்கல்களுக்காக சிறந்த நடைமுறைகளின் குறியீட்டினை அறிமுகப்படுத்தல், பணிப்பாளர்களின வெளியீட்டு தேவைப்பாடுகளை மாற்றுதல், விற்பனைக்கான ஒரு வழங்கல் அல்லது உதவுதொகை வழங்கல்கள் இல்லாமல் பட்டியலிடலுக்கான தெரிவை கம்பனிக்கு வழங்குகின்ற பட்டியலிடல் முறை போன்ற மீள்அறிமுகப்படுத்தல், பொதுப் பட்டியலிடல் தேவைப்பாடுகளுக்கு மேலதிகமாக கடப்பாடுகளைச் சேர்த்துக் கொள்ளுதல் மற்றும் முதன்மை வணிகர்களை கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் வர்த்தக உறுப்பினர்களாக வருவதற்கு அனுமதித்தல் ஆகியன ஆண்டுக் காலப்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட சில முக்கியத்துவம் வாய்ந்த தாக்கங்களாக இருந்தன.

## 8.4 அபிவிருத்தி நிதியும் நிதி வசதிகளைப் பெற்றுக்கொள்ளுதலும்

**பிரதேச அபிவிருத்தியை மேம்படுத்தும் நோக்குடன், மத்திய வங்கி அதன் மீள்நிதியிடல் திட்டங்கள், வட்டி உதவுதொகைத் திட்டங்கள், கொடுகடன் துணை நிரப்புத் திட்டங்கள் என்பனவற்றை தொடர்ந்தும் மேற்கொண்டதுடன் இவை பங்கேற்கின்ற நிதியியல் நிறுவனங்களினூடாக தொழிற்படுத்தப்படுகின்றன.** இத்திட்டங்களினூடாக வழங்கப்பட்ட கொடுகடன் வேளாண்மை, விலங்கு வளர்ப்பு மற்றும் நுண்பாகம், சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில் முயற்சிகள் ஆகிய துறைகளுக்கு நெறிப்படுத்தப்பட்டன. இத்திட்டங்கள் நிதியைப் பெறுவதற்கான வழிவகைகளை அதிகரிப்பதன் மூலம் பொருட்கள் மற்றும் பணிகளின் உற்பத்தியில் அதிகரிப்பினை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுவதுடன், அதன் ஊடாக அனைத்தையும் உள்ளடக்கியதும் சமநிலையுடையதுமான வளர்ச்சியைப் பெற உதவுகிறது.

**கொடுகடன் வசதிகளின் பெரும் பகுதி வேளாண்மைத் துறைக்கு கிடைக்கச் செய்யப்பட்டது.** 2013 காலப்பகுதியில் 96,749 வேளாண்மையாளர்களை உள்ளடக்கி வேளாண்மைத் துறைக்கு வழங்கப்பட்ட மொத்தக் கடன்கள் ரூ.8,440 மில்லியனாகக் காணப்பட்டன. இக்கடன்கள் நிதியியல் பணிகளை பெறுதலுக்கு உதவுவது மட்டுமல்லாமல் அத்தியாவசிய உணவுப்பொருட்களின் உற்பத்தி மற்றும் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தல் போன்றவற்றிற்கு உதவுகின்றன. முதன்மை வேளாண்மைத் துறைக்கான கொடுகடன் திட்டமான வேளாண்மையாளர்களின் தொழிற்படு மூலதனத் தேவைப்பாடுகளை வழங்கும் புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டம், 32 குறுங்கால பயிர்களை உள்ளடக்கியது. 2013இல், அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ், 96,381 வேளாண்மையாளர்களுக்கிடையே மொத்தமாக ரூ.8,164 மில்லியன் கடனாக பகிர்ந்தளிக்கப்பட்டது. முன்னைய இரண்டு ஆண்டுகளைப் போன்று அனைத்தையுமுள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாண மாவட்டம் மிக உயர்ந்தளவான கடன்களைப் பெற்றுக் கொண்டதுடன் 32 சதவீதப் பங்கினை பதிவு செய்தது. அதனையடுத்து அநுராதபுரம், அம்பாந்தோட்டை மற்றும் பொலனறுவை போன்றவை முறையே 10 சதவீதம், 9 சதவீதம் மற்றும் 8 சதவீதப் பங்கினைப் பிரதிபலித்தன. இருப்பினும், அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் முன்னைய ஆண்டில் விநியோகிக்கப்பட்ட கடன்களின் பெறுமதியுடன் ஒப்பிடுகையில், சாதகமற்ற வானிலை காரணமாக, 13 சதவீதக் குறைவினைப் பதிவு செய்தது. 2013இல் அறிமுகப்படுத்தப்பட்ட புதியதொரு கொடுகடன் திட்டமான வர்த்தக அளவிலான பாற்பண்ணை அபிவிருத்திக் கொடுகடன் திட்டமானது பாற்பண்ணை உற்பத்தியாளர்கள் மற்றும் பாற்பண்ணைத் துறை தொழில்முயற்சிகளுக்குமான நிதியியல் தேவைகளை வழங்குவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டது. வர்த்தக அளவிலான பாற்பண்ணை அபிவிருத்திக் கொடுகடன் திட்டத்தின் கீழ் 60 பொருத்தமான கடன் பெறுநர்களுக்கிடையில், ரூ.202 மில்லியன் வழங்கப்பட்டது. அதேவேளை, ஆண்டுக் காலப்பகுதியில் தேயிலை அபிவிருத்தி செயற்றிட்டம் - சுழலும் நிதிக் கடன் திட்டத்தில் 304 கடன் பெறுநர்களுக்கு ரூ.69 மில்லியன் தொகை வழங்கப்பட்டது.

மத்திய வங்கி சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு சலுகை ரீதியான நிதியிடலை தொடர்ந்தும் வழங்கியிருந்தது. அத்தகைய நிதியிடல் முக்கியமாக ஆறு கடன் திட்டங்களின் ஊடாக விடுவிக்கப்பட்டிருந்தன. இவற்றில், இரண்டு கொடுகடன் திட்டங்கள் தீவு முழுவதிலும் அமுல்படுத்தப்பட்டதுடன், எஞ்சியவை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் குறிப்பிட்ட மாவட்டங்கள் மற்றும் 2004இல் சுனாமியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டன. தீவு முழுவதிலும் அமுல்படுத்தப்படுகின்ற சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித் துறையின் பிரதான கொடுகடன் திட்டமாகிய "சௌபாக்கிய" கடன் திட்டம், பல தரப்பட்ட தயாரிப்பு மற்றும் பணிகள் நடடிக்கைகளை உள்ளடக்கிய 9,063 பெறுநர்களுக்கிடையே ரூ.3,492 மில்லியனை பகிர்ந்தளித்தது. இந்தப் பணிகளுடன் தொடர்பான நடவடிக்கைகள் விடுதிகளும் உணவகங்களிலிருந்தும் நலன் மற்றும் தொடர்பான பணிகளை உள்ளடக்கியிருந்தது. மேலும், அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்பயிற்சி நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொண்ட தகைமையைக் கொண்டிருக்கும் இளம் தொழில்முயற்சியாளர்களுக்கு உதவும் நோக்குடன், தீவு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்ட சுயதொழில் வாய்ப்பு, ஊக்குவிப்பு, முயற்சிக் கடன் திட்டத்தினூடாக கடன் வசதிகளை வழங்கியது. 2004ஆம் ஆண்டு சுனாமியால் பாதிக்கப்பட்ட 07 மாவட்டங்களை உள்ளடக்கிய சுனாமிக்கு பின்னைய கரையோர புனரமைப்பு மற்றும் வள முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம், "வடக்கின் எழுச்சி" கடன் திட்டம் - கட்டம் II, கிழக்கு மாகாணத்தின் பொருளாதாரச் செயற்பாடுகளை மீளத்தொடங்கும் கட்டம் II மற்றும் III, மாகாண அபிவிருத்திக் கடன் திட்டம் ஆகிய நான்கு கடன் திட்டங்களும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியினை இலக்காகக் கொண்ட கடன் திட்டங்களாகும். குறித்துரைக்கப்பட்ட மாகாணங்கள்/ மாவட்டங்களுக்கு கடன் வழங்கப்பட்ட இத்தகைய கொடுகடன் திட்டங்களானது, குறிப்பிட்ட மாகாண/ மாவட்டங்களிலுள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயறசி நிறுவனங்களை மீளமைப்பதற்கு அல்லது அபிவிருத்தி செய்வதற்காக வழங்கப்பட்டது. மீள்நிதியிடல் திட்டங்களின் கீழ் மொத்தமாக ரூ.2,005 மில்லியன் சிறிய மற்றும் நடுத்தர துறையிலுள்ள 16,221 தொழில்முயற்சியாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. ஆண்டுக் காலப்பகுதியில், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் 25,483 தொழில்முயற்சியாளர்களை உள்ளடக்கி மொத்தமாக ரூ.5,538 மில்லியனான தொகையை சலுகை ரீதியான நிதியியலில் பெற்றுக் கொண்டன.

**நிதியியல் உள்ளடக்க வசதிகளையும், வறுமை ஒழிப்பினையும் மேம்படுத்தும் குறிக்கோள்களுடன் நுண்பாக நிதியிடலின் கீழ் வகைப்படுத்தலுடன் கூடிய பல கடன் திட்டங்கள் 2013இலும் தொடர்ந்தன.** வறுமை ஒழிப்பு நுண்பாக செயற்றிட்டம் II மற்றும் வறுமை ஒழிப்பு நுண்பாக செயற்றிட்டம் II சுழலும் நிதியக் கடன் ஆகியன 14 மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படட பிரதான நுண்பாக நிதியியல் செயற்றிட்டங்களாகக் காணப்படுவதுடன், 2013இல் 16,166 பயன்பெறுநர்களிடையே ரூ.1,158 மில்லியன் பெறுமதியான தொகை பகிர்ந்தளிக்கப்பட்டது. அதேவேளை வறுமை ஒழிப்பு நுண்பாக நிதி - சூழலும் நிதியக் கடன் திட்டத்தின் கீழ் 15,934 பயன்பெறுநர்களுக்கிடையே ரூ.735 மில்லியன் பெறுமதியான தொகை பகிர்ந்தளிக்கப்பட்டது. பொருளாதார நலனோம்புகை மற்றும் கிராமப்புற வறியோர்களின் பொதுவான நலனோம்புகையை மேம்படுத்தும் நோக்குடன் சிறுவேளாண்மையாளர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம் சூழலும் நிதியத்தின் மூலம் புத்தளம், குருணாகல், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் 5,919 பயன்பெறுநர்களுக்கிடையே ரூ.249 மில்லியன் தொகை பகிர்ந்தளிக்கப்பட்டது. 2013இல் வரண்ட வலய வாழ்வாதார உதவி மற்றும் பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் என்பவை வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர், அதன் சுழலும் நிதியச் செயற்பாடுகள் அநுராதபுரம், பதுளை, மொனராகலை மற்றும் குருணாகலை மாவட்டங்களில் ஆரம்பிக்கப்பட்டன. இச்சுழலும் நிதியத்தின் கீழ் 1,649 பயன்பெறுநர்களுக்கிடையே ரூ.123 மில்லியன் தொகை பகிர்ந்தளிக்கப்பட்டது. தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களிலுள்ள பின்தங்கிய சிறுஉடமையாளர்கள் மற்றும் வறிய மேட்டுநில உணவுப்பயிர் வேளாண்மையாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தல் போன்றவை இக்கடன் திட்டத்தின் நோக்கங்களாகக் காணப்பட்டன. 2013இல், நுண்பாக நிதிக் கொடுகடன் திட்டத்தின் கீழ் ரூ.2,545 மில்லியன் பெறுமதியான கடன்கள் 42,724 பயன்பெறுநர்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்டன.

## 8.5 நிதியியல் உட்கட்டமைப்பு

### கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள்

**நாட்டின் கொடுப்பனவு, கொடுத்துத் தீர்த்தல் மற்றும் தீர்ப்பனவு பொறிமுறைகள் மற்றும் அடிப்படைக் கொடுப்பனவு உட்கட்டமைப்பு என்பன 2013இல் பல குறிப்பிடத்தக்க மைல்கற்களை கடந்து தேசிய கொடுப்பனவு முறைமையின் வினைத்திறன், பாதுகாப்பு மற்றும் ஆற்றல்வாய்ந்த தன்மை**

**என்பவற்றை அதிகரித்தன.** பாரிய பெறுமதிக் கொடுப்பனவு முறையான கொடுப்பனவுகளின் அதிகரிக்கின்ற அளவிற்கு வசதியளிக்கின்ற வேளையில் இவ்வாண்டுப் பகுதியில் ஏதேனும் பெரும் தடைகள் ஏற்படாமல் சில்லறைக் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் தொடர்ந்தும் சுமுகமாக தொழிற்படுத்தப்பட்டன. தேசிய கொடுப்பனவு முறைமையின் மாற்றமுறுகின்ற இடர்நேர்வுத் தோற்றப்பாட்டினை கட்டுப்படுத்துகின்ற வேளையில் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமை அபிவிருத்திக்கு வழிகாட்டலையும் ஆதரவினையும் வழங்குவதற்காக, மத்திய வங்கி நாட்டின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளை ஆளுகின்ற ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை 2013இல் திருத்தியது.

**ஆண்டுக் காலப்பகுதியில் மத்திய வங்கியினால் தொழிற்படுத்தப்படும் லங்கா செட்டில் முறைமை மற்றும் லங்கா கிளியர் (பிறைவேற்) லிமிடெட்டினால் தொழிற்படுத்தப்படும் காசோலை தீர்ப்பனவு முறைமை ஆகியன இலங்கையின் முறையியல் ரீதியான இரண்டு முக்கியத்துவம் வாய்ந்த கொடுப்பனவு முறைமைகள் தாக்கத்தைச் செலுத்திய காசல்லாத கொடுப்பனவுகளின் பெரும்பாலானவற்றை செயற்படுத்தியிருந்தன.** லங்கா செட்டில் முறைமை மற்றும் காசோலை தீர்ப்பனவு முறைமையினால் ஆளுகைக்குட்பட்ட ஒழுங்குபடுத்தல் ஏற்பாடுகள் அவர்களின் பயனாளர்களின் வசதி மற்றும் வினைத்திறன் என்பனவற்றை அதிகரிக்க ஒழுங்குபடுத்தப்பட்டன. பன்னாட்டு நியமங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கு அமைவாக லங்கா செட்டில் முறைமையானது செயற்படுகின்றது என்பதனை உறுதி செய்யும் நோக்குடன், 2013 ஓகத்து 01இல் லங்கா செட்டில் முறைமை தொடர்பான முறைமை விதிகள் இற்றைப்படுத்தப்பட்டு வழங்கப்பட்டன. மேலும், வர்த்தக வங்கிகளின் வாடிக்கையாளர்களுக்கு தொழில்நுட்பவியல் மற்றும் செயற்பாட்டு நன்மைகளிலிருந்தான காசோலை தீர்ப்பனவு முறைமையின் வினைத்திறனுடைய முன்னேற்றங்களின் பயன்களை விருத்தி செய்யும் நோக்குடன், 01/2007 இலக்க பொதுப் பணிப்புரையினால் நிர்ணயிக்கப்பட்ட காசோலை வைப்புக்களை ஏற்றல் மற்றும் பணத்தை வரவு வைத்தல் செயற்பாடுகளுக்கான நியம நேரங்களை திருத்துகின்ற விதத்தில் காசோலை வைப்புக்களை ஏற்றல் மற்றும் செலவு வைத்தல் நடைமுறைகளுக்கான பணி விதிமுறைகளின் 2013இன் 03ஆம் இலக்க பொதுப் பணிப்புரை வெளியிடப்பட்டது.

**அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையை உள்ளடக்கியுள்ள லங்கா செட்டில் முறைமை நாட்டில் காணப்படும் ஒரேயொரு பாரிய பெறுமதியினைக் கொண்ட இலத்திரனியல் கொடுப்பனவு முறையாக காணப்படுவதுடன், லங்கா செகுயர் முறைமையானது பத்திரங்களற்ற அரச பிணையங்களின் தீர்ப்பனவு முறையாகும்.** ஆய்வுக்குரிய ஆண்டுக் காலப்பகுதியில் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையானது 306,977 கொடுக்கல்வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்துள்ளதுடன் இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 7.9 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்துள்ள வேளையில், அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையினூடாக தீர்ப்பனவு செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் மொத்தப் பெறுமதியானது, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 25 சதவீத வளர்ச்சியுடன் ரூ.54,070 பில்லியனாக விளங்கியது. பெறுமதியின் அடிப்படையில், 2013இல் மொத்த காசல்லாத கொடுப்பனவுகளில் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையூடாக தீர்ப்பனவு செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் பங்கானது 86 சதவீதமாக விளங்கியது. முறைமையின் திரவத்தன்மை இடர்நேர்வினைக் குறைப்பதற்குமாக மத்திய வங்கியானது அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் பங்குபற்றும் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட ஒரு நாளுக்குள்ளோன திரவ வசதியைத் தொடர்ந்து மேற்கொண்டது. ஆண்டுக் காலப்பகுதியில் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையியன் பங்கேற்பாளர்களினால் பயன்படுத்தப்பட்ட ஒரு நாளுக்குள்ளேயான திரவவசதியின் நாளாந்த சராசரிப் பெறுமதி ரூ.14.5 பில்லியனாக விளங்கியது. லங்கா செகுயர் வசமிருந்த பத்திரங்களற்ற பிணையங்கள் திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளை உள்ளடக்கியிருந்ததுடன், திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் வெளிநின்ற மொத்தப் பெறுமதியில் 100 சதவீதத்திற்கு வகைகூறியது. 2013 இறுதியில், ரூ.774 பில்லியன் திறைசேரி உண்டியல்களையும் ரூ.2,952 மில்லியன்

**அட்டவணை 8.19 கொடுப்பனவு முறைமையினூடான கொடுக்கல்வாங்கல்கள்**

| கொடுப்பனவு முறைமை | 2012 | | 2013 (அ) | |
|---|---|---|---|---|
| | அளவு ('000) | பெறுமதி (ரூ. பில்.) | அளவு ('000) | பெறுமதி (ரூ. பில்.) |
| **பெரிய மதிப்புடைய கொடுப்பனவு முறைமை** | **285** | **43,255** | **307** | **54,070** |
| அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைமை | 285 | 43,255 | 307 | 54,070 |
| **சில்லறை பெறுமதி கொடுப்பனவு முறைமை** | **101,027** | **7,833** | **110,934** | **8,703** |
| பிரதான காசோலை கொடுத்தல் தீர்த்தல் முறைமை | 47,757 | 6,592 | 47,876 | 7,049 |
| ரூபா வரைவு கொடுத்தல் தீர்த்தல் முறைமை | வி.கி | 0.4 | 2 | 0.3 |
| இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை | 14,475 | 553 | 17,122 | 702 |
| கொடுகடன் அட்டைகள் | 20,052 | 112 | 21,623 | 121 |
| வரவு அட்டைகள் | 11,560 | 35 | 15,059 | 46 |
| இணைய வங்கி | 6,973 | 526 | 8,942 | 772 |
| தொலைபேசி வங்கி | 210 | 5 | 310 | 6 |
| தபால் கருவிகள் | வி.கி | 10 | வி.கி | 7 |
| **மொத்தம்** | **101,312** | **51,088** | **111,241** | **62,773** |
| **ஐ.அ.டொலர் காசோலை கொடுத்தல் தீர்த்தல் முறைமை** | **54** | **26** | **58** | **30** |

(அ) தற்காலிகமானது

மூலம்: இலங்கை மத்திய வங்கி

திறைசேரி முறிகளையும் உள்ளடக்கி பத்திரங்களற்ற பிணையங்களின் மொத்தப் பெறுமதி ரூ.3,726 பில்லியனாக விளங்கியது. 2013 இறுதியில் உள்ளவாறு லங்கா செகுயரானது 84,474 கணக்குகளை வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்களூடாகப் பேணியிருந்தது.

**2013இல், காசோலை தீர்ப்பனவு முறைமையூடாக தீர்ப்பனவு செய்யப்பட்ட காசோலைகளின் மொத்தப் பெறுமதி ரூ.47.9 மில்லியனுக்கு 0.2 சதவீதத்தினால் சராசரியாக அதிகரித்ததுடன், தீர்ப்பனவு செய்யப்பட்ட காசோலைகளின் பெறுமதி ரூ.7,049 பில்லியனுக்கு 6.9 சதவீதத்தில் அதிகரித்தது.** கொடுக்கல்வாங்கல்களின் அளவுகளின் நியதிகளில், ஆண்டுக் காலப்பகுதியில் காசோலைக் கொடுப்பனவானது, காசல்லாத கொடுப்பனவுகளில் 2013இல் 43 சதவீதமாக விளங்கி, காசோலைகள் காசல்லாத கொடுப்பனவுக் கருவிகளின் பெரிதும் பிரபல்யமானதாகத் தொடர்ந்து காணப்பட்டது.

**லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட்டினால் தொழிற்படுத்தப்படும் இலத்திரனியல் வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறையான இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையானது, முறைமையூடாக செயற்படுத்தப்பட்ட அளவு மற்றும் கொடுப்பனவுப் பெறுமதி ஆகிய இரண்டின் நியதிகளின்படி அதன் செயற்பாடுகளின் விரிவாக்கத்தினை பதிவு செய்து நாட்டின் நாட்டு மக்களின் குறைந்த பெறுமதியிலான நிதி மாற்றல் தேவைப்பாடுகளை வழங்கியது.** ஆண்டுக் காலப்பகுதியில், இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைகளினூடாக 17 மில்லியன் நிதி மாற்றல்கள் செயற்படுத்தப்பட்ட வேளையில், இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமைகளூடாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளின் மொத்தத் தொகை ரூ.702.3 மில்லியனாக விளங்கியது.

**தேசிய கொடுப்பனவு முறைமையின் ஒழுங்குமுறைப்படுத்துனர் என்ற முறையில் அதன் பொறுப்புக்களை நிறைவேற்றும் விதத்தில், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளின் உறுதிப்பாடு, பாதுகாப்பு மற்றும் வினைத்திறன் என்பவற்றை மேம்படுத்துவதற்கான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்புக்களை மேலும் ஒழுங்கமைப்பதன் மீது மத்திய வங்கி அதன் கவனத்தைச் செலுத்தியது.** உரிமம் பெற்ற செயற்பாடுகள் மற்றும் மேற்பார்வை நடைமுறைகளுக்குப் பொருத்தமான ஒழுங்குபடுத்தல் ஏற்பாடுகளை அறிவிக்கும் நோக்குடன் கொடுப்பனவு அட்டைகள் மற்றும் செல்லிடக் கொடுப்பனவு முறைகள் போன்றவற்றிற்குப் பொருத்தமாக முன்னைய ஒழுங்குவிதிகளுக்குப் பதிலாக, 2013 யூன் 07ஆம் திகதி, 2013ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க கொடுப்பனவு அட்டைகள் மற்றும் செல்லிடக் கொடுப்பனவு முறைகள் ஒழுங்குவிதிகள் வெளியிட்டன. ஆண்டுக் காலப்பகுதியில், மூன்று நிறுவனங்கள் கொடுப்பனவு அட்டைகளின் பணி வழங்குநராக செயற்பட உரிமம் வழங்கிய வேளையில், தொலைத்தொடர்பு வலையமைப்பு செயற்படுத்துனர் ஒருவருக்கு செல்லிடத் தொலைபேசி அடிப்படையிலான இ-பண முறைமையினை செயற்படுத்த உரிமம் வழங்கப்பட்டது.

**"லங்கா பே" என்ற வர்த்தக அடையாளப் பெயரின் கீழ் 2013இல் லங்கா கிளியர் (பிறைவேட்) லிமிடெட்டினால் தொழிற்படுத்தப்படும் பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி வசதி ஆரம்பிக்கப்பட்டமையானது நாட்டின் இலத்திரனியல் சில்லறைக் கொடுப்பனவுகளின் பரிணாம வளர்ச்சியில் முக்கியமான மைல்கல்லாகக் குறிக்கப்பட்டது.** பொதுவான அட்டை மற்றும் கொடுப்பனவு ஆழி எந்திரத்தின் முதலாவது கட்டமாக, பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி வசதியானது உள்நாட்டு வங்கிகளுக்கிடையிலான பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி நடவடிக்கைகளின் தீர்ப்பனவுக்காக, தன்னியக்கக் கூற்றுப் பொறி அட்டை வைத்திருப்போர்கள் அவர்களது நடவடிக்கைகளையும் தேசிய அளவிலான தளங்களையும் மேற்கொள்வதற்கு தேறிய அளவிலான தன்னியக்கக் கூற்றுப் பொறி வலையமைப்பை வழங்கியதன் மூலம் நாடு முழுவத்திலும் தன்னியக்கக் கூற்றுப் பொறி உட்கட்டமைப்புக்களை வசதிப்படுத்தின. இரண்டு அரச உடமை வர்த்தக வங்கிகளின் பங்குபற்றுதலுடன் 2013 யூலை 23இல் இவ்வாழி ஆரம்பிக்கப்பட்டது. 2013 செத்தெம்பரில், மற்றுமொரு வர்த்தக வங்கி உறுப்புரிமையை பெற்றுக்கொண்டதுடன், இதன் விளைவாக பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி வசதியுடன் இணைக்கப்பட்ட தன்னியக்கக் கூற்றுப் பொறிகளின் மொத்த அளவு 1,000 முனையங்களை விஞ்சி அதிகரித்தது. பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி வசதியனாது, தன்னியக்கக் கூற்றுப் பொறி வசதிகளை வழங்குவதற்காக நிதியியல் நிறுவனங்களுக்கு ஏற்படுகின்ற செலவினைக் குறைக்கும் நோக்குடன் நிதியியல் நிறுவனங்களுக்கு மத்தியிலான தன்னியக்கக் கூற்றுப் பொறி உட்கட்டமைப்புக்களின் பங்கினை மேம்படுத்தியது. இதனது நன்மைகளானவை இறுதியில், தன்னியக்கக் கூற்றுப் பொறி அட்டைகள் வைத்திருப்போரை சென்றடைகின்றது. ஆண்டுக் காலப்பகுதியில், ஆழியின் செயற்பாடுகளுக்குப் பொருத்தமான ஒழுங்குபடுத்தல் ஏற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள் மீதான அறவிடக்கூடிய கட்டணங்கள் போன்றவற்றை நிர்ணயிக்கும் விதத்தில் மத்திய வங்கியானது பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி வசதிகள் தொடர்பான இரண்டு பணிப்புரைகளை வெளியிட்டது.

**மத்திய வங்கியின் ஒப்புதலுடன் மேல் மாகாணத்தில் தொழிற்படுகின்ற தனியார் பேருந்துகளுக்கான ஒரே நோக்க பெறுமதி சேமிக்கப்பட்ட போக்கவரத்து அட்டை மற்றும் கட்டணத் தொகுப்பு என்பன ஆரம்பித்தமையால் 2013இல் இலங்கையின் இலத்திரனியல் கொடுப்பனவு நோக்கிய பணிப்புரைகளில் ஒரு குறிப்பிடத்தக்க நடவடிக்கையாகக் காணப்பட்டது.** இம்முறைமையானது பயணிகளின் வசதித்தன்மையினை மேம்படுத்தும் வேளையில் கட்டண சேகரிப்பின் வினைத்திறனை அதிகரிப்பதால், இம்முறைமையானது பயணிகள் மற்றும் பேருந்து உரிமையாளர்கள் இருவருக்கும் பயனுள்ளதாக இருக்கிறது. மேலும், பெறுமதி சேமிக்கப்பட்ட போக்குவரத்து அட்டை மற்றும் கட்டணத் தொகுப்பு முறைமையானது பொருளாதாரச் செயற்பாடுகளின் ஏனைய பரப்புக்களிலும் இலக்க முறையில் குறைந்த பெறுமதியான சில்லறைக் கொடுப்பனவுகளை தூண்டி ஊக்குவிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**2013ஆம் ஆண்டின் முதல் காலாண்டு இறுதியில், கொடுப்பனவு அட்டை நடவடிக்கைகளின் பாதுகாப்பை மேம்படுத்தும் நோக்குடன் மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட பணிப்புரைகளை கடைப்பிடிப்பதற்காக, கொடுப்பனவு அட்டைகளின் நிதியியல் கொள்வனவாளர்கள் முனையத்தின் வழி குறிமுறையாக்கல் தொழில்நுட்பத்தினைப் பின்பற்றுதலை நிறைவு செய்தனர்.** முனையத்தின் வழி குறைமுறையாக்கல் தொழில்நுட்பமானது, கொடுக்கல்வாங்கலின் போது மோசடிக்காரர்களால் அட்டை உடமையாளர்களின் தகவல் பெறுதல் முயற்சியினை முறியடிப்பதுடன், இது கொடுப்பனவு அட்டை நடவடிக்கைகளுடன் தொடர்புடைய மோசடி இடர்நேர்வுகளையும் குறைக்கின்றது.

## கொடுகடன் தகவல்

**இலங்கைக் கொடுகடன் தகவல் பணியகம் தொடர்ந்தும் கொடுகடன் சந்தைகளில் வசதிப்படுத்தல் வகிபாகத்தினைக் கொண்டிருந்தது.** 2013 ஆண்டுக் காலப்பகுதியில் கொடுகடன் தகவல் பணியகம், நிறுவனம் மற்றும் தனிப்பட்ட கடன்பெறுநர்கள் தொடர்பாக 3,117,316 கொடுகடன் அறிக்கைகளை வழங்கியது. இதனுடன் ஒப்பிடுகையில் கொடுகடன் தகவல் பணியகம் 2012இல் 2,326,504 கொடுகடன் தகவல் அறிக்கைகளை வழங்கியிருந்தது. இதன்படி, 2013இல் வழங்கப்பட்ட கொடுகடன் தகவல் அறிக்கைகள் 34 சதவீதத்தினால் அதிகரித்தது. கொடுகடன் தகவல் பணியகம் மொத்தமாக 93 அறிக்கையிடல் கொடுகடன் நிறுவனங்களைத் தனது உறுப்பினர்களாகக் கொண்டிருந்தது. 2013இல் கொடுகடன் தகவல் பணியகம் நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான கட்டுப்பாட்டுடனான சமூகத்தை உருவாக்கும் நோக்கடன் கடன் பெறுநர் சமூகத்தினரின் மத்தியில் 7,000 சுய-விசாரணை அறிக்கைகளை வழங்கியது. 2013 ஒத்தோபரில் சுய-விசாரணையை வசதிப்படுத்தலுக்காக அறிக்கைகள் நடைமுறைக்கிடப்பட்டன. அத்துடன் ஆண்டுக் காலப்பகுதியில் இவ்வசதிகள் தொடர்பான மக்கள் விழிப்புணர்வுத் திட்டங்களையும் மேற்கொண்டது. இதன் விளைவாக 2013 திசெம்பரில் முடிவடையும் இரண்டு மாதங்களில் இவ்வசதிகளின் 200 பாவனையாளர்கள் பதிவுகளை மேற்கொண்டிருந்தனர். கொடுகடன் தகவல் பணியகம் கொடுகடன் தொடர்பான தகவல்களிற்கான அதிகரித்த கேள்வியினைப் பூர்த்தி செய்வதற்கும் மற்றும் தற்போதைய தகவல் தளத்திற்குப் பெறுமதியினைச் சேர்ப்பதற்குமாக இத்தொழிலிலுள்ள பணி வழங்குநரின் உதவியுடன் தொழில்நுட்ப உட்கட்டமைப்பினை வலுப்படுத்த எண்ணியுள்ளது. அதேநேரம், அதனது 2014 தொடக்கம் 2018 வரையான காலப்பகுதிக்கான கம்பனி அபிவிருத்தித் திட்டம் பணியகத்தின் பணி நியமங்களை மேலும் மேம்படுத்தும்.